வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 9

வெற்றிப் படிக்கட்டில்
நாடோடி மன்னன் - I

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை – 9

வெற்றிப் படிக்கட்டில்
நாடோடி மன்னன் - I

***முனைவர் செ. இராஜேஸ்வரி*, M.A., M.Phil., Ph.D.,**

சந்திரோதயம் பதிப்பகம்


3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை – 9
நூலின் பெயர்	:	**வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I**
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
முன் பின் முகப்பு அட்டை அமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (மார்ச் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	163
விலை	:	200

மனித நேய சேவைக்காக பிரிட்டிஷ் ***இளவரசர் சார்லசின்*** *சிறப்பு அழைப்பை பெற்று அவரோடு விருந்துண்ணும் உயர் தகுதி பெற்ற அண்ணா திமுகவின் முதல் தியாகி எம்.ஜி.ஆரின் உண்மை வாரிசு* ***சைதையார்*** *அவர்களுக்கு வாழ்த்துக்கள்.*



அன்பு காணிக்கை

ஒலிக்கிறது ‘**உரிமைக்குரல்**’

பத்திரிக்கையின் ஆசிரியர் **பி.எஸ்.ராஜு**

அவர்களுக்கு அன்பு காணிக்கை.



நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் முத்தமிழ் விரும்பியின் இரண்டு கவிதை நூல்களை Shade of the Flowering Tree, Songs of Dryness என்ற தலைப்புகளில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம்

கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1987 முதல் எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு. இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து பல ஆண்டுகள் தீவிரமாக பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியபோது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்கு தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்த பாட நூல் அங்கு பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்கு செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளிமாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து

அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலை உருவாக்கியவிதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம் ஜி ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் "எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி" என்ற பெயரில் 16 கட்டுரைகளை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து "பெண்கள் போற்றும் பெருந்தலைவர் எம்.ஜி.ஆர்." என்ற பெயரில் 21 கட்டுரைகளை வெளியிட்டார். "எம்.ஜி.ஆரின் திரைப்படப்பாடல்கள்" என்ற தலைப்பில் புதிய கட்டுரை தொடரை இப்போது

தொடங்கியிருக்கிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். தற்போது எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை:

1. வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்.
2. எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,
3. சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)
4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட
5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்
6. எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி
7. எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப்போராளி
8. ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,

ஒன்பதாவதாக "வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - *I*" என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.

இவர் எழுதிய சிறுகதைகள் 'அமராவதியின் காதல்'என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக்கட்டுரைகள நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்

1. வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன்

எம்.ஜி.ஆரின் முதல் சொந்தப் படமான நாடோடி மன்னன் 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் வெளியானது. இந்தப் படம் எம்.ஜி.ஆருக்கு மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தந்தது. இந்த படத்திற்கு இசை எஸ்.எம்.சுப்பையா நாயுடுவும், வசனம் கண்ணதாசனும் ஆவர். கண்ணதாசனுக்கு உதவியாக ரவீந்திரனும் எழுதி இருந்தார். இயக்கம் எம்.ஜி.ஆர். இந்தப் படம் தமிழகத்தின் பல நகரங்களில் வெள்ளி விழா கொண்டாடியது

சொந்தப்படம் எடுத்தது ஏன்

தன் விருப்பத்திற்கு படம் அமைந்தால் வெற்றி பெறும் என்று நினைத்த எம்.ஜி.ஆர். தன்னுடைய கருத்துக்களை தயாரிப்பாளர்களிடம் சொன்ன போது அவர்களில் சிலர் அவற்றிற்கு செவிமடுத்தனர்; பலர் பல சந்தர்ப்பங்களில் இவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்; இவருடைய கருத்துக்களின்படி படம் எடுத்தால் அதற்கு அதிக செலவாகும் என்று சிலர் கருதினர். வேறு சிலர் எம்.ஜி.ஆருக்கு மட்டுமே படத்தில் முக்கியத்துவம் இருக்கும் என்றும் மற்ற



நடிகர் நடிகைகளுக்கு முக்கியத்துவம் குறைந்து விடும் என்றும் கருதினர். ஆனால் எம்.ஜி.ஆரின் ஆலோசனை படத்தின் வெற்றியை மட்டுமே தன் மனதில் கொண்டதாக இருந்தது. இதை பலர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எனவே தன்னுடைய கருத்தின் உண்மையையும் ஆழத்தையும் மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவர் தன்னுடைய விருப்பப்படி ஒரு சொந்தப் படத்தை எடுத்தார். அந்தப் படம் மாபெரும் வெற்றி அடைந்ததும் அதன் பின்பு இவரை வைத்து படம் எடுப்பவர்கள் இவருடைய சொற்கேட்டு இவருடைய கருத்துகளுக்கு செவி கொடுத்து இவருடைய சிந்தனைகளை மதித்து அதன்படியே படம் எடுத்தனர். அவ்வாறு எடுக்கப்பட்ட படங்கள்

சிறப்பாக ஓடின, பெருவெற்றி பெற்றன. "வசூல் சக்கரவர்த்தி" என்று எம்.ஜி.ஆர். புகழ்பெற்றார்.

வெற்றி விழா

நாடோடிமன்னன் படம் மிக நீண்ட படமாகும். சுமார் மூன்றரை மணி நேரம் ஓடக்கூடிய 22 ரீல்கள் கொண்ட படம். இந்தப் படம் வெளியான போது மதுரை மாநகரில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய திரையரங்கமான தங்கம் திரையரங்கத்தில் 250 நாட்கள் ஓடி வெற்றி வாகை சூடியது. இதனால் நாடோடி மன்னன் படத்துக்கு மதுரையில் பிரம்மாண்டமாக வெற்றி விழா கொண்டாடப்பட்டது அப்போது எம்.ஜி.ஆரை நான்கு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் அமர்த்தி நகர்வலம் அழைத்து வந்தனர். அந்த நகர்வலம் மதுரை தமுக்கம் மைதானத்தில் வந்து நிறைவு பெற்றது. மதுரை தமுக்கம் மைதானத்தில் மதுரை மற்றும் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த ரசிகர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் கூடியிருந்தனர். அங்கு மேடையில் அறிஞர் அண்ணா எம்.ஜி.ஆரை பாராட்டி பேசி எம்.ஜி.ஆருக்கு நூற்றிப் பத்து பவுனில் தங்க வாள் பரிசளித்தார். விழா ஏற்பாடுகளை மதுரை முத்து கவனித்தார். (எம்.ஜி.ஆர் முதல்வர் ஆன பிறகு மதுரைக்கு மாநகராட்சி அந்தஸ்து வழங்கி அதன் முதல் மேயராக மதுரை முத்துவை நியமித்தார்).

நாடோடி மன்னன் படத்தின் மூலக் கதைகளும் மாற்றங்களும்

நாடோடி மன்னனின் கதை If I were a king, The prisoner of Zenda என்ற ஆங்கில கதைகளில் இருந்து எடுக்கப்பட்டது என்றாலும் முழுவதுமாக அந்த

கதைகளை அப்படியே எடுத்துக்கொள்ளவில்லை. *If I were a king* என்ற படம் 1938 இல் வெளிவந்தது. இந்தக் கதையின் தாக்கமும் நாடோடி மன்னனில் உண்டு.

If I were a king கதை

இப்படத்தில் பிரான்சு நாட்டு மன்னன் பதினோராம் லூயி தனக்கு யாரோ ஒருவர் தீங்கிழைக்க காத்திருக்கிறார் என்று உணர்கிறான். அந்தக் கொடியவனைக் கண்டுபிடிக்க இந்த மன்னன் இரவு நேரங்களில் நகர் உலா வருகின்றான். அப்போது ஒரு உணவகத்திற்கு அவன் வந்த சமயத்தில் அங்கு பிரான்சுவா வில்லன் என்பவனை அரசவையின் உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவைத் திருடிவிட்டதாக காவலர்கள் பிடித்து வைத்திருக்கின்றனர். அவன் “நான் மட்டும் மன்னராக இருந்தால் என்னென்ன நன்மைகள் செய்து இந்த நாட்டை எவ்வளவு சிறப்பாக வைத்திருப்பேன்” என்று விளக்குகின்றான். இதைக்கேட்ட லூயி மன்னன் அவனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வருகிறார். அப்போது ஒரு நாள் பிரான்சுவா அந்த கொடியவனின் சதியை முறியடித்து அவனை கொன்று லூயி மன்னனைக் காப்பாற்றி விடுகிறான். கொடியவன் யார் என்பதைத் தெரிந்து கொண்ட லூயி மன்னன் தனக்குத் தீங்கு இழைக்க நினைத்தவனைக் கொன்றதற்காக பிரான்சுவாவுக்கு ஒரு பரிசளிக்க விரும்புகிறார். அந்தப் பரிசு அவனுக்கு ஒரு வார மன்னர் பதவி ஆகும். ஒரு வாரம் அவன் “தன்னுடைய மன்னர் பதவியில் தன்னைப் போலவே மன்னனாக இருந்து கொள்ளலாம்” என்று பரிசளித்த மன்னன் லூயி ஒரு

வாரம் கழித்து அவனைக் கொன்றுவிடவும் திட்டமிடுகிறார்.

மன்னராகப் பதவியேற்ற ஒரு வார காலத்திற்குள் லூயி மன்னன் திருமணம் செய்வதற்காக இருந்த கேத்தரின் என்ற பெண்ணை அந்த இடைக்கால புதிய மன்னன் காதலிக்கத் தொடங்கிவிடுகிறான். அவர்கள் இருவரும் காதலிப்பது அறிந்ததும் லூயி மன்னனுக்கு அதிக கோபம் வருகிறது. லூயி மன்னன் அந்த பிரான்சுவாவைத் தண்டிக்க நினைக்கிறார். அவனை பாரிஸ் நகரத்தை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என முடிவு செய்கிறார். இதை உணர்ந்து கொண்ட அந்த இளைஞன் தானே கால்நடையாக பாரிஸ் நகரத்தை விட்டு வெளியேறுகிறான். அவனைக் காதலித்த அந்த அரச குடும்பத்துப் பெண்ணும் அவனைத்தொடர்ந்து தன் வண்டியில் போகிறாள். இத்துடன் படம் நிறைவு பெறுகிறது. இந்தப் படத்தில் கதையாக்கமும் நாடோடி மன்னன் திரைக்கதைக்கு உதவியது.

If I were a king படத்தில் எம்.ஜி.ஆர். செய்த மாற்றங்கள்

நாடோடி மன்னன் படத்தில் குதிரைக்கு வைத்திருந்த முட்டையை திருடித் திண்பது போல் வரும் காட்சி கதாநாயகனுக்கு கொடுக்கப்படாமல் காமெடியனான சந்திரபாபுவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மன்னர் மாறுவேடத்தில் உணவகத்திற்கு வரும் காட்சி மன்னர் வருவதாக காட்டப்படாமல் நாடோடி வருவதை மன்னர் வந்திருப்பதாக பேபி என்ற உணவகப் பொறுப்பாளரும் மற்ற காவலர்களும் தவறாகப்

புரிந்து கொள்வதாக காட்டப்பட்டுள்ளது. மன்னரும் நாடோடியும் சந்திக்கின்ற காட்சி நாடோடி மன்னன் படத்தில் ஒரு அரண்மனைக்குள் நிகழ்கிறது. அது மிக முக்கியமான காட்சியாக நாட்டு மக்களின் வாழ்க்கையை நாடோடி வீராங்கன், மன்னன் மார்த்தாண்டனுக்கு எடுத்துச் சொல்லும் விளக்கமான காட்சியாக அமைந்துள்ளது. கதையிலும் முக்கியத்துவம் பெறும் காட்சி தொழில்நுட்பத்திலும் இரட்டை வேடங்களில் நடித்திருக்கும் எம்.ஜி.ஆர். ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கி கொள்வதும் ஒருவர் அமர்ந்திருக்க மற்றொருவர் அந்த நாற்காலியை சுற்றி வருவதுமாக மிக நேர்த்தியாக படம் பிடிக்கப்பட்டுள்ளது.

பிரிசனர் ஆஃப் ஜெண்டா படத்தின் கதை

பிரிசனர் ஆஃப் ஜெண்டா [prisoner of zenda] என்ற படம் ஒரு நாவலின் தழுவல் ஆகும். அந்தோணி என்பவர் எழுதிய நாவலைத் தழுவி





இந்தப்படம் *1894*இல் எடுக்கப்பட்டது. இந்தப் படத்தில் ஒரு நாட்டு மன்னன் தான் மகுடம் சூட்ட வேண்டிய நாளுக்கு முந்தைய நாள் மது குடித்து மயங்கி விடுகின்றான். அவனால் மறுநாள் மகுடம் சூட்டிக் கொள்ள முடியாது என்ற சூழ்நிலையில் அந்த நாட்டுக்கு கோடை விடுமுறைக்கு வரும் சுற்றுலாப் பயணியாக [நாடோடி] வந்திருந்த மன்னனை போல தோற்றமளிக்கும் ஓர் இளைஞனைப் பிடித்து அவனை மன்னனாக முடிசூட்டிக் கொள்ளும் படி அரசவை பிரமுகர்கள் இருவர் வற்புறுத்தி ஏற்பாடுகள் செய்கின்றனர். அவ்வாறு மன்னனான அந்த இளைஞன் உண்மையான மன்னரிடம் நாட்டையும் பெண்ணையும் ஒப்படைத்துவிட்டுச் செல்வதாக படம் நிறைவடைகிறது

பிரிசனர் ஆஃப் ஜென்டாவில் இருந்து மாற்றப்பட்டவை

பிரிசனர் ஆஃப் ஜெண்டா படம் மன்னனை சிறையில் அடைப்பதாகக் காட்டுகிறது. சுற்றுலா வந்த இளைஞன் மன்னராக அரண்மனையில்

இருக்கும் பொழுது மன்னருக்கு திருமணம் செய்வதற்காக நிச்சயிக்கப்பட்டிருந்த பெண்ணை காதலிக்கிறான். அவளிடம் தான் உண்மையான மன்னன் அல்ல, தான் ஒரு சுற்றுலா பயணி என்ற தகவலை சொல்ல இயலாமல் தவிக்கின்றான். பிறகு உண்மையான மன்னனை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த மன்னனை அடைத்து வைத்திருக்கும் ஜெண்டா என்ற அரண்மனைச் சிறையில் இருந்து மன்னனை மீட்டுக் கொண்டு வருகின்றான். மன்னன் வந்த பிறகு இந்த காதலர்கள் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

இந்தக் கதையின் சில முக்கிய காட்சிகள் நாடோடி மன்னன் படத்தில் இடம்பெற்றன. அதாவது நாடோடி கன்னித்தீவு சிறையில் அடைக்கப்பட்டிருந்த மன்னனை காப்பாற்றிக் கொண்டு வருகிறான். ஆனால் ***If I were a king*** *மற்றும் பிரிசனர் ஆஃப் ஜெண்டா படங்களின் கதைகளில் மன்னன் திருமணம் செய்து கொள்ளவேண்டிய பெண்ணை மன்னனாக முடிசூடிய புதிய இளைஞன் காதலிப்பதாகக் காட்சிகள் அமைந்துள்ளன. எம்.ஜி.ஆரின் நாடோடி மன்னனில் தமிழ் பண்பாட்டுக்கேற்ப இந்த கதைப் பகுதி மாற்றப்பட்டுள்ளது.*

இன்னொருவருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணை தான் காதலிப்பதும் திருமணம் செய்து கொள்வதும் தகாது என்ற தமிழ்ப் பண்பாட்டை அடியொற்றி எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன் படத்தில் அது போன்ற காட்சிகளை வைக்கவில்லை. ராணி மனோகரி இவரை மன்னன் என்று நினைத்து காதலோடு



நெருங்கும் போதும் மன்னனாக நடிக்கும் வீரங்கன் மனோகரியை தவிர்த்து விடுவான். ஒரு கட்டத்தில் தவிர்க்க இயலாத சூழ்நிலை வரும் பொழுது ராணியிடம் உண்மையை சொல்லி விடுவான்.

இவ்வாறு சில ஆங்கிலப் படங்களின் கதையை தழுவி எம்.ஜி.ஆர். நடித்து இயக்கி தயாரித்த நாடோடி மன்னனின் திரைக்கதை உருவானது. எம்.ஜி.ஆர். பிக்சர்சின் கதை இலாகா எப்போதும் எம்.ஜி.ஆரின் கதைகளை அவரது பிம்பம் சிதைவுறாமல் வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தது. அதன் உழைப்பும் கணிப்பும் முக்கியத்துவமும் எம்.ஜி.ஆரின் திரையுலகம் மற்றும் அரசியல் செல்வாக்குக்கு ஒரு காரணமாகும்.

அந்தக் காலகட்டத்தில் வசூலில் சாதனை படைத்த அதிக திரை அரங்குகளில் வெளியாகி ஊரெங்கும் வெற்றி விழா கொண்டாடி வந்த மதுரை வீரன் படத்துக்கு வசனம் எழுதிய கவிஞர்

கண்ணதாசனை நாடோடி மன்னன் படத்துக்கும் வசனம் எழுதும்படி எம்.ஜி.ஆர். நியமித்தார். அவருக்கு ரவீந்தர் என்பவரும் உதவி செய்தார்.

நாடோடி மன்னனுக்கு வசனம் எழுதியவர்கள்

நாடோடி மன்னன் படத்துக்கு கண்ணதாசன் கதை வசனம் எழுதி இருந்ததாக பெயர் பட்டியலில் இடம் பெற்றாலும் அவருடன் சேர்ந்து ரவீந்தர் என்பவரும் அதில் கதை வசனம் எழுதியிருந்தார். இந்த ரவீந்தர் உண்மையில் நாகூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் காஜா மொய்தீன் என்பதாகும். இவர் நாகூர் நேஷனல் பள்ளிக்கூடத்தில் ஏழாவது வரை படித்த பின்பு லண்டன் மெட்ரிக் பரீட்சை எழுதி தேர்ச்சி பெற்றவர். 1982 இல் எம்.ஜி.ஆர். கையால் கலைமாமணி பட்டமும் சிறப்பு விருதும் பொற்பதக்கமும் பெற்றவர். எம்.ஜி.ஆர்., காஜா மொய்தீன் என்ற பெயரை மாற்றி உங்களுக்குப் பிடித்த ஒரு கவிஞர் பெயர் சொல்லுங்கள் என்று அவரிடம் கேட்டு அவர் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் என்று கூறியதும் சரி அந்தப் பெயரையே நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ரவீந்தர் என்று புதிய பெயர் சூட்டினார். எம்.ஜி.ஆர். மன்றத்தின் நாடகங்களுக்கு ரவீந்தர் கதை வசனம் எழுதி வந்தார். அவர் எழுதிய கதை வசனத்தில் இன்பக்கனவு, அட்வகேட் அமரன் ஆகிய நாடகங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். குலேபகாவலி என்ற படத்துக்கு தஞ்சை ராமையா தாசும், ரவீந்திரனும் கதை வசனம் எழுதினர். ஆனால் அந்தப் படத்தின் பெயர் பட்டியலிலும் ரவீந்தரின் பெயர்

இடம்பெறவில்லை. தஞ்சை ராமையாதாஸ் பெயர் மட்டுமே இடம் பெற்றது.

எம்.ஜி.ஆர். பௌர்ணமியிலா பிறந்தார்?

ரவீந்தர் ‘பொம்மை’ என்ற சினிமா இதழில் எம்.ஜி.ஆர். பற்றி தொடர் கட்டுரைகள் எழுதினார். அவை பின்னர் புத்தகமாக வெளிவந்தன. அந்தப் புத்தகத்தில் எம்.ஜி.ஆர். கண்டியில் பௌர்ணமி நாளன்று புத்தர் பிறந்த நாளன்று பிறந்ததாகவும், அதனால் அவருக்கு சந்திரன் என்று பெயரிட்டதாகவும், அங்கு புத்த பிக்ஷுவை இருந்த ரத்னபாலா என்ற பெண் இந்தக் குழந்தை போவதைப்போல போயா என்றால் புத்தரைப் போல பெரும் புகழ் பெற்று விளங்கும் என்று வாழ்ந்ததாகவும் ஒரு தகவலைப் பதிவு செய்துள்ளார். எம்.ஜி.ஆரின் அண்ணன் சக்கரபாணி அவர்களின் மகன் வழிப் பேரனான எம்.ஜி.ஆர். பிரதீப் அவர்களும் எம்.ஜி.ஆர். பௌர்ணமி அன்று பிறந்திருக்க வாய்ப்பு உண்டு என்றார். மே மாதம் பிறந்தவர் என எம்.ஜி.ஆரின் அம்மா சத்தியபாமா அவர்கள் கூறியுள்ளார். இதை பிரதீப்பின் அம்மா பிரதீப்பிடம் கூறியதாக அவர் என்னிடம் தெரிவித்தார். எம்.ஜி.ஆரின் அம்மா எம்.ஜி.ஆர். பிறந்தது மே மாதம் என்று கூறியது பிரதீப்பின் தாயார் நினைவில் இருப்பதால் வைகாசி பௌர்ணமி அல்லது சித்திரை பௌர்ணமியாக இருக்கலாம். இந்த இரண்டு பவுர்ணமித் திருநாட்களும் ஒரு வருடத்தின் மிகச்சிறந்த பௌர்ணமி திருநாட்கள் ஆகும். சித்ரா பௌர்ணமி என்பது இந்திரனுக்கு விழா எடுத்த நன்னாளாகும் வைகாசி பௌர்ணமி என்பது முருகனுக்குரிய சிறந்த நாளாகும்.

எம்.ஜி.ஆர். அந்த நாளில் பிறந்ததால் சந்திரன் என்று பெயர் சூட்டப்பட்டு பிற்காலத்தில் பெரும் புகழோடு பாரத நாட்டின் ரத்தினமாக விருது பெற்றவர் என்பது மிகவும் பொருத்தமாகத் தெரிகின்றது.

எம்.ஜி.ஆர். கையில் ராஜ ரேகை

நாடோடி மன்னன் படப்பிடிப்பின்போது ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. அப்போது ஒருவர் எம்.ஜி.ஆரின் கையைப் பார்த்து நீங்கள் நல்ல யோகமானவர் என்றார். அந்த வேளையில் அங்கு அருகில் இருந்த பி.பானுமதி அவருக்கு இசை நாட்டியம் அஷ்டாவதானம் ஜோதிடம் போன்றவற்றில் சிறந்த ஞானம் இருந்ததால் எம்.ஜி.ஆரின் கையைப் பார்த்து உங்கள் கையில் ராஜ ரேகை ஓடுகிறது. நீங்கள் இப்போதே ராஜாதானே. திரை உலகில் நீங்கள் மினிமம் கேரன்டி ராமச்சந்திரனாகத் தானே இருக்கிறீர்கள், என்றார். அதாவது எம்.ஜி.ஆர். என்பதை மினிமம் கேரண்டி ராமச்சந்திரன் என்று சொன்னார். எம்.ஜி.ஆர். படம் நஷ்டத்துக்கு ஆளாகாமல் படம் எடுத்தவருக்கு குறைந்தபட்ச லாபத்தை கொடுத்து விடுவது உறுதி என்ற பொருளில் பி.பானுமதி அவ்வாறு கூறினார்.

ஒரு ஜோதிடராக பி.பானுமதி எம்.ஜி.ஆர். ஒரு நாள் தமிழகத்தின் ராஜாவாக அல்லது இன்றையக் காலகட்டத்திற்கு ஏற்ற படி அவர் ஒரு முதலமைச்சராக வருவார் என்று துல்லியமாக சொல்லியிருக்க வேண்டும். காரணம் அவருக்கு அந்த நம்பிக்கை இல்லை. பானுமதி ‘இவர் கையில் ராஜ ரேகை ஓடுகிறது இவர் தன்னுடைய துறையில்

தன்னுடைய தொழிலில் ராஜாவாக இருப்பார்' என்று சுருக்கமாக நினைத்துவிட்டார். எம்.ஜி.ஆர். உடைய கையை பார்த்த அவர் தன்னுடைய ஜோதிட சாஸ்திரத்தில் உண்மையான நம்பிக்கை கொண்டவராக இருந்திருந்தால் நிச்சயமாக அந்த நேரம் நீங்கள் இந்த தமிழ்நாட்டின் முதலமைச்சராக அல்லது இந்த நாட்டின் பிரதமராக ஜனாதிபதியாக வருவீர்கள் என்று சொல்லி இருக்க வேண்டும். ஆனால் அவர் தன்னை பெரிய அறிவாளி என்று நினைத்தாரே தவிர எம்.ஜி.ஆரை பற்றி அவர் சரியாக கணிக்கவில்லை. அவருடைய ஜோதிட அறிவும் அதற்கு ஒத்துழைக்கவில்லை.

பானுமதியும் எம்.ஜி.ஆரும்

எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் படத்திற்கு வெற்றி பெற விழா எடுத்த போது அவருடன் நடித்தவர்கள் எல்லோரும் சேர்ந்து எம்.ஜி.ஆருக்கு ஒரு பெரிய வெள்ளிக் கோப்பை வாங்கி பரிசளித்தனர் அந்தக் கோப்பை வாங்குவதற்காக அதில் நடித்த நடிகர்கள் எல்லோரும் தங்களால் ஆன ஒரு சிறு தொகையை வழங்கினர். அப்போது பானுமதியிடம் வந்து கேட்டதற்கு அவர் சிறிதளவு தொகையை கொடுத்துவிட்டு இதெல்லாம் எதற்கு தேவையில்லாத வேலை என்று முடித்துக் கொண்டார். அவர் இன்னும் அதிக தொகை கொடுத்து இருக்க முடியும் இருந்தாலும் அவர் மிகக் குறைந்த தொகையைக் கொடுத்துவிட்டு கடுப்பாக பதிலளித்து விட்டார். ஆனால் எம்.ஜி.ஆர். முதல்வரானதும் அவரை இயலிசை கல்லூரியின் முதல்வராக்கி அவரது சிறப்புகளை எல்லாம்

மேடையில் விரிவாக எடுத்துரைத்தார். அப்போது பானுமதி சங்கோஜத்துடன் என்னைப் பற்றி எம்.ஜி.ஆர். இவ்வளவு புகழ்ந்து பேசுவார் என நான் எதிர்பார்க்கவில்லை என்றார். பின்பு தனது பேட்டிகளில் எம்.ஜி.ஆரை வானளாவப் புகழ்ந்து பேசினார்.

வெற்றிவிழா கோப்பையில் நெல்மணிகள்

நாடோடி மன்னன் படத்தின் வெற்றி விழா கோப்பை எம்.ஜி.ஆர். நினைவில்லத்தில் இருப்பதைப் பார்க்கலாம். அந்தக் கோப்பை அவரது வீட்டில் இருந்தபோது அவர் அதில் நெல்மணிகளை போட்டு வைத்திருப்பாராம். இதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது ஒரு காலத்தில் எங்கள் வீட்டில் பெரிய நெற்குதிர்களில் நெல் போட்டு வைத்திருப்பதை நான் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். சிறுவயது என்றால் ஒரு மூன்று நான்கு வயதிற்குள் இருக்கும். ஐந்து வயதில் கும்பகோணம் வந்து இரண்டு ஆண்டு தான் அவர் பள்ளிக்கூடத்தில் படித்த பிறகு ஏழு வயதில் அவர் நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டார். எனவே, ஒரு மூன்று நான்கு வயது இருக்கும்பொழுது கண்டியில் அவருடைய நெற்குதிரை பார்த்து இருக்கிறார் அது அவருக்கு ஒரு மென்மையான ஒரு ஞாபகமாக அவருடைய நினைவு செல்களில் படிந்திருந்தது.

எம்.ஜி.ஆர். குடும்பம் கும்பகோணத்திற்கு வந்த பிறகு அவருடைய தாயாருக்கு சரியான வேலை இல்லாமல் பிழைப்புக்கு வழி இல்லாமல் உண்ண உணவிற்கே வழியின்றி அடுத்தவரிடம் கேட்கவும் தன்மானம் இடம் தராமல் பசியும் பட்டினியுமாக

இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு சத்தியபாமா தவித்துக் கொண்டிருந்தார் அப்போது அண்டை வீட்டுப் பெண்மணி ஒருவர் "நான் கொஞ்சம் அரிசி தருகிறேன் பிள்ளைகளுக்கு கஞ்சி காய்ச்சி கொடு" என்று சொன்ன போது கூட அந்த தாய் மறுத்துவிட்டார்.

புற்றரிசிக் கஞ்சி

தன் வீட்டிற்குள் வந்து அந்த மண் சுவரின் ஒரு ஓரத்தில் எறும்பு புற்று இருந்தது அதை மெதுவாகச் சுரண்டி சுரண்டி உள்ளே பார்த்தபோது ஒரு கையளவு அரிசி அந்த எறும்பு சேர்த்து வைத்திருந்த அரிசி கிடைத்தது. அதை தண்ணீரில் கொதிக்க போட்டு காய்ச்சி கஞ்சியாக தன்னுடைய இரு குழந்தைகளுக்கும் ஆளுக்கு ஒரு குவளை கொடுத்தார். இவ்வாறு சோற்றுக்கு வழியில்லாமல் மிகவும் அவதிப்பட்டு சோர்ந்து போயிருந்த அந்த தாயார் தன் பிள்ளைகளை எப்படியாவது உயிரோடு பிழைக்க வைத்து விடவேண்டும், "ஏற்கனவே மூன்று பிள்ளைகளை நோய்க்கு பறிகொடுத்து விட்டேன் இந்த இரண்டு ஆண் மகன்களையாவது காப்பாற்றி விட வேண்டும்", என்ற ஒரே நோக்கத்தில் அவர்களை பாய்ஸ் நாடக கம்பெனியில் சேர்த்து விட்டார். அவர்கள் இருவருக்கும் மட்டுமாவது உயிர் பிழைப்பதற்கான உணவு கிடைக்குமே என்ற ஒரே காரணத்துக்காகத் தான் அந்தத் தாய் அந்த பச்சிளம் குழந்தைகளைப் பிரிந்து வாழ்ந்தார். இதை நினைவில் வைத்துக் கொண்டு எம்.ஜி.ஆர். தன்னுடைய பழைய மூன்று வயது இருக்கும் போது தான் வாழ்ந்த வீட்டில் இருந்த குதிரில் நெல்போட்டு வைத்திருந்த நினைவில் இந்த வெற்றி கோப்பையில்

வெள்ளி கோப்பையில் நெல்மணிகளை நிரப்பி வைத்திருந்தார்.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய படம்

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மூலமாக எம்.ஜி.ஆர். எடுத்த முதல் படமான நாடோடி மன்னன் படத் தொடக்கத்தின் போது தமிழ் தாய் வாழ்த்து பாடல் இடம் பெற்றது.

“செந்தமிழே வணக்கம் நம்

திராவிடர் வாழ்வினைச் சீரோடு விளக்கும்

செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே

இந்த உலகுக்கு நீ தந்ததாலே

செந்தமிழே வணக்கம்”

என்ற பாடல் இடம்பெற்றது. பெயர் காட்டும் போது பின்னணியில் ஒலிக்கப்படும் இந்த பாடல் ரசிகர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

இப்போது வைகோவின் தலைமையிலான மறுமலர்ச்சி திமுக செந்தமிழே வணக்கம் என்ற இந்தப் பாட்டை தன்னுடைய கூட்டங்களில் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடி வருகிறது.

கட்சிக்கொடி ஏந்திய ஒரு ஜோடி

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். அந்தக் கட்சி கொடியை கையில் ஏந்தி இருக்கும் ஒரு ஆணையும் பெண்ணையும் சேர்த்து தன்னுடைய எம்.ஜி.ஆர். பிக்சர்ஸின் ‘லோகோ’வாக

அமைத்திருந்தார். முதன்முறையாக கட்சிக்கொடியை தன்னுடைய படத்தில் தன்னுடைய 'லோகோ'வில் அமைத்தவர் எம்.ஜி.ஆர் ஒருவரே. அப்போது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தது. காங்கிரஸ் கட்சி பணக்காரர்களின் கட்சியாகவும் உயர்ந்த ஜாதிக்காரர்களின் கட்சியாகவும் இருந்தது. திமுகவை எல்லோரும் கடவுள் மறுப்பு கட்சியை சேர்ந்தவர்கள், கருப்புச் சட்டைக்காரர்கள் என்று அலட்சியமாக பேசிவந்தனர். படித்த இளைஞர்கள், படிக்காத பாமரர்கள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர் திமுகவிற்கு ஆதரவாக இருந்தனர். ஏனென்றால் கடவுளை நிந்தித்து பேசுவது பாவம் என்ற காரணத்தால் மூத்தவர்கள் எவரும் திமுகவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை .

சமுதாயத்தில் பாடுபட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், அடக்கப்பட்டவர்கள் மனங்களில் அப்போது திமுக ஒரு பெரிய ஆர்வத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆனாலும் அவர்கள் நான் தி.மு.ககாரன் என்று வெளியே சொல்லிக் கொள்ள தயங்கிக் கொண்டிருந்த காலமது. இச்சூழ்நிலையில் திமுகவுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து கூட இல்லாத ஒரு கால கட்டத்தில் ஒரு சமூக போராட்ட இயக்கமாக சமூக விடுதலை இயக்கமாக சமூக நீதி காத்த இயக்கமாக சமூக நீதிக்காக போராடுகின்ற இயக்கமாக திமுக தன்னை பறை சாற்றி வந்ததால் எம்.ஜி.ஆர். துணிந்து அந்த கட்சியை கட்சிக்கொடியை தன்னுடைய தயாரிப்பு நிறுவனத்தின் [லோகோவில்] சின்னத்தில்

அமைத்தார். இது அவருடைய துணிச்சல் மற்றும் கொள்கைப்பற்று ஆகியவற்றை காட்டுகிறது.

திமுகவின் நிலைமையும் எம்.ஜி.ஆரின் கட்சிப் பற்றும்

எம்.ஜி.ஆருக்கு தான் சார்ந்திருந்த கட்சியை அவர் தனது படங்களில் குறிப்பாகவும், நேரடியாகவும் காட்டியதால் ஆளுங்கட்சி அவருக்கு பல தொல்லைகளைக் கொடுத்தது. திமுக தேர்தலில் வெற்றி பெறும்; ஆட்சி அமைக்கும் என்ற வாய்ப்பில்லாத அக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆர். ஆளுங்கட்சியின் அராஜகத்துக்கு அடி பணியாமல் துணிந்து தன் கொள்கைகளை படங்களில் வெளிப்படுத்தி வந்தார். சாதாரண வார்த்தைகளைக் கூட தணிக்கை குழுவினர் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருந்து கொண்டு அவற்றை மாற்றியாக வேண்டும் என்று எம்.ஜி.ஆர். படங்களுக்கு நெருக்கடி கொடுத்து வந்தனர்.

எம்.ஜி.ஆரும் திமுகவின் வெற்றியும்

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி முன்னேறி வந்த எம்.ஜி.ஆர். எந்தத் தடையையும் தாமதத்தையும் கண்டு அஞ்சவில்லை. அவர் தன்னுடைய கொள்கையில் மிகவும் உறுதியாக இருந்ததனால் திராவிடக் கட்சியின் கருத்துக்களை தன்னுடைய படங்களில் எடுத்துச் செல்வதையும் திராவிடக் கட்சியின் கருப்புச்சட்டையை அணிந்து தன்னுடைய படத்தில் தத்துவப் பாடல்கள் காட்சிகளை அமைப்பதையும் உறுதியாகப் பின்பற்றி வந்தார்.

எம்.ஜி.ஆரை, எம்.ஆர்.ராதா துப்பாக்கியால் சுடாமல் இருந்திருந்தால் 1967 ஆம் ஆண்டில் திமுக வெற்றி பெற வாய்ப்பு குறைவு தான். எம்.ஜி.ஆர். சுடப்பட்டதால் எம்.ஜி.ஆர். ஆதரவு ஒட்டுக்களால் திமுக பெரிய வெற்றி கண்டது. அண்ணாவே "அதற்குள் நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று நினைக்கவில்லை நாங்கள் இன்னும் தயாராகவில்லே" என்றார்.

நாடோடி மன்னனுக்கு உதவிய பெரிய தயாரிப்பாளர்கள்

எம்.ஜி.ஆர். மற்ற தயாரிப்பாளர்கள் ஒரு பெரும் தயாரிப்பாளர்களோடு இணக்கமான உறவு கொண்டிருந்தார். ஏ.வி.எம். கொடுத்த பணம், ஜெமினி வாசன் கொடுத்த கேமரா, நாகிரெட்டியார் கொடுத்த ஸ்டூடியோ ஆகிய இவை மூன்றும் நாடோடி மன்னன் படத்தின் காட்சிகளை சிறப்பாக எடுக்க உதவின. எம்.ஜி.ஆர். அப்போது தயாரிப்பாளர்களுடன் கொண்டிருந்த இணக்கமான உறவு அவர்களிடம் உதவி கேட்டுப் பெற்றது ஆகியவை அவருடைய நட்பு உணர்வை வெளிப்படுத்துகிறது.

தயாரிப்பாளர்களிடையே பரஸ்பர நட்பும் மரியாதையும்

எம்.ஜி.ஆர். திரையுலகை சேர்ந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போகவேண்டும்; நட்பாக இருக்க வேண்டும்; பரஸ்பரம் மதிப்பு மரியாதை காட்ட வேண்டும் என்பதில் உறுதியோடு இருந்தார். இதை அவர் தமது வாழ்நாளில் ஒரு வழிகாட்டி உத்தியாகவே கொண்டிருந்தார். யாரையும் அவர் மரியாதைக்குறைவாக பேசவே மாட்டார். தன்னை விட வயதில் இளையவராக இருக்கும்

பத்திரிகையாளரையும் புகைப்படக்காரரும் அவர் தம்பி என்று அழைத்து மரியாதையாக பேசுவார். இதை குறிப்பிட்டு சொல்ல வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்றால் அவர் காலத்தில் முன்னணி நடிகர்களாக இருந்தவர்களிடம் இந்த நல்ல பழக்கத்தையும் மரியாதையையும் பார்க்க முடியாது. ஆனால், எம்.ஜி.ஆர். சக மனிதர்களிடம் அன்பு செலுத்துவது மட்டுமல்ல மரியாதை செலுத்துவதில் முதல் மனிதராக இருந்தார்.

எம்.ஜி.ஆரின் கடின உழைப்பு

நாடோடி மன்னன் படப்பிடிப்பு வாகினி ஸ்டுடியோவில் தொடங்கியது. ஒரே சமயத்தில் ஏழு படப்பிடிப்புத் தளங்களிலும் செட்கள் பொடப்பட்டு படப்பிடிப்பு நடந்த ஒரே படம் நாடோடி மன்ன் மட்டுமே. வெளிப்புறக் காட்சிகளுக்கான செட்களும் அமைக்கப்பட்டன. காலை ஏழு மணிக்குத் தொடங்கிய படப்பிடிப்பு இரவு இரண்டு மணி வரை தொடரும். மறுநாள் காலை ஆறு மணிக்கு ரீ-ரிகார்டிங் பணி நடைபெறும். எம்.ஜி.ஆர். இரவு பகலாக அங்கேயே இருந்தார். மூன்று படத்துக்கான படப்பிடிப்பை நடத்தி விட்டதால் காட்சிகளைத் தொகுக்க (எடிட்) மிகவும் சிரமப்பட்டனர். ஜம்பு உதவியால் ஐந்து மணி நேரப்படத்தை மூன்றரை மணி நேரமாக சுருக்கினர்.

தங்க வாளின் வரலாறு

எம்.ஜி.ஆருக்கு பரிசளிக்கப்பட்ட தங்க வாள் பின்னர் ஒரு முறை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போர் வந்த போது போர் நல நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது. அப்போது ஆர்.எம்.வீரப்பன் அதை அதிக தொகை

கொடுத்து ஏலத்தில் வாங்கி, ஏலத்தொகையை போர் நல நிதியில் சேர்த்துவிட்டு எம்.ஜி.ஆரிடம் அந்த வாளை சேர்ப்பித்தார். 1986இல் எம்.ஜி.ஆர். தன் தாயின் குலதெய்வமான காளியை வணங்க வேண்டும் என்று சொல்லி இயக்குனர் சங்கர் மூலமாக அவருடைய உதவியுடன் மூகாம்பிகை கோவிலுக்கு சென்று தேவியை வழிபட்டார். அப்போது அவர் அங்கு சங்கரர் தியானம் இருந்த ஒரு தியான அறையில் அமர்ந்து தியானம் இருந்தார். அந்த தியானத்தினால் பெற்ற உணர்வின் காரணமாக அகமகிழ்ந்து தன்னிடமிருந்த நூற்றி ஒரு பவுன் தங்க வாளை மூகாம்பிகை தேவிக்கு காணிக்கையாக கொடுத்து விட்டார். இந்த வாள் வெள்ளிக்கிழமைகளில் அம்மனின் பக்கம் சார்த்தி வைக்கப்பட்டிருப்பதை இன்றும் நாம் காணலாம்.

வெற்றிக்கு யார் காரணம்?

நாடோடி மன்னன் வெற்றிப்படமாக ஓடிய போது அதற்கு பல ஊர்களிலும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. ஒருமுறை நாடோடி மன்னன் வெற்றியை குறித்து இயக்குனர்களும் எம்.ஜி.ஆரின் நண்பர்களும் பேசிக்கொண்டிருந்தபோது எம்.ஜி.ஆர். பாராட்டி பலரும் நாடோடி மன்னன் வெற்றியை அவருடைய திறமைக்கு கிடைத்த பரிசாக பிரமாதப்படுத்தி பேசிக் கொண்டிருந்தனர் அப்போது அவர்

“இந்த திரைப்படத்தின் அபரிமிதமான வெற்றிக்கு நான் ஒருவன் மட்டும் காரணம் என்று கூறினால் அதை விட சுயநலமும் தலைக்கனமும் வேறு ஏதும் இருக்க முடியாது. இந்த திரைப்படத்தின் வெற்றிக்கு அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களும்,

நடிகர்களும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்துள்ளனர். இருந்தாலும் நான் அவர்களில் மூவரை நினைவுகூரவேண்டும் ஒருவர் எஸ் எஸ் வாசன் அடுத்தவர், கே எஸ் என்று அன்போடு அழைக்கப்படும் கே சுப்பிரமணியம், மூன்றாவது தன் நண்பர் விஜயா வாகினி ஸ்டூடியோ அதிபர் ஆன நாகிரெட்டியார் இவர்கள் மூவரும் இல்லையென்றால் நான் அந்த படத்தை எடுத்து இருக்க இயலாது இவர்கள் மூவரும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இந்தப் படம் சிறப்பாக வருவதற்கு உறுதுணையாக நின்றனர்" *என்றார்.*

வாசனின் கேமரா தந்த பலன்

நாடோடி மன்னன் படத்தினுடைய நிறைவு காட்சிகளில் கழுகு குகை இடிந்து விழுந்து தண்ணீர் பிரவாகமாக ஓடுகின்ற அந்த காட்சியை ஹோகெனக்கல், மூனாறு போன்ற இடங்களில் எம்.ஜி.ஆர். படம் எடுத்து இருந்தார். மினியேச்சர் காட்சிகளாக சிலவற்றை ஸ்டூடியோவுக்குள் வைத்து எடுத்தார் எம்.ஜி.ஆர். வெள்ளம் பிரவாகமாக ஓடுவதை வெளியில் எடுத்துவிட்டு இரண்டையும் மிகச் சிறப்பான முறையில் இணைத்திருந்தார். எஸ்.எஸ்.வாசன் அவர்கள் புதிதாக வாங்கிப் பயன்படுத்தாமல் வைத்திருந்து எம்.ஜி.ஆருக்கு முதன்முறையாக பயன்படுத்துவதற்குக் கொடுத்த கேமரா இவ்வாறு படம் எடுக்க எம்.ஜி.ஆருக்கு மிகவும் உதவியது. இதை எம்.ஜி.ஆர். நன்றியோடு நினைவு கூர்கிறார். அவர்தான் புதிதாக வாங்கிய ஒளிப்பதிவு கேமராவை எனக்கு தந்து உதவினார் ***"இந்த ஒளிப்பதிவு கேமரா அவர் வாங்கியதும் முதன் முதலாக நான் பயன்படுத்த அனுப்பி வைத்தார் அவர்களுக்குத்தான் இந்த பெருமை சென்று சேர வேண்டும்"*** *என்றார்.*

நாடோடி மன்னன் திரைப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் கட்டடங்கள் தண்ணீரில் அமிழ்ந்து கயிற்றுப் பாலம் அறுந்து விழுவது எம்.ஜி.ஆர். தண்ணீரோடு அடித்துக் கொண்டு செல்லப்படுவது போன்ற காட்சிகளை மிகச் சிறப்பாக எடுக்க வாசனின் கேமரா உதவியது.

எம்.ஜி.ஆர். - பானுமதி ஜோடியில் விரிசல்

எம்.ஜி.ஆர். பானுமதி ஜோடி அதிர்ஷ்டமான ஜோடி என்று மக்களால் நம்பப்பட்டதால் எம்.ஜி.ஆர். இந்த படத்துக்கு பானுமதியை ஒப்பந்தம் செய்தார். எம்.ஜி.ஆர்., பானுமதி ஜோடி அதற்கு முன்பு மலைக்கள்ளன், அலிபாபாவும் 40 திருடர்களும், மதுரை வீரன், தாய்க்குப்பின் தாரம் ஆகிய படங்களில் இணைந்து நடித்து புகழ் பெற்றிருந்தனர். பானுமதி அதிக குண்டாக மாறிவிட்டாலும் கூட அவர் பானுமதியை தன்னுடைய ஜோடியாக இந்த படத்திற்கும் ஒப்பந்தம் செய்தார்.

எம்.ஜி.ஆர். தன் விருப்பத்திற்காகவே படம் எடுக்க முனைந்ததால் இந்தப் படத்தை பெரும் செலவில் எடுத்து வந்தாலும் சில காட்சிகளை அவர் திரும்பத் திரும்ப தன் மனத்திருப்திக்கு ஏற்றபடி எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது பானுமதி *"மிஸ்டர் ராமச்சந்திரன் உங்களுக்கு டைரக்ஷன் தெரிந்தால் செய்யுங்கள், இல்லை என்றால் ஏன் இப்படி நேரத்தை கடத்துகிறீர்கள்"* என்று கேட்டார். உடனே எம்.ஜி.ஆர். சிரித்தபடியே அவரிடம் *"இது என்னோட படம். நான் என்னுடைய மன திருப்திக்கு எடுக்கிறேன். நீங்க வந்து பொறுமையா இருந்து நடிச்சு கொடுங்க, முடியாதுன்னா உங்களுடைய*

நேரத்தை நான் வீணாக்க விரும்பல நீங்கள் போகலாம்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். பி பானுமதி கோபித்துக் கொண்டு போய்விட்டார். எல்லாம் நன்மைக்கே என்ற கருத்துப்படி படத்துக்கு ஒரு புது நாயகி கிடைத்தார். தமிழ்த் திரையுலகத்துக்கு அபிநய சரஸ்வதி கிடைத்தார்.

பானுமதியிடம் 'விருப்பமில்லையென்றால் நின்று கொள்ளுங்கள்' என்று சொல்லிய எம்.ஜி.ஆர். அவருக்கு பேசிய முழுத்தொகையை அவருடைய வீட்டிற்கு காசோலையாக அனுப்பி விட்டார். தான் அட்டாவதானி என்பதாலும் பாட்டு கதை இயக்கம் ஆகியவற்றில் அனுபவம் இருக்கும் காரணத்தாலும் பானுமதிக்கு ஆணவம் அதிகம். அவர் எம்.ஜி.ஆர். வெறும் நடிகர் தானே அவருக்கு எதற்கு டைரக்ஷன் ஆசை என்று குறைத்து மதிப்பிட்டு விட்டார். ஆனால் எம்.ஜி.ஆருக்கு பானுமதி மீது கோபம் கிடையாது எனவே, செக்கை அனுப்பிவிட்டார். செக்கை பார்த்த பானுமதி மிகவும் கோபமடைந்து அந்த காசோலையுடன் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதி தான் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றும் தன்னை பாதியிலேயே படத்தை விட்டு வெளியே அனுப்பியது தனக்கு மிகவும் கோபத்தையும் வருத்தத்தையும் தருகிறது என்றும் ஒரு கடிதம் எழுதி திருப்பிக் கொடுத்துவிட்டார்.

கன்னித் தீவின் இளவரசியாக புதிய கதாநாயகி

நாடோடி மன்னன் படப்பிடிப்பு இன்னொரு கதாநாயகியை தேட வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டதால் நின்றுவிட்டது. இவ்வேளையில்

கண்ணதாசனின் அண்ணனான ஏ எல் எஸ் எனப்படும் ஏ எல் சீனிவாசன் ஒரு படம் எடுக்க முன் வந்தார். அந்த படம் முதலில் வேறு ஒருவரால் தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டது. நிதி சிக்கலில் சிக்கிக் கொண்டது. அப்போது எம்.ஜி.ஆர். அந்த நண்பரை அழைத்து இந்த படத்தை நீங்கள் இன்னும் நீட்டித்துக் கொண்டே போனால் உங்களுக்கு வட்டி அதிகமாகி விடும். அதனால் எடுத்தவரை இந்த படத்தை ஏ எல் எஸ்சுக்கு விற்றுவிடுங்கள். அவர் உங்களுக்கு நல்ல தொகை கொடுப்பார் அந்தத் தொகையை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு வட்டி தொல்லையிலிருந்து விடுதலை கிடைக்கும் என்றார். அவரும் சம்மதித்து செலவழித்த பணம் கிடைத்தால் போதும் என்று படத்தை விற்றுவிட்டார். அந்தப் படம்தான் பாக்கெட் மார் என்ற ஹிந்திப் படத்தின் தழுவல் ஆன திருடாதே படம்.

ஏ எல் எஸ்சுக்கு பிடிக்கவில்லை

திருடாதே படத்தில் சரோஜாதேவி என்ற ஒரு புதுமுக நடிகையை ஒப்பந்தம் செய்திருந்தனர். ஆரம்பத்திலேயே ஏ எல் எஸ்சுக்கு சரோஜாதேவியின் தமிழ்ப் பேச்சு பிடிக்கவில்லை; அவர் சற்று இடுப்பை அசைத்து ஒரு காலை இழுத்து நடக்கிறார் என்றார். ஆனால் எம்.ஜி.ஆருக்கு சரோஜா தேவியை பிடித்திருந்தது. அவர் புது நடிகை என்பதால் கால்ஷீட் தொல்லை இருக்காது அழைத்த நேரத்தில் நடிக்க வருவார் என்று நம்பினார். எனவே எம்.ஜி.ஆர். முழுமூச்சாக சரோஜாதேவியை ஆதரித்தார். அந்த படத்தில் சரோஜாதேவியை ஒப்பந்தம் செய்தால்

படம் வெற்றி பெறும் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

எம்.ஜி.ஆருக்கு பிடித்தது

எம்.ஜி.ஆர்., ஏ எல் எஸ்ஸிடம் இந்தப் பெண்ணின் முகம் கவர்ச்சியாக இருக்கிறது. நடையிலும் ஒரு அழகு இருக்கிறது. பேச்சு கொச்சையாக இருந்தாலும் அது ஒரு குழந்தை மொழி போல இருக்கிறது, நிச்சயமாக ரசிகர்கள் ரசிப்பார்கள். நான் என் படத்திற்கு இந்த பெண்ணை ‘புக்’ செய்யப் போகிறேன் என்றார். எம்.ஜி.ஆரே தன் படத்திற்கு ஒப்பந்தம் செய்வதாகச் சொன்ன பிறகு அவரால் மறுக்க இயலவில்லை. எனவே திருடாதே படத்தில் ஏ எல் எஸ் சரோஜாதேவியை ஒப்பந்தம் செய்தார்.

பாம்பின் பிடியில் சிக்கி கதறிய சரோஜாதேவி

எம்.ஜி.ஆர் புதுமுகமான சரோஜாதேவியை தன்னுடைய படத்திலும் ஒப்பந்தம் செய்தார். சரோஜாதேவி மிகவும் சிறு பெண்ணாக இருந்தார். அவர் பாம்புடன் நடிக்க வேண்டிய காட்சிகளில் பாம்பினுடைய தலையை இறுக்கி பிடிக்காததால் உண்மையிலேயே பாம்பு அவருடைய உடம்பை இறுக்கிச் சுற்றிக்கொண்டது. அவர் நடிக்கிறார் என்று பலரும் கருதிக் கொண்டிருந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். தான் அவர் முகத்தில் தெரிந்த உண்மையான பயத்தை புரிந்து கொண்டு அந்த பெண் நடிக்கவில்லை; உண்மையிலேயே பயந்து கதறி அழுகிறாள் என்பதைத் தெரிந்து, உடனே அருகில் ஓடினார். எம்.ஜி.ஆர். அருகில் செல்லவும் மற்றவர்களும் அருகில் ஓடி அவரைச் சுற்றி இருந்த

பாம்பை மெதுவாக எடுத்து விட்டனர். சரோஜாதேவி உண்மையிலேயே பயந்து மயங்கிவிட்டார்.

கதாநாயகிகளின் பாதுகாப்பு

கதாநாயகிகள் ஆபத்தான காட்சிகளில் நடிக்கும்போது அந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர். தான் நடிக்காவிட்டாலும் அந்த இடத்திலிருந்து அவர்களுக்கான பாதுகாப்பு பற்றி மிகவும் கவனமாக இருப்பார். இதற்கு இன்னுமொரு சம்பவத்தையும் எடுத்துக் கூறலாம். கண்ணன் என் காதலன் படத்தில் எம்.ஜி.ஆர். இடம்பெறாத ஒரு காட்சி அன்றைக்கு எடுக்கப்பட்டது. அதாவது ஜெயலலிதா சக்கர வண்டியில் உட்கார்ந்து அதை உருட்டிக் கொண்டு வந்தவர் படிகளில் உருண்டு கீழே விழுந்துவிடுவார். இப்படி ஒரு காட்சி அன்றைக்கு எடுக்கப்பட இருந்தது. உடனே எம்.ஜி.ஆர். தான் வீட்டுக்கு போகவில்லை என்றும் அந்த காட்சி எடுக்கப்படுவதைப் பார்த்து விட்டுச் செல்வேன் என்று சொல்லி இருந்து விட்டார்.

சக்கர நாற்காலியை கயிற்றில் கட்டி பின்னால் ஒருவர் இழுத்துப் பிடித்துக் கொள்ள வேண்டும் சக்கர நாற்காலி சாய்ந்தவுடன் ஜெயலலிதா மட்டும் முதலில் உருண்டு வருவதாக அந்த காட்சி எடுக்கப்பட்டது. அதன் பின்பு சக்கர நாற்காலி மெதுவாக உருட்டி விடப்படும். எங்கே ஜெயலலிதா சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு வந்த வேகத்தில் விழுந்து விடுவாரோ என்ற பயத்தில் எம்.ஜி.ஆர். ஒரு முறை தானே அந்த காட்சியில் நடித்து பார்த்தார். சக்கர நாற்காலிக்கு கயிறு கட்டி பின்னால் ஒரு ஆள் அதை பிடித்து கொண்டு

உட்கார்ந்து கொண்டிருப்பார். அப்போது எம்.ஜி.ஆர். அந்த நாற்காலியில் உட்கார்ந்து நாற்காலி விழ வாய்ப்பிருக்கிறதா என்று ஒரு முறைக்கு இரு முறை சரி பார்த்துக் கொண்டார், அதன்பிறகு ஜெயலலிதாவை அந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார். இவ்வாறு தன் சக நடிகர்களின் பாதுகாப்பில் எம்.ஜி.ஆர். மிகவும் கவனமாக இருப்பார்.

தமிழ்நாட்டில் நாடோடி மன்னன் வெளியீடு

நாடோடி மன்னன் படத்தில் சரோஜாதேவி இடம்பெறும் காட்சிகளை கேவா கலரில் எம்.ஜி.ஆர். எடுத்தார். இதனால் நாடோடி மன்னன் பின்பாதிப்படம் கலராகவும் முன்பாதி கருப்பு வெள்ளையாகவும் வெளிவந்தது. இந்த படம் மெட்ராஸில் ஸ்ரீ கிருஷ்ணா பாரகன், உமா ஆகிய தியேட்டர்களில் வெளியானது. மதுரையில் தங்கம் தியேட்டரிலும், கோயம்புத்தூர் ராஜா; திருச்சி ராக்சி, சேலம் நியூ சினிமா; தஞ்சாவூர் யாகப்பா; திருநெல்வேலி பாப்புலர்; ஈரோடு கிருஷ்ணா; திண்டுக்கல் சென்ட்ரல்; வேலூர் தாஜ்; நாகர்கோவில் நியூ சரஸ்வதி; ஆகிய திரையரங்குகளில் ரிலீஸ் ஆனது

வெளிநாடுகளில் பிற மாநிலங்களில் நாடோடி மன்னன் வெளியீடு

1958 ஆம் ஆண்டு தீபாவளியன்று நாடோடி மன்னன் படம் சிங்கப்பூர் நகரங்களில் திரையிடப்பட்டு சிங்கப்பூர் நாட்டில் மிகப்பெரிய வசூலைப் பெற்றது. நாடோடி மன்னன் சிங்கப்பூரில் ராயல் தியேட்டரில் 50 நாட்கள் ஓடிற்று.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் லிடோ, சென்ட்ரல் மற்றும் சென்ட்ரல் தியேட்டர்களில் 50 நாட்கள் ஓடியது. ஈப்போ நகரில் கிராண்ட் தியேட்டரில் 50 நாள் ஓடியது. பினாங்கில் ராயல் தியேட்டரில் 50 நாள் ஓடியது. தைப்பிங்கில் லிடோ மற்றும் ரெக்ஸ் என இரண்டு தியேட்டர்களில் 50 நாட்கள் ஓடிற்று.

ஸ்ரீ லங்கா என்று இப்போது அழைக்கப்படும் இலங்கையில் கிங்ஸ்லி; ராஜா; கிட்டி, சென்ட்ரல், பிளாசா, நவாஸ் ஆகிய ஆறு திரையரங்குகளில் 110 நாட்கள் நாடோடி மன்னன் வெற்றி நடை போட்டது. வேறு பல சிறிய ஊர்களில் உள்ள திரையரங்குகளில் 50 நாட்கள் ஓடியது.

இந்தியாவுக்குள் அண்டை மாநிலமான கேரளாவின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் சித்ரா திரையரங்கில் 77 நாட்கள் ஓடியது.

கர்நாடக மாநிலத்தின் தலைநகரமான பெங்களூருவில் அபேரா மற்றும் சிவாஜி தியேட்டர்களில் 84 நாட்களும், நவ்ரங் தியேட்டரில் ஐம்பத்து ஆறு நாட்களும் நாடோடி மன்னன் சிறப்பாக ஓடியது.

இரண்டு வார வசூல்

நாடோடி மன்னன் படம் வெளியாகி இரண்டு வாரங்கள் பதினைந்து தியேட்டர்களில் சுமார் 10 லட்சத்து 37 ஆயிரம் பேர் இப்படத்தை கண்டுகளித்தனர். அப்போது அந்த இரண்டு வாரங்களில் வசூலான தொகை ரூ.6 ,29 ,679 ஆகும்.



எம்.ஜி.ஆர் இயக்குனராகவும் வெற்றி

நாடோடி மன்னன் படம் எடுக்கும்போது பலரும் எம்.ஜி.ஆரிடம் எதற்கு நீங்கள் சொந்த படம் எடுக்கிறீர்கள், கையில் சேர்த்த காசை இழக்க போகிறீர்களா? அதுவும் நீங்களே படத்தை இயக்குகிறீர்களாமே உங்களுக்கு இயக்கம் பற்றி என்ன தெரியும்? நடிகர் என்றால் நடித்துவிட்டுப் போக வேண்டியதுதானே? என்று பலவாறாகப் பேசி அவருடைய ஊக்கத்தை குறைக்கப் பார்த்தார்கள். தயாரிப்பு காலம் நீடித்துக் கொண்டே போவதை கவனித்த ***தினத்தந்தி நாளிதழ்*** *அவர் எடுப்பது* ***நாடோடி மன்னன் அல்ல கோமாளி மன்னன்*** *என்று கேலி செய்தது. ஆனால் அவர் 1936 இல் இருந்து திரையுலகில் தான் உற்று கவனித்து வந்த பல்வேறு விஷயங்களை நினைவில் இருத்தி அவற்றை இன்னும் மேம்படுத்தி எவ்வாறு படம் எடுத்தால் வெற்றிகரமாக ஓடும் என்பதை மனதிற்குள் சுமார் 20 ஆண்டுகளாக சிந்தித்து சிந்தித்து அவர் மனதில்*

வெற்றி படம் எடுப்பதற்கான உத்தி முறைகள் மிக ஆழமாகப் பதித்திருந்தார். அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் ஒரு படத்தில் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அவர் தான் அதுவரை சம்பாதித்த பணம் முழுவதையும் முதலீடாகப் போட்டு அதுபோக மிக அதிகத் தொகையைக் கடனாகப் பெற்று ஒரு படத்திற்கு மூன்று படம் எடுக்கும் வகையில் செலவு செய்து நாடோடி மன்னன் படத்தை வெற்றிப் படமாக எடுத்தார்.

நாடோடி மகன் ஏன் வரவில்லை?

நாடோடிமன்னன் படத்துக்கு நிறைய காட்சிகள் எடுக்கப்பட்டு படத்தில் சேர்க்கப்படாமல் வெட்டப்பட்டு அவை ஒரு பக்கம் குவியலாகக் கிடந்தன. எம்.ஜி.ஆர். அந்த வெட்டப்பட்ட காட்சிகளைக் கொண்டு ஒரு சில காட்சிகளை மட்டும் புதிதாக நடித்து இணைத்து நாடோடியின் மகன் என்று ஒரு படம் எடுக்கலாம் என நினைத்து விளம்பரமும் வெளியிட்டார். ஆனால் நாடக மேடையில் குண்டு கருப்பையா இவர் மேலே விழுந்ததால் அவருடைய காலில் எலும்பு முறிந்துவிட்டது. அந்தக் காலை சரி செய்ய ஆறு மாத காலம் ஆயிற்று. அதற்குள் அவரை ***விலாசம் இல்லாதவர்*** *என்று பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன. வெற்றியும் ஆபத்தும் அவர் வாழ்வில் மாறி மாறி வந்தது அதை அவர் துணிவுடனும் பொறுமையுடனும் ஏற்றுக்கொண்டு சமாளித்து வந்தார். அவரால் தொடர்ந்து நாடோடி மகன் படத்தை எடுக்க இயலவில்லை. அதன்பிறகு அவர் கால் சரியாகி வந்து வேறு படங்களில் நடிக்க தொடங்கிவிட்டார்.*

கடன் வாங்கி பிலிம் வாங்கிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன் படம் எடுத்தபோது பாசிட்டிவ் பிலிமின் விலை நியாயமாக எழுபத்தைந்து ரூபாய் மட்டுமே ஆகும். ஆனால் அதில் சுருள்கள் இவருக்கு தேவைப்பட்டதால் விதிக்கப்பட்ட அளவுக்கு இவர் வாங்கி விட்டார். இன்னும் கூடுதலான ஃபிலிம் தேவைப்பட்டதால் இவர் வெளிமார்க்கெட்டில் பில்முக்கு 500 ரூபாய் விலை கொடுத்து வாங்க வேண்டி இருந்தது. அதிக விலை கொடுத்தாவது அவர் அந்த பிலிம்களை வாங்கி படம் எடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இவ்வாறு 500 ரூபாய் கொடுத்து வாங்குவதற்குத் தேவையானதை வெளிமார்க்கெட்டில் 50,000 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருந்தது. அவரிடம் அப்போது 50 ஆயிரம் ரூபாய் இல்லை யாரிடம் கடன் கேட்பது என்று ஆலோசித்தார். கெயிட்டி திரையரங்கில் உரிமையாளர் அந்த திரையரங்கை நடத்தி வந்த ராமச்சந்திரா என்பவரிடம் பேசி அவர் மூலமாக ஏவி எம் நிறுவனத்தில் மெய்யப்ப செட்டியார் அவர்களிடம் கடன் வாங்கலாம் என்று எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிர்வாகி வீரப்பன் எம்.ஜி.ஆரிடம் தெரிவித்து அதற்கான முயற்சியில் இறங்கினார்.

கடன் பத்திரத்தில் எம்.ஜி.ஆர். கையெழுத்து வேண்டும்

ஏவிஎம் நிறுவனம் என் கே சீனிவாசன் என்பவரின் ஒப்புதலோடுதான் கொடுக்கல்-வாங்கல் தொழிலையும் செய்து வந்தது. அவர்கள் எம்.ஜி.ஆருக்கு கடன் கொடுப்பது என்றால் எம்.ஜி.ஆர். கையெழுத்து போட்டால் தான் கொடுப்போம் என்று உறுதியாகச் சொல்லி

விட்டனர். ‘‘எம்.ஜி.ஆரின் கணக்கு பிள்ளை அல்லது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் என்ற இந்த புதிய திரைப்பட நிறுவனத்தின் நிர்வாகியாக இருக்கிற நான் கையெழுத்து போடுகிறேன். என்னிடம் பணத்தை கொடுங்கள் நான் கண்ணியமாக திருப்பி தந்துவிடுவேன்’’ என்றார் ஆர் எம் வீரப்பன். ஆனால் சீனிவாசன் எம்.ஜி.ஆர். கையெழுத்து இருந்தால் மட்டுமே ஏ வி எம்மிடம் இருந்து பணம் பெற்றுத் தர முடியும் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

வீரப்பன் தீர ஆலோசித்து திரும்பவும் அவரிடம் போய் ‘நாங்கள் நாடோடி மன்னன் திரைப்படத்தை இலங்கையில் வெளியிட சினிமாஸ் லிமிட்டட் என்ற கம்பெனிக்கு அனுமதி கொடுத்து ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர்கள் எங்களுக்கு தருகின்ற தொகையை நாங்கள் உங்களிடம் வாங்கும் கடனுக்கு அடமானமாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஒப்பந்தத்தின் மூலப்பிரதியை உங்களிடம் கொடுத்து விடுகிறோம். நானும் எம்.ஜி.ஆரின் அண்ணன் சக்கரபாணியும் கையெழுத்து போடுகிறோம். நீங்கள் எங்களுக்கு கடன் கொடுங்கள்’’ என்றார். சரி என்று அவர்களும் ஒத்துக் கொண்டு அந்த மூலப் பிரதியை பெற்றுக் கொண்டனர். அந்த மூலப்பிரதியில் எம்.ஜி.ஆர். கையெழுத்து போட்டு இருந்ததை அவர்கள் பார்த்து விட்டனர். உடனே எங்களிடம் மட்டும் கடன் வாங்க எம்.ஜி.ஆர். கையெழுத்து போட மறுக்கின்றாரா?. இந்த ஒப்பந்தத்தில் மட்டும் எம்.ஜி.ஆர். கையெழுத்துப் போட்டு இருக்கின்றாரே. அப்படி என்றால் எங்களிடமும் எம்.ஜி.ஆர். கையெழுத்து போடலாமே. போய் அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று சொல்லிவிட்டார். வீரப்பனுக்கும்

சக்கரபாணிக்கும் தர்மசங்கடமாக போய்விட்டது, திரும்பி வந்துவிட்டனர்.

எம்.ஜி.ஆர். எந்தப் பொறுப்பிலும் இல்லை

வீரப்பனும் சக்கரபாணியும் மீண்டும் மீண்டும் ஆலோசனை செய்தனர். அப்போது ஆர் எம் வீரப்பன் மனதில் ஒரு கருத்து உதித்தது அதை சொல்லி பார்க்கலாம் என்று திரும்பவும் ஏ வி எம் அலுவலகத்துக்கு சென்றார். "இலங்கை சினிமாஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டபோது எம்.ஜி.ஆர். படக்கம்பெனியின் பெயர் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் என்று இருந்தது, இப்போது அதை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் பிரைவேட் லிமிட்டேட் என்று மாற்றி விட்டோம். இதனுடைய நிர்வாக இயக்குனராக நான் தான் இருக்கிறேன். எனவே நானும் இன்னொரு இயக்குனருமான சக்கரபாணியும் கையெழுத்துப் போட்டால் தான் செல்லுபடியாகும். இதில் எம்.ஜி.ஆர். இல்லவே இல்லை எனவே எம்.ஜி.ஆரிடம் கையெழுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார். இனி எம் கே சீனிவாசனுக்கு வேறு வழியே இல்லை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் பிரைவேட் லிமிட்டேட் நிர்வாக இயக்குனரான ஆர்.எம். வீரப்பனிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் எடுத்த நாடோடி மன்னன் படத்திற்கு பிலிம் வாங்குவதற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் கடனாக கொடுத்தார். கொடுக்கல் வாங்கலில் மிகவும் கவனத்தோடு இருப்பது எம்.ஜி.ஆர். உடைய தனிப்பெரும் குணமாகும்.

2. ‘நாடோடி மன்னன்’ படம் - சில விவரங்கள்

நாடோடி மன்னன் 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி தமிழகமெங்கும் முக்கிய நகரங்களில் திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. இப்படத்தை எம்.ஜி.ஆர். இயக்கி, இரட்டை வேடம் ஏற்று புரட்சிவீரன் வீராங்கன் மற்றும் மன்னன் மார்த்தாண்டன் என்ற வேடங்களில் நடித்திருந்தார். மன்னன் மார்த்தாண்டனுக்கு ஜோடியாக எம்.என்.ராஜமும் வீராங்கனைக்கு ஜோடியாக முதல் பகுதியில் பானுமதியும் இடைவேளைக்குப் பின்பு இரண்டாம் பகுதியில் சரோஜாதேவியும் நடித்திருந்தனர். இப்படத்தில் குருநாதர் வேடமேற்று வில்லனாக நடித்தவர் பி.எஸ்.வீரப்பா. நம்பியார் பிங்கலன் என்ற ஒரு சிறு வேடத்தில் நடித்திருந்தார். பாவம், ‘பிங்கலன் ஒரு அப்பாவி’ என்று ஒரு வசனம் இவரைக் குறிக்கும் வகையில் படத்தில் இடம் பெற்றிருக்கும்.

எம்.ஜி.ஆரின் அண்ணன் சக்கரபாணி கார்மேகம் என்ற கதாபாத்திரம் ஏற்று வழுக்கைத் தலையுடன் நைத்திருந்தார். அவர் அடிக்கடி தனது வழுக்கைத் தலையை தடவிக் கொண்டு வசனம் பேசுவதாக ஒரு மேனரிசத்தை பின்பற்றி இருந்தார்.

சந்திரபாபு ஆபத்சகாயம் என்ற பெயரில் நகைச்சுவை கதாபாத்திரமேற்று இருந்தார். அவருக்கு முதல் பாதியில் ஜி.சகுந்தலாவும் பிற்பாதியில் முத்துலட்சுமியும் ஜோடியாக நடித்திருந்தனர்.

நாடோடி மன்னன் படத்தின் இசை அமைப்பாளர் எஸ்.எம்.சுப்பையா நாயுடு



ஆவார். இனம் மதம் ஜாதி ஆகியவற்றை தங்கள் பெயர்களில் சேர்க்கக் கூடாது என்ற கொள்கை உடைய எம்.ஜி.ஆர். தன்னுடைய சொந்தப் படமான நாடோடி மன்னனில் அதைத் தீவிரமாக பின்பற்றினார். சுப்பையா நாயுடுவின் பெயர் வெறும் சுப்பையா என்று பெயர் பட்டியலில் சேர்த்தார். வசனத்தை கவிஞர் கண்ணதாசன் எழுதி இருந்தார், ரவீந்திரனும் வசனங்களை எழுதி இருந்தார். நாடோடி மன்னன் படத்தில் ஒன்பது இனிமையான பாடல்கள் இடம் பெற்றிருந்தன.

திராவிடத்தாயை வணங்குவோம்

தமிழ்த் தாய் வணக்கப் பாடலாக "செந்தமிழே வணக்கம் திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும் செந்தமிழே வணக்கம்" என்ற பாடல் இடம்பெற்றது. 'வருக வருக வேந்தே' என்ற பாடலில் கன்னடம் தெலுங்கு மலையாளம் ஆகிய மொழிகளிலும் வாழ்த்து பாடல்கள் இடம்பெற்றிருந்தன. திராவிட இனம் என்பது இந்த நான்கு மொழி பேசும் இடமாகவும் கருதப்பட்டதால் நான்கு மொழிகளிலும் பாடல்கள் இடம் பெற்றிருந்தன. கன்னட மொழியில் விஜய் நரசிம்மன் என்பவரும், தெலுங்கில் நாராயண பாபுவும், மலையாளத்தில் பாஸ்கரனும் பாடல்களை இயற்றி இருந்தனர்.

பாடல்கள்

"செந்தமிழே வணக்கம்", 'வருக வருக வேந்தே'' "தூங்காதே தம்பி தூங்காதே", "தடுக்காதே என்னை தடுக்காதே", "காடு வெளஞ்சென்ன மச்சான்", "பாடுபட்டால் தன்னாலே", "மானை தேடி மச்சான் வர போறான்", "கண்ணில் வந்து மின்னல்

போல் காணுதே", "கண்ணோடு கண் கலந்து" எனத் தொடங்கும் ஒன்பது பாடல்கள் இப்படத்தில் இடம் பெற்றிருந்தன. இப்பாடல்களை லட்சுமணதாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சுரதா ஆத்மநாதன், முத்துக்கூத்தன் போன்றோர் இயற்றியிருந்தனர். இப்பாடல்களை டி.எம்.சௌந்தரராஜன், பி பானுமதி, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, சந்திரபாபு, டிவி இரத்தினம், ஜமுனாராணி, என்.எல்.கனக சரஸ்வதி, வைதேகி பி நாயர் ஆகியோர் பாடியிருந்தனர்.

நடனங்கள்

நாடோடி மன்னன் படத்தில் நடன காட்சிகளை அமைத்து தந்தவர் தங்கராஜ் மாதவன் மற்றும் கிருஷ்ணராஜ் ஆகியோர். 'தடுக்காதே என்னை தடுக்காதே' பாடலுக்கு சந்திரபாபுவும் ஜீ சகுந்தலாவும் ஆடினர். 'பாடுபட்டால் தன்னாலே பலன் இருக்குது கையிலே' என்ற பாட்டுக்கு ஜெமினி சந்திரா ஆடியிருந்தார். 'மானை தேடி மச்சான் வர போறான்' பாட்டு குழு நடனம் ஆகும். 'கண்ணோடு கண் கலந்தாச்சு, காணாத இன்பம் கண்டாச்சு ' என்ற பாட்டும் மிக அதிகமான ஆட்களை கொண்டு பெரிய அளவில் எடுக்கப்பட்ட குழு நடனம் ஆகும்.

சண்டைக் காட்சிகள்

நாடோடி மன்னன் படத்தின் வேடிக்கை சண்டை முதல் கொண்டு விபரீதமான சண்டைக்காட்சிகள் வரை பல சண்டை காட்சிகள் இடம்பெற்றன. அவற்றை ஸ்டன்ட் மாஸ்டர் நம்பியார் இயக்கியிருந்தார். மேலும்



சண்டைக் காட்சிகளை வடிவமைப்பதில் எம்.ஜி.ஆருக்கு நிகர் எம்.ஜி.ஆர். என்று பாராட்டும் அளவுக்கு இப்படத்தில் புதுவிதமான சண்டை காட்சிகள் இடம்பெற்றன. படத்தின் கடைசி காட்சியில் உச்சகட்டத்தில் கயிற்றில் தொங்கியபடி நடைபெறும் சண்டை காட்சி ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்த காட்சியாகும். அங்கமுத்துவின் உணவகத்தில்

நடைபெறும் சண்டை காட்சி வேடிக்கையான சண்டை காட்சி ஆகும்.

ஒப்பனை

நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஒப்பனை செய்தவர் இராம்தாஸ். இவர் எம்.ஜி.ஆருடன் நாடகங்களில் மேனகை ஊர்வசி ஜோடி நடனம் ஆடியவர். எம்.ஜி.ஆருக்கு என்று பிரத்தியேக ஒப்பனையாளராக நியமிக்கப்பட்ட முதல் நபர் ராம்தாஸ். இவருக்குப் பிறகு இயக்குனர் பி வாசுவின் தந்தையான பீதாம்பரம் இருந்தார். என் ஆர் நாகராஜ் ராவ் என்பவர் ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பு முடிந்ததும் காலையிலும் மாலையிலும் ஸ்டில் போட்டோ எடுப்பார். அதை உடனே கழுவிக்கொண்டு வந்து எம்.ஜி.ஆருக்கு காட்டுவார். எம்.ஜி.ஆர். போட்டோக்களை பார்த்து ஒப்பனை நடிப்பு ஆகியவை சரியாக இருக்கிறதா என்று அன்றைக்கே சரி பார்த்துக் கொள்வார்.

வண்ணப்படக் காட்சிகள்

இடைவேளைக்குப் பிறபகுதியில் அமைந்த காட்சிகளை மும்பையில் உள்ள கலர் லாபரட்டரியில் பிராசஸ் செய்து கொண்டு வந்தனர். தயாரிப்பு நிர்வாகத்தை எஸ்.கோவிந்தராஜன், கே.என்.குஞ்சப்பன், பத்மநாபன் ஆகியோர் கவனித்துக் கொண்டனர். படத்தின் ஒளிப்பதிவாளராக ஜி கே ராமு பணியாற்றினார். தயாரிப்பு மேற்பார்வை என்ற பெயரில் எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியும் பெயர் இடம் பெற்றிருந்தது.



எம்.ஜி. ஆருடன் தயாரிப்பு நிர்வாகி ராமதாஸ், மேக்-அப் மேன் ராமதாஸ் (வலதுபுறம்).

எம்.ஜி.ஆர். தன் அண்ணன் எம் ஜி சக்கரபாணியிடம் ஏராளமான பணத்தை வாங்கி வாங்கி படப்பிடிப்பில் தன் விருப்பம் போல பல காட்சிகளை எடுத்துக் கொண்டிருந்தார். திடீரென அவருக்கு ஒரு கயிற்றுப் பாலம் கட்டி

அதில் சண்டைக்காட்சியை எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று தோன்றியது, அதற்காக ஒரு லாரி கயிறு வாங்க வேண்டும் என்று சொல்லி தன் அண்ணனிடம் பணம் வாங்கி வரச் சொல்லி ஆட்களை அனுப்பி இருந்தார். அவர்கள் போய் எம்.ஜி.ஆர். சொல்லியதை சக்கரபாணியிடம் சொல்லியதும் அவருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. ஏன் எல்லோரும் தூக்கு போட்டு தொங்க போகிறீர்களா? என்று கோபமாக கேட்டாராம். அவருடைய கோபத்துக்கு காரணம் தயாரிப்புச் செலவு அதிகமாகிக் கொண்டே போனது தான் என்று உணர்ந்து கொண்ட எம்.ஜி.ஆர். பிறகு அண்ணனைப் பார்த்து சமாதானம் செய்து பணத்தை வாங்கி விட்டார். அந்த கயிற்றுப்பாலமும் அதில் நடந்த சண்டைக் காட்சிகளும் ரசிகர்களை மிகும் கவர்ந்தது. படம் வெளிநாட்டுத் தரத்துக்கு இருப்பதாகக் பத்திரிகைகள் பாராட்டின. .

கன்னித்தீவு

நாடோடி மன்னன் படத்தில் இடம் பெற்ற கன்னித்தீவு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. நாடோடி மன்னன் வந்த பிறகு தினத்தந்தி ஒரு படக்கதை வெளியிட்டது. அதற்கு அதன் அதிபர் சி.பா.ஆதித்தனார் நாடோடி மன்னன் படத்தில் இடம் பெற்ற கன்னித் தீவு என்ற பெயரைச் சூட்டினார். 1958இல் தொடங்கப்பட்ட கன்னித் தீவு கதையின் நாயகன் சிந்துபாத். நாயகி லைலா. இன்னும் இவர்கள் கதை முடியவில்லை. படக்கதை தொடர்கிறது.

3. நாடோடி மன்னன் – நிழல் நிஜமானது

நாடோடி மன்னன் படம் எம்.ஜி.ஆரை ஏழை மக்களுக்கு ஒரு அவதார புருஷன் ஆகவும் அதர்மத்தால் கட்டுண்டு கிடந்த ஒடுக்கப்பட்ட இனத்தவருக்கு தர்மத்தின் காவலனாகவும் காட்டியது. எம்.ஜி.ஆரின் இத்திரைப்படம் நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை ஏழை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது, அவர் மன்னர் வம்சத்தில் பிறந்தவராக இருந்தாலும் மக்களோடு மக்களாக போராடும் ஏழை நாடோடியாக இருந்தாலும் அவர் கொண்டுவந்த சட்டங்கள் படத்தில் மட்டுமல்ல நிஜத்திலும் உண்மையாகிவிட்டன. அவர் 1977இல் முதலமைச்சராகி கவர்னர் முன்னிலையில் பதவி ஏற்ற பின்பு சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு முன் போடப்பட்டிருந்த மேடையில் ஏறி மக்கள் முன்னிலையில் ஒருமுறை பதவியேற்றார். இக்காட்சி நாடோடி மன்னனில் அவர் முடி சூட்டிய பின்பு மக்களிடம் சீர்திருத்தங்களை அறிவிக்கும் காட்சியை ஒத்திருந்தது.

எம்.ஜி.ஆர். மக்கள் முன்னிலையில் தன்னுடைய அண்ணா திமுக கட்சி பதவிக்கு வந்து செய்யவிருக்கும் நன்மைகளை எடுத்துரைத்தார். ஆட்சியாளர் நா நயம் மிக்கவராக மட்டும் இருந்தால் போதாது நாணயம் மிக்கவராகவும் இருக்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்களை எடுத்துரைத்தார். இதுவும் நாடோடி மன்னன் காட்சியை மக்களுக்கு நினைவு ஊட்டியது. படத்தில் அவர் நடித்தது இருபதாண்டுகளில் நிஜமாகிவிட்டது. நாடோடி மன்னன் படத்தில் அவர் பதவி ஏற்றவுடன் பேசும் வசனமும் அண்ணா சிலை அருகில் மேடையில் நின்று அவர் பேசியதும் ஏறத்தாழ ஒன்றாகவே இருந்தது. அப்போது மக்கள் மனதில் நாடோடி மன்னன் படத்தில் அவர் மன்னன் ஆனதும் கொண்டுவரும் சீர்திருத்தங்களும் சட்ட திருத்தங்களும் அவர்கள் மனக்கண்ணில் வந்து போயின.

விழிப்புணர்ச்சியை மட்டும் ஏற்படுத்திய திமுகவினர்

அறிஞர் அண்ணாவால் ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞர் கருணாநிதியின் கதை வசனத்தில் சமூக அவலங்களை சாடி நிமிர்ந்தபோது அவர்கள் இருவரின் பேச்சுக்களும் சமூகத்தில் இருந்த குற்றங்குறைகளை விரிவாக எடுத்துச் சொல்லி அதற்கு காரணமான உயர் ஜாதிக்காரர்களின் ஒடுக்குமுறையை பற்றி மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. ஆனால் அவற்றால் பெரிய மாற்றத்தைக் கொண்டுவர இயலவில்லை. ஏனென்றால் இருக்கும் நிலவரத்தை தான் அவர்கள் எடுத்துக் கூறினர்.

“கஞ்சி குடிப்பதற்கிலார் அதன்

காரணம் என்னவென்ற அறிவுமிலார் ”

என்று பாரதியார் பாடியது போல குடிக்க கஞ்சியும் இல்லை அதற்கு காரணம் என்னவென்றும் தெரியவில்லை என்ற நிலையில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதன் காரணம் என்ன என்பதை மட்டும் அண்ணாவும், கலைஞரும் மற்ற திராவிட இயக்க பேச்சாளர்களும் மேடைகளில் எடுத்துக் கூறினர். இருக்கும் நிலைமையை தான் அவர்கள் விவரித்தனரே தவிர அதற்கு மேல் அவர்களால் அப்போதைக்குப் பெரிதாக செய்வதற்கு எதுவுமில்லை.

வெறுப்பும் சலிப்பும் விடியலை காட்டுமா?

திமுகவினர் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி உயர்ஜாதிக்காரர்களின் மீது அல்லது பரம்பரை பணக்காரர்களின் மீது ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்தினர். அந்த நிலையிலும் மக்களுக்கு அவர்களை எதிர்த்துப் போராட சக்தி இல்லை. அதுவரை தன் விதிப்பயன் என்றும் தலையெழுத்து என்றும் புலம்பிக் கொண்டிருந்த மக்கள் காரணத்தைத் தெரிந்து கொண்ட பிறகு இன்னும் மனம் வெதும்பி சலித்துக் கொண்டு தான் இருந்தனர். அவர்கள் வாழ்வில் விடிவெள்ளி தோன்றவில்லை. சாதி மத அடிப்படையிலான பொருளாதாரச் சுரண்டலை உணர்ந்து கொண்டனர்.

நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றிய எம்.ஜி.ஆர்.

காங்கிரஸ் ஆட்சியில் திராவிட கட்சியினர் பிரச்சாரம் வலுவாக செய்து வந்த போதும் மக்களுக்கு தங்களுடைய பிரச்சினைகள் எல்லாம்

முடியும்; புதுவாழ்வு பிறக்கும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. இந்த நிலையில் எம்.ஜி.ஆரின் படங்கள் தான் அவர்களுக்கு ஒரு ஒளிக் கீற்றாக சிறு நம்பிக்கை ஊட்டின. உலகில் அக்கிரமங்கள் தோன்றும்போது நான் அவதாரம் எடுப்பேன் என்று சொல்லிய கிருஷ்ண பரமாத்மா போல எம்.ஜி.ஆரை அவதார புருஷராக மக்கள் கருதினர். தங்கள் கஷ்டங்களை தீர்க்க வந்திருக்கும் ஆபத் பாந்தவனாக, அநாதை ரட்சகனாக மதித்தனர். அவரும் அக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் அவர்களுக்கு எம்.ஜி.ஆர். ஆபத்துக் காலங்களில் அதிகளவில் உதவினார்.

துன்பத்தில் தோள் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

எங்கு தீ விபத்து நடந்தாலும் வெள்ளம் வந்து சேதம் ஏற்பட்டாலும் யுத்தம் நடந்தாலும் முதல் உதவிக்கரம் நீட்டுபவர் எம்.ஜி.ஆராகத் தான் இருப்பார். இதனால் படத்திலும் நிஜத்திலும் அவரது வாழ்வும் வழியும் ஒன்று போலவே இருந்தன. மக்கள் அவரை தன் துன்பங்களை தீர்க்க வந்த தெய்வமாகப் பார்த்தனர், அவரால் புது வாழ்வு பிறக்கும் என்று நம்பினர். இவ்வாறு தனியொரு **மனிதனாக நம்பிக்கை அளித்தது தான் திராவிட இயக்கத்தவர் மத்தியில் எம்.ஜி.ஆர். பெற்ற தனித்துவமாகும்.** தமிழ் நாட்டில் மட்டுமல்ல கர்நாடக மாநிலத்திலும் அயல் நாடுகளிலும் கூட எம்.ஜி.ஆர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியிருக்கிறார். திராவிடக் கட்சியினர் சமுதாயத்தில் புரையோடி போயிருந்த சாதிப் புண்ணை கீறி கதற விட்டனர். ஆனால் எம்.ஜி.ஆர். அப்புண்ணுக்கு மருந்து போட்டார். அவரது

படங்கள் மன நோய்க்கு மருந்தாகவும் உடல் நோய்க்கு விருந்தாகவும் அமைந்தன. கனிவான காட்சிகள் கண்ணுக்கு விருந்து இனிமையான பாடல்கள் செவிக்கு விருந்து.

துருவ நட்சத்திரமாக வழிகாட்டியவர் எம்.ஜி.ஆர்.

நாடோடி மன்னன் படத்தில் வரும் முதல் காட்சியில் புரட்சிக்காரனான வீராங்கன் அக்காலத்தில் 'வேலை கொடு உணவு கொடு' என வேலையின்றி உணவின்றி போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலையில் இருந்த இளைஞர்களுக்கு சிறந்த முன் மாதிரியாகத் திகழ்ந்தார். அவர்களுக்கு மக்களாட்சியின் மாண்புகளை தனது வீராங்கன் கதாபாத்திரம் மூலமாக உணர்த்தினார். திராவிடப் பகுத்தறிவு லட்சியவாதம் போன்றவற்றை அக்கால இளைஞர்கள் ஏற்றுக்கொண்டாலும் கூட பெரியவர்களை எதிர்த்து அவர்களால் எதுவும் செய்வதற்கில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொண்டிருந்த வீராங்கன் போன்ற கதாபாத்திரம் இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரி கதாபாத்திரமாக அமைந்தது. அவர் தன்னை ஊருக்காக உழைக்கும் சுயநலமற்ற இளைஞனாக வெளிப்படுத்தினார். இது ஒரு துருவ நட்சத்திரமாக துன்பத்தில் துவண்டு கிடந்த இளைஞர்களுக்கு தோன்றியதால் அதை நோக்கி அவர்கள் தம் பயணத்தைத் தொடங்கினர்

சாகச நாயகன், சாதனை நாயகன் ஆனார்

அரசியலில் எம்.ஜி.ஆர். எந்த பதவியையும் வகிக்காவிட்டாலும் அப்போது நேரடியாக களத்தில் இறங்காவிட்டாலும் திமுகவுக்கு ஆதரவாக

மட்டுமே இருந்தாலும் அந்த திமுக ஆதரவை அவர் தன்னால் முடிந்த வரையில் அனைத்து வழிகளிலும் சிறப்பாகவும் ஆழமாகவும் விரிவாகவும் செய்து வந்தார். இளைஞர்கள் அவருக்கு பெரிய அளவில் ஆதரவு கொடுத்து அவரைப் பார்த்து அவர் போலவே நடந்து கொள்ளத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். ஒரு சாகச நாயகன் என்றாலும் அவரைப்போல் சாகசங்கள் செய்ய இயலாவிட்டாலும் அவருடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில் இளைஞர்களுக்கு எந்த தயக்கமும் பிரச்சனையும் இருந்ததில்லை. சாதி மத பேதமற்ற ஒருமைப்பாட்டை பேணுவதில் அவர்களுக்கும் பெரு விருப்பம் இருந்தது. இறைவன் பெயரால் சொல்லப்படும் மூடநம்பிக்கைகளை வெறுத்து ஒதுக்கிவிட்டு முன்னேற்றத்திற்கான வழிகளை ஆராய்வதில் இளைஞர்களுக்கு தடை எதுவும் இல்லை.

“எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க யார் என்ன சொன்னாலும் ஏன் எப்படி என்ற கேள்விகளை எழுப்பி அவற்றைப் புரிந்து கொள்ள முயலுவதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டினர். படத்தில் எம்.ஜி.ஆர். செய்து காட்டியதைப் போல சில எதிர்ப்பு நிலைகளையும் அவர்கள் எடுக்க துணிந்தனர். எம்.ஜி.ஆர். வழியில் நடந்தால் எம்.ஜி.ஆரை தலைவராக கொண்ட அவரைப் பின்பற்றினால் ஏழை மக்களின் ரட்சகராக, மீட்பராக, காவலராக அவர் விளங்குவார் என்பதில் மக்களுக்கு ஆழமான நம்பிக்கை அவர் படங்களை பார்த்து உண்டாயிற்று.

தொடர்ந்து இடம்பெற்ற சமூக அக்கறைப் பாடல்கள்

எம்.ஜி.ஆர். ஏழை மக்களின் நலன் மீது கவனம் செலுத்துகிறார் என்பதை அவர் தனது படங்களில் தொடர்ந்து இடம்பெறச் செய்த சில தனிப் பாடல்களே மக்களுக்கு உணர்த்தின. மலைக்கள்ளன் படத்தில்

இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்

இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே

சொந்த நாட்டிலே *என்ற பாட்டும்*

மன்னாதி மன்னன் படத்தில்

அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடர் உடமையடா

என்ற பாட்டும்

மதுரை வீரன் படத்தில் குறவன் குறத்தியாக வந்து பாடும்

ஏச்சு பிழைக்கும் தொழிலே சரிதானா

எண்ணிப் பாருங்க நீங்கள்

எண்ணிப் பாருங்க *என்ற பாட்டும்*

தன் சொந்தப் படமான நாடோடி மன்னனில்

உழைப்பதிலா உழைப்பை பெறுவதிலா இன்பம்

உண்டாகும் என்றே சொல் என் தோழா

என்ற பாட்டும்


காடு வெளஞ்செண்ண மச்சான் நமக்கு’

கையும் காலும் தானே மிச்சம்

என்ற பாட்டும் திராவிட இயக்கக் கருத்துக்களைச் சொல்வதற்காக எழுதப்பட்ட பாடல்கள் என்றாலும் அவை எம்.ஜி.ஆருக்காக எழுதப்பட்ட பாடல்களைப் போலவே இளைஞர் மத்தியில் பொது மக்கள் மனதில் ஒரு ஆழமான நம்பிக்கையை உருவாக்கின. இப் பாடல்களில் காணப்பட்ட சமுக அக்கறை அவரைப் பற்றி உயர்வான எண்ணத்தை மக்கள் மனங்களில் உருவாக்கியது.

நாடோடி மன்னன் காலத்தில் அண்ணாவின் இதயக்கனி

மதுரையில் நாடோடி மன்னன் 100ஆவது நாள் விழா நடந்த அதே சமயம் சென்னையில் அறிஞர் அண்ணா கலந்துகொண்ட ஒரு விழா நடந்தது அப்போது அவர் ‘மரத்திலிருந்த இந்தக் கனி யார் மடியில் விழும் என்று பலர் காத்துக்கொண்டிருந்தனர் அது என் மடியில் விழுந்தது அதை எடுத்து நான் என் இதயத்தில் வைத்துக்கொண்டேன்’ என்று எம்.ஜி.ஆரை இதயக்கனி என விவரித்தார். எம்.ஜி.ஆரை பாராட்டுவது தன்னைத்தானே பாராட்டுவதற்கு ஒப்பானது என்று அண்ணா பாராட்டிய வரிகள் எம்.ஜி.ஆரும் அவரும் ஒன்றுதான் என்பதை அன்றைக்கு கூட்டத்திற்கு வந்தவர்களுக்கு சொல்லாமல் சொன்னது. இதுபோன்ற சம்பவங்கள் ஆங்காங்கே நடந்தன. திராவிட இயக்க வழியில் தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தை எம்.ஜி.ஆர். கட்சி என்றே மக்கள் அழைக்கத் தொடங்கினர் நம்பி வந்தனர்.



நீங்க எம்.ஜி.ஆர். கட்சியா என்று அண்ணாவைக் கேட்ட பெண்

ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திற்கு போய் விட்டு வரும் வழியில் அவர் காரில் ரேடியேட்டர் சூடாகிவிட்டது; கார் நின்றுவிட்டது. அப்போது அந்தப் பக்கமாக தண்ணீர் சுமந்து சென்று கொண்டிருந்த பெண்களிடம் ஒரு குடம் தண்ணீர் கொடுங்கள், ரேடியேட்டர்

சூடாகிவிட்டது கார் எடுக்க இயலவில்லை என்று ஓட்டுனர் சொன்னபோது, முதலில் மறுத்த பெண்கள் அந்த காரில் எம்.ஜி.ஆர். கட்சிக்கொடி அதாவது திராவிட முன்னேற்றக் கழக கொடி பறப்பதை கண்டதும் அவர்கள் காருக்குள் இருந்தவரை பார்த்து 'நீங்க எம்.ஜி.ஆர். கட்சியா' என்று கேட்டனர். உள்ளே உட்கார்ந்திருந்த அண்ணாவும் ஆமாம் நான் உங்கள் எம்.ஜி.ஆர். கட்சி தான் என்று சொன்னவுடன் சரி வாங்கடி தண்ணி கொடுப்போம் என்று சொல்லி ஒரு குடம் தண்ணீரை அந்த ரேடியேட்டரில் ஊற்ற கொடுத்தனர், ரேடியேட்டரில் ஊற்றினர்.

கார் புறப்பட்டதும் ஓட்டுநர் அறிஞர் அண்ணாவைப் பார்த்து கேட்டார், 'என்ன அண்ணா நீங்கள் நம் கட்சியை எம்.ஜி.ஆர். கட்சி என்று சொல்கிறீர்களே; நீங்கள் தானே கட்சித் தலைவர்' என்றார். அப்போது "அண்ணா 'நான் டபுள் எம் ஏ. பொதுக்கூட்டங்களிலும் மேடைகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாக பேசுகிறேன் என்று எல்லோரும் பாராட்டுகின்றனர், ஆனால் என்னை



எவருக்கும் தெரியவில்லை. தம்பி எம்.ஜி.ஆரை தான் தெரிந்திருக்கிறது. அவர் மூலமாகத்தான் நமது கட்சி ஏழை மக்களிடம் சென்று சேர்ந்திருக்கிறது. எனவே நாம் கூட்டத்தில் பேசுவதெல்லாம் நமக்காகத்தான்; எம்.ஜி.ஆர். மக்களுக்காக சேவை செய்பவர், அவர்களிடம் கட்சி கொள்கைகளைக் கொண்டு செல்பவர் எம்.ஜி.ஆர். ஒருவர்தான். எனவே, இந்தக் கட்சி எம்.ஜி.ஆர். கட்சி என்ற பெயரில் அழைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனக்கு மகிழ்ச்சிதான்'' என்றார். அவர் இருக்கும் காலத்திலேயே அந்தக் கட்சியை மக்கள் எம்.ஜி.ஆர். கட்சி என்று அழைத்தனர். அதனால்தான் அண்ணா அவர்கள் எம்.ஜி.ஆரை பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வது ஆகும் என்று சென்னை விழா மேடையில் கூறினார்.

அண்ணாவின் வாரிசு எம்.ஜி.ஆர்.

எம்ஜிஆர் திமுகவில் 1952இல் சேர்ந்த பிறகும் காமராஜர் என் தலைவர் அண்ணா என் வழிகாட்டி என்று தெரிவித்தார். எம் ஜி ஆர் அண்ணா அவர்களை தன் உள்ளத்தில் உயர்வாகக் கருதி மதித்து அன்பு செலுத்தி வந்தார். அண்ணா தன் கையால் எம்ஜிஆருக்கு நாடோடி மன்னன் வெற்றி விழாவில் தங்க வாள் பரிசளித்தபோது அந்த நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த மக்களும் மக்களும் மற்றவர்களும் எம்ஜிஆரை அண்ணாவின் வாரிசாகவே கருதி மகிழ்ந்தனர்.

அண்ணாதிமுகவிற்கான அடித்தளம்

ஏழை மக்களுக்கு என்னால் வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை நாடோடி மன்னன் படத்தில் அவர் மன்னன் ஆனதும் பேசுகின்ற

வசனங்கள் உறுதி செய்தன. பின்னர் அவர் முதலமைச்சரானதும் அது உண்மை ஆயிற்று. பானுமதியுடன் அவர் பாடிக் கொண்டு வரும் காட்சியில்

“நாளை போடப்போறேன் சட்டம் மிக

நன்மை புரிந்திடும் திட்டம்

நாடு நலம் பெறும் திட்டம்”

என்று கூறும் போது அவர் மனதில் தான் மன்னன் ஆனால் அல்லது முதலமைச்சரானால் என்னென்ன திட்டங்களை கொண்டு வருவேன் எவ்வாறு நடைமுறைப்படுத்துவேன் என்று அன்றைக்கு படத்தில் சொன்னது மக்கள் மனதில் ஆழமாக பசுமரத்தாணி போல் பதிந்து விட்டதால் அவர் அண்ணா திமுக என்ற கட்சி ஆரம்பிக்கும் போது மக்கள் அவருக்கு ஏராளமாக ஆதரவு தெரிவித்தனர்.

பல கட்சியை சேர்ந்தவர்கள் அல்லது கட்சி சார்பில்லாதவர்கள், அரசியல் ஆர்வமற்றோர் எனப் பலரும் அண்ணா திமுகவுக்கு ஆதரவு தெரிவித்து கட்சி ஆரம்பித்து ஆறு மாதத்தில் வந்த முதல் தேர்தலான திண்டுக்கல் இடைத்தேர்தலில் மற்ற அனைவரையும் டெபாசிட் இழக்கச் செய்யும் அளவுக்கு இவருக்கு மாபெரும் வெற்றியைக் கொடுத்தனர். எம்.ஜி.ஆர். நம்பிக்கை நட்சத்திரமாக தங்கள் வாழ்வின் விடிவிளக்காக நம்பியதற்கு முதல் காரணம் நாடோடி மன்னன் படத்தை அவர் சொந்தமாக எடுத்து கதையிலும் வசனத்திலும் காட்சி அமைப்பிலும் அக்கறை காட்டி வெற்றி படமாக்கியது என உறுதியாக கூறலாம். அண்ணா

திமுகவின் ஆதரவுக்கு நாடோடி மன்னன் படம் அஸ்திவாரமாக அடித்தளமாக அமைந்தது.

மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிய எம்.ஜி.ஆர்.

நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர். மன்னராக வந்து சட்ட திட்டங்களை அறிவித்ததை போலவே அவர் 1977ல் எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு அவர் ஆயுட்காலம் வரை 1987இல் அவர் காலமாகும் வரை மக்கள் அவரை முதலமைச்சர் நாற்காலியில் அமர்த்தி இருந்தனர். அவரும் தன் மீது வைத்திருந்த மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு சிறிதும் பங்கம் வராமல் நடந்து கொண்டார். இன்று வரை எந்த எதிர்க் கட்சியினரும் எம்.ஜி.ஆரை கெட்டவர் என்று சொல்லிவிட்டு கட்சி நடத்த இயலாது மக்களின் வாக்குகளைப் பெற இயலாது என்ற நிலையே நிடிக்கிறது. சிலர் அரிதாக இது போல கருத்து தெரிவித்தாலும் உடனே பெருமழையில் பட்ட சிறு நெருப்பு போல பட்டென அணைந்துவிடும். கண்ணதாசன், ஜெயகாந்தன், அறந்தை நாராயணன், நீல பத்மநாபன், எம் எஸ் எஸ். பாண்டியன் போன்றோர் எம்.ஜி.ஆர். பற்றி தாக்கி எழுதினாலும் அவர்களின் அந்த கருத்துக்களை எம்.ஜி.ஆரும் கண்டிக்கவில்லை மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றால் சமூகத்தில் பெரியளவில் தாக்கம் எதுவும் ஏற்படுத்த முடியவில்லை. அவை வெறும் மலட்டு எழுத்துகளாகி மங்கிவிட்டன. ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டும் இன்று கூட எம்.ஜி.ஆரின் மக்கள் செல்வாக்கை அசைத்துப் பார்க்க முடியவில்லை.

கெட்டவர்கள் மட்டுமே தாக்கு பிடிக்க முடியும் என்று நம்பப்பட்டு வந்த சினிமா மற்றும் அரசியலில் ஏக போக சக்கரவர்த்தியாக இருந்த எம்.ஜி.ஆர். நல்லவன் என்ற பெயரைப் பெறவும் அதைத் தக்க வைக்கவும் தினமும் போராடிய போராட்டங்களை மக்களால் ஊகித்து உணர முடிந்தது. சாமான்யனே நல்ல பெயர் எடுக்க அவதிப்படும் இந்தக் கலியுகத்தில் ஒரு மாபெரும் மக்கள் செல்வாக்கு படைத்தவர் தொடர்ந்து அந்த பெயரைத் தக்க வைப்பதில் உள்ள சவால்கள் மக்களுக்குப் புரியும். எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட இடறல்களையும், சவால்களையும் மக்கள் புரிந்துகொண்டனர். அவரை மதித்து மாமனிதராக ஏற்றுக்கொண்டனர். இந்தக் கலியுகத்தில் அவரைப் போல இன்னொருவர் வர இயலாது என நம்பினர். தங்கள் கலி தீர்க்க வந்த கண்ண பரமாத்மா என்று எம்.ஜி.ஆரை வணங்கி ஏற்றுக்கொண்டனர்.

எம் ஜி ஆர் இறந்தபோது, தெருவில் பழைய காகிதம் பொறுக்கி விற்கும் சிறு பெண் ஒருத்தி லாரியில் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவுக்குச் சென்ற தொண்டர்கள் விடும் கண்ணீரைப் பார்த்து 'இனி எம்.ஜி.ஆரே பிறந்து வந்தாலும் அவர் எம்.ஜி.ஆர். ஆக முடியாது' என்றார். அவள் கூறியதை சத்திய வாக்கு எனலாம். சினிமாவிலும் அரசியலிலும் நல்ல பெயரெடுத்து தொடர்ந்து அதைக் காப்பாற்றுவது எல்லோராலும் நடத்திக்காட்டக் கூடியதன்று.

எம்.ஜி.ஆருக்கு சினிமாவும் வாழ்க்கையும் ஒன்று தான்

நாடோடி மன்னன் கதை போலவே எம்.ஜி.ஆர். வாழ்க்கையில் நடந்தது கண்டு ஒருமுறை அவரிடம்

'உங்களுக்கு மட்டும் இத்தனை பாப்புலாரிட்டி ஏன்? என்று கேள்வி கேட்டதற்கு அவர்

"நான் வாழ்க்கை வேறு நடிப்பு வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. எப்படி வாழ வேண்டும் என்று நினைக்கிறேனோ அதேபோல் படத்தில் நல்ல கருத்துக்களை மக்களிடையே எடுத்துரைக்கவே நடிக்கிறேன். நல்ல மனிதனாக வாழ வேண்டும், உழைத்துச் சாப்பிட வேண்டும், , நல்ல கொள்கைகளுக்காக போராட வேண்டும் இதையெல்லாம் வெளியிடக் கூடிய வாய்ப்புள்ள கதைகளை தேர்ந்தெடுக்கிறேன்" என்று பதில் அளித்தார்.

இந்தப் பதில் மூலமாக அவர் தன்னுடைய வாழ்க்கையையும் சினிமாவையும் ஒன்றெனக் கருதி வாழ்ந்து வந்தது தெரிகின்றது.

சினிமா மற்றும் அரசியல் தொடர்பான மற்றொரு கேள்வியை அவர் முன்வைத்த போது அவர் கொடுத்த பதில் அவருடைய வெற்றி சினிமா கவர்ச்சியால் பெற்ற வெற்றி அல்ல என்பதை உறுதி செய்கிறது.

கேள்வி: 'அரசியல் ரீதியில் கொள்கை வழிப்படி எத்தனை பேர் உங்களை வழிபடுகின்றனர்? உங்களுக்கு இருப்பதெல்லாம்

சினிமா கவர்ச்சியால் ஏற்பட்டுள்ள செல்வாக்கு தான் என்று கூறுகின்றனர் இதற்கு என்ன பதில்?''

எம்.ஜி.ஆர்; ''அப்படியானால் மற்ற நடிகர்களும் கட்சிகள் ஆரம்பித்துவிடலாம். அப்படி அவர்கள் ஆரம்பித்தால் இவ்வளவு செல்வாக்குப் பெற முடியுமா?

என்ற கேள்வியோடு தனது பதிலை முடிக்கிறார். இன்றைக்கு ரஜினியும், கமலும், விஜயகாந்தும் புது கட்சிகள் தொடங்கி இருந்தாலும் கூட அவர்களுக்கு எம்.ஜி.ஆருக்கு இருக்கும் செல்வாக்கில் பத்தில் ஒரு பங்கு கூட இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு உண்மையாகும். ஆக சினிமா கவர்ச்சி என்பது மட்டும் ஒருவரை தலைவர் ஆக்கிவிடாது.

தலைவனின் பண்புகள்

பெற்றால் தான் பிள்ளையா படத்தில் அவர் பாடிய பாட்டு வரிகளை நினைவு படுத்தி பார்த்தால் எம்.ஜி.ஆரிடம் தலைவனுக்குரிய பண்புகள் ஆரம்ப காலம் தொட்டு இருந்தது தெரிய வரும்.

கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்

கடமை இருந்தால் வீரன் ஆகலாம்

பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம் இந்த

மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்

என்ற வரிகளில் காணப்படும் கடமை, கருணை, பொறுமை ஆகிய மூன்று சிறந்த பண்புகளும் எம்.ஜி.ஆரிடம் இருந்ததனால் அவர் தலைவர் ஆனார்.

நாடோடி மன்னன் படத்தில் அறிவித்த சட்டதிட்டங்களை முதல்வரான பிறகு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தன்னால் முடிந்தவரை அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்ததனால் அவருடைய சினிமா வாழ்க்கையும், அரசியல் வாழ்க்கையும் ஒரே நேர்கோட்டில் பயணிப்பதை உறுதி செய்தார். இவ்வாறு நாடோடி மன்னன் அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு ஒரு வலுவான அடித்தளமாக அமைந்தது.

கருணாநிதியை எம்.ஜி.ஆர். வென்றது எப்படி?

நாடோடி மன்னன் படம் வரும்போது கருணாநிதி வெறும் திரைப்பட வசன கர்த்தா மற்றும் திமுக பேச்சாளர் மட்டுமே. ஆனால் எம்.ஜி.ஆர். அப்போதே திரையுலகின் முடி சூடா மன்னன். அண்ணா எம்.ஜி.ஆரை மதித்து போற்றிய அளவுக்கு கருணாநிதியை மதிக்கவில்லை. அரசியலில் அண்ணா தனது இளவலாக, வாரிசாக, தம்பியாக நாவலரைத் தான் மதித்தார். எம்.ஜி.ஆர். சொந்தக் காசில் சூனியம் வைத்த கதையாக கருணாநிதியின் உண்மை சொரூபம் தெரியாமல் அண்ணாவின் மறைவுக்கு நாவலரை புறக்கணித்துவிட்டு கருணாநிதியை முதலமைச்சர் ஆக்கினார். கருணாநிதி கட்சியை விட்டு தன்னை வெளியேற்றியதும் எம்.ஜி.ஆர். அண்ணா திமுக கட்சியை தொடங்கி சட்டமன்ற தேர்தலில் தொடர்ந்து மூன்று முறை கருணாநிதியை தோற்கடித்து வெற்றி வாகை சூடினார். இந்த சாதனை தமிழகத்தில் இதுவரை எவராலும் முறியடிக்கப்படாத சாதனை ஆகும். இச்சாதனை குறித்து ஒரு நிருபர் எம்.ஜி.ஆரிடம் கேட்டார்,

“நீங்கள் கருணாநிதியை ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்று விடுகிறீர்களே அவருடைய தந்திரங்கள் உங்களிடம் பலிக்கவில்லையே அவர் சாணக்கியர் என்று அனைவரும் பாராட்டும் போது உங்களால் மட்டும் அவரை அவருடைய சாணக்கியத்தனம் எப்படி உணர்ந்து வெற்றி பெற முடிகிறது?”

எம்ஜிஆர் :- **“கருணாநிதி கதை வசனம் எழுதிய படத்தில் நான் நடித்து இருக்கிறேன். கலைஞர் எப்படி திரைக்கதை எழுத எங்கே முடிச்சுப் போடுவார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எப்படி கதை எழுதுவேன் என்பது கலைஞருக்கு தெரியாது. என்னுடைய போக்கும் நோக்கும் அவருக்கு புரியாது. ஆனால் அவருடைய வழிகள் எனக்குத் தெரிந்தவை தான்”** *என்று பட்டென்று பதிலளித்தார். எம்ஜிஆர் தன்னுடைய போட்டியாளர் அல்லது எதிரியை அவரது திறமைகளை உத்திகளை வியூகங்களை நன்றாக அளந்து அறிந்து வைத்திருக்கிறார். அதனால் அரசியல் சாணக்கியன் மதி யூகி என்றெல்லாம் திமுகவினரால் அழைக்கப்பட்ட கருணாநிதியை வெற்றி கொள்வது எம்.ஜி.ஆருக்கு எளிதாக இருந்தது.*

படகோட்டி, குடியிருந்த கோயில், சிரித்து வாழ வேண்டும் என பல படங்களில் அவர் நம்பியார் போன்ற வில்லன்களை கருணாநிதி போலவே உருவாக்கியிருந்தார். வில்லனாக வரும் நம்பியார் நடு வகுப்பு எடுத்து தலை சீவும் பாங்கு [hair style] கூட கருணாநிதியை ஒத்திருந்தது. இதனால் மக்கள் மத்தியில் கருணாநிதி என்றாலே வில்லன், கெட்டவன், தீய சக்தி, சமூக எதிரி, சுய நலக்காரன், ஊருக்கு எதிரி என்ற எண்ணம் ஆழமாக ஊடுருவி

பதிந்து விட்டது. இந்தக் கருத்தும் பிற்காலத்தில் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். இலங்கை தமிழருக்காக அமைதி ஒப்பந்தம் உண்டாக உதவிகளைச் செய்ய அவருக்குப் பின் முதல்வராக வந்த கருணாநிதி இலங்கை தமிழர்களின் படுகொலைக்கு காரணமாகி விட்டார் என்ற கருத்தில் இலங்கை தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையில் மெய்யாகிவிட்டது. ஆக கருணாநிதி தமிழநாட்டில் வாழ்ந்தவருக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழ்ந்த தமிழருக்கும் வில்லனாகி விட்டார். இதுவும் எம்.ஜி.ஆருக்கு ஆதரவான

எம்.ஜி.ஆர். ஒரு முன்மாதிரி

நாடோடி மன்னன் படத்துக்குப் பிறகு எம்.ஜி.ஆர். இளைஞர்களுக்கு சமூக சீர்திருத்தத்தில் ஆர்வமுடைய ஒரு முன்மாதிரியாக உருவாகிவிட்டார். அவர் தன் தலைமையின் கீழ் அல்லது சார்ந்திருக்கும் கட்சியின் தலைமையின் கீழ் செயல்படுவோர் ஊழல் அற்றவர்களாக ஜாதியின் பெயரால் கொடுமைகள் செய்யாதவராக சமத்துவம் சமநீதி ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்ட தொண்டர் படையை உருவாக்கினார். அந்தப் படைக்கு எம்.ஜி.ஆர். ரசிகர்கள் என்ற பெயர் இருந்தாலும் அந்த படை அவரது வெற்றிக்காக உயிரை கொடுக்கும் தற்கொலை படையாக வீறு கொண்டெழுந்தது.

திரையிலும் அரசியலிலும் யாராலும் வெல்ல முடியாதவர்

திரையுலகில் ஏகபோகச் சக்கரவர்த்தியாக இருந்து அரசியலுக்கு வந்த பிறகு தமிழகத்தின்

முதலமைச்சராகத் தொடர்ந்து மூன்று முறை பதவியைக் கைப்பற்றி இறக்கும் வரை முதலமைச்சராக இருந்தார். திரையுலகிலும் அரசியலிலும் ***தன்னிகரற்ற தலைவனாக*** *விளங்கினார். இந்த* ***இரு துறைகளுக்கும் இணைப்புப் பாலமாக அமைந்தது நாடோடி மன்னன் படமாகும். இப்படத்தில் ஒரு திரைப்பட நடிகராக சாதனை செய்த எம்.ஜி.ஆர். அரசியலில் அடியெடுத்து வைப்பதற்கும் அவரறியாமலே அச்சாரம் போட்டார்.*** *அந்த அஸ்திவாரத்தின் அடிப்படையில் அரசியல் செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்த காலத்தில் அவர் அண்ணா திமுக கட்சியைத் தொடங்கி ஆட்சியைப் பிடிக்க நாடோடி மன்னனில் அவர் பேசிய வசனங்கள் உதவின. அவ்வசனங்கள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்து அவர் இரண்டு நாட்கள் பதவியில் இருந்தாலும் நல்லது மட்டுமே செய்வார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தின.*

4. நாடோடி - மன்னன் ஆன வரலாறு

இலங்கையில் பிறந்து கேரளத்திற்குச் சென்று பின் தமிழகத்தில் பிழைக்க வந்த நாடோடியான எம்.ஜி.ஆர். தன் அன்பால் கட்டுண்டு கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு மன்னன் ஆனார். எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டின் முதலமைச்சரான பின்பு அவர் செய்தது எல்லாமே சரிதான் என்று மக்கள் ஆணித்தரமாக நம்பும் வகையில் அவர் மக்களிடம் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார். அவருடைய அதிகாரிகள் சுதந்திரமாக செயல்படும்படி தன் கட்சிக்காரரர்களின் தலையீடு இல்லாதபடி சிறப்பான நிர்வாகத்தை கொடுத்தார். அதே சமயத்தில் அதிகாரிகள் எவ்வளவு படித்தவராக இருந்தாலும் தன்னுடைய கொள்கையில் இருந்து மாறுபடாதவர்களாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தனது கொள்கைகளை நிறைவேற்றத்தான் அதிகாரிகள் தனக்குத் துணையாக இருக்கின்றனர் என்று மக்களை நம்ப வைத்தார். அந்த நம்பிக்கையை நல்ல முறையில் செயல்படுத்தினார். சிலர் அடிவருடிகளாக மாறி அவர் புகழுக்கு களங்கம் விளைவிக்க நினைத்தனர், ஆனால் அது பலிக்கவில்லை. எம்.ஜி.ஆரிடம் சத்துணவுத் திட்டம் கொண்டுவர இயலாது

அதற்கான பொருளாதார சூழ்நிலை இல்லை, *technograd* இல்லை என்று ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் கூறியபோது, ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் எனப் பத்தாயிரம் பேரை சமையலர் மற்றும் சத்துணவு மையப் பொறுப்பாளர் எனப் பணியில் அமர்த்தி உடனே சத்துணவுத் திட்டத்தை நிதி திரட்டி நடைமுறைப்படுத்தினார். இயலாது என அதிகாரிகள் மறுப்பு தெரிவித்த போதும் அவர் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களின் கருத்தை மறுத்து விட்டு நிதி திரட்டி பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தி சத்துணவு திட்டத்தை அறிமுகம் செய்தார். நினைத்ததைச் செய்து முடிக்கும் செயல்திறம் எம்.ஜி.ஆரிடம் இருந்தது. மேலும்தான் செய்வதைச் சிறப்பாகவும் அச்செயல்பாட்டில் மற்றவருக்கு முன் மாதிரியாகவும் இருந்தார். தமிழகத்தில் அறிமுகமான சத்துணவு திட்டம் பின்னர் மற்ற மாநிலங்களிலும் வேறு சில நாடுகளிலும் பின்பற்றப்பட்டது. பல உயர் பல்கலைக்கழகங்களில் இத்திட்டம் ஆராய்ச்சிப் பொருளாகி பாராட்டும் பெற்றது.

மக்கள் திலகம் மக்கள் தலைவர் ஆனார்

எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன் படத்தில் அரசனிடம் வீராங்கன் கதாபாத்திரத்தில் வந்து **“நீங்கள் மாளிகையில் இருந்து மக்களைப் பார்க்கிறீர்கள் நான் மக்களோடு இருந்து மாளிகையை கவனிக்கிறேன்”** என்று பேசிய வசனம் அவருடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிறந்தது என்று மக்கள் நம்பியதால் அவர் நம்முடைய பிரச்சனைகளை சிக்கல்களை துன்பங்களை உணர்ந்திருக்கிறார்;



அதனால் அவர் துன்பங்களைத் தீர்த்து வைப்பார் என்றனர். அவரும் பொது மக்களுக்கும் தனிநபருக்கும் எங்கு எப்போது பிரச்சனை வந்தாலும் துன்பம் நேரிட்டாலும் இயற்கைப் பேரிடராக இருந்தாலும் வறுமைச் சூழ்நிலையாக இருந்தாலும் அச்செய்தி அவர் செவிக்கு எட்டிய உடனேயே முடிந்தவரை வந்து தன்னால் இயன்றவரை சிறப்பாக உதவியிருக்கிறார். இதற்கான ஆதாரங்கள் ஏராளமாக நம்மிடம் இருப்பதனால் அவர் ***மக்களின் துன்பங்களை உணர்ந்த மக்கள் தலைவர்*** *என்று பாராட்டப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. இதனால் சினிமாவில் நடிக்கும் பொழுது மக்கள் திலகமாக போற்றப்பட்டவர் அரசியலுக்கு வந்த பிறகு மக்கள் தலைவர் என புகழப்பட்டார்.*

போற்றுதலுக்குக் காரணம் திரைப்பிம்பமா? அன்புள்ளமா?

எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் எம்.ஜி.ஆரை அவருடைய தர்ம சிந்தை, ஈரநெஞ்சம், மற்றும் அன்பு

உள்ளத்தை நேசித்தனரே தவிர படத்தில் அவர் போட்டு வரும் மேக்கப், பாட்டு, டான்ஸ் போன்றவற்றில் மயங்கி அவரைத் தலைக்கு மேல் வைத்து கொண்டாடினர் என்று சொல்ல இயலாது. **போற்றுதலுக்கு காரணம் அவரது திரைப்படங்கள் அவர்களுக்கு அளித்த மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் அளப்பரியது என்றாலும், கூட அவரது மனித நேயமே என்பது உறுதி.** ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் இளைய நடிகர்களான ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் போன்றோர் பாட்டு காட்சிகளிலும் காதல் காட்சிகளிலும் சிறப்பாக நடித்து இளைஞர்களின் வரவேற்பை பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் மக்கள் செல்வாக்குப் பெற்ற நடிகர்களாக உருவெடுக்கவில்லை. நடிப்பும் சினிமா கவர்ச்சியும் மக்களை சந்திக்க ஒரு முகப்பு அட்டையாக -- விசிட்டிங் கார்டு போல செயல்படும். விசிட்டிங் கார்டு கொடுத்து ஒருவரை பார்க்க போகலாம். ஆனால் அவரை சந்தித்த பின்பு அவர் மனதில் இடம் பிடிப்பது நமது நடத்தை, அறிவுத் திறன், தொழில் திறமை போன்றவற்றால் மட்டுமே. தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆருக்கு மக்கள் செல்வாக்கு என்பது மக்களின் மனம் சார்ந்த விஷயமாக மனித நேயம் சார்ந்த கருத்தாக இருந்ததே தவிர திரை பிம்பம் சார்ந்ததாக இருக்கவில்லை. எனவே எம்.ஜி.ஆரின் வயது தோற்றம் வயோதிகம் பலவீனம் போன்ற விஷயங்கள் ரசிகர்களால் உணரக்கூடிய வகையில் இருந்தாலும் அவர் நடிக்க வந்து இருபது முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை அவர்கள் நன்றாக தெரிந்து கொண்டிருந்தாலும் மக்களை நேசிக்கும் அன்புள்ளம் கொண்டவர் எம்.ஜி.ஆர். என்ற ஒரே

காரணத்திற்காகத்தான் அவர் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தனர்.

திரைப்பிம்பம்; பிம்பச்சிறை எனக் குற்றம் சாட்டுவோர்

திரையில் நல்லவனாக நடித்து மக்களை ஏமாற்றினார் என்று சில அறிவு ஜீவிகள் சொல்வது பொய்யான கருத்து என்பதை உறுதியுடன் மறுக்கலாம். அவருடைய கொடை உள்ளத்துக்கு நின்றது இரக்க குணம் என்பது நிஜம். அதற்கு விளம்பரம் போல எம்.ஜி.ஆரின் நல்ல உள்ளத்தை காட்ட அவர் படங்கள் அவற்றின் கதை, கதாப்பாத்திரம் காட்சிகள் உதவின. உள்ளம் என்பது நிஜம்; பிம்பம் என்பது நிழல்; என்பதன்றி அவர் பிம்பங்களை காட்டி மக்கள் அறிவை மழுங்கச் செய்து மனதை கொள்ளை அடித்தார் என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது போலியானது.

எம்.ஜி.ஆரை மன்னனாக்கிய ரசிகர் மன்றம்

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம் 1951 முதல் மர்மயோகி படம் வெளிவந்தது முதல் செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் வெறும் திரைப்படம், திரைப்பட ரசனை, விமர்சனம், என்றிருந்த இந்த மன்றங்கள் பின்னர் முறைப்படுத்தப்பட்டன. ரசிகர்கள் மக்கள் நலப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினர். ஒவ்வொரு மன்றத்துக்கும் பெயர், தலைவர், செயலர், உறுப்பினர் கட்டணம், மன்றத்திற்கான இடம், அதற்கான பாதுகாப்பு, அது ஒரு வாசகர் மன்றமாக செயல்பட்ட விதம், அங்கு பத்திரிகைகள் வாங்கி போட்டு அதனை ரசிகர்கள்



தினமும் வந்து படித்து ஊர் உலக விபரங்களை தெரிந்து கொண்டது,

ரசிகர் மன்றங்கள் எம்.ஜி.ஆர். படம் வெளிவரும்போது திரையரங்கில் டிக்கட் வாங்க வரிசையில் அனைவரும் வரும்படி அவர்களை ரசிகர்களே ஒழுங்கு படுத்துவது, பெண்களுக்கு ஆபத்து இல்லாமல் பாதுகாப்பாக வந்து படம்

பார்த்து செல்வதற்கான கடமையை உணர்ந்து செயல் பட்டது, கோடைக்காலங்களில் மோர் பந்தல் தண்ணீர்ப்பந்தல் வைப்பது, பள்ளி திறக்கும் காலங்களில் ஏழைப் பிள்ளைகளுக்கு நோட்டு புத்தகம் வாங்கிக் கொடுப்பது, தமிழர் திருநாளான பொங்கல் விழா கொண்டாடுவது, எம்.ஜி.ஆர். படங்களின் 100 நாள் விழா, வெள்ளி விழா போன்றவற்றை சிறப்பாகக் கொண்டாடுவது என சினிமாவும் சமூகமும் கலந்த கடமை உணர்ச்சியுடன் மக்களோடு கலந்து செயல்பட்டு வந்தன. இந்த ***மன்றங்களுக்கு இருந்த சமூகச் சிந்தனையே எம்.ஜி.ஆரை அண்ணா திமுக கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று அவரை வற்புறுத்தவும் முன்னுரிமை எடுத்துக் கொண்டன.***

எம்.ஜி.ஆர். தனிக் கட்சி தொடங்க தூண்டிய ரசிகர்கள்

எம்.ஜி.ஆர். தனது அன்புள்ளத்தாலும் அவரது கதாபாத்திரத்தாலும் காட்சிகளாலும் மக்களை தனது ரசிகர்களாக்கி சமூக அக்கறை கொள்ளச்செய்தார். ஊழல் மலிந்த அரசியல்வாதிகள் திமுக ஆட்சியில் வளர்ந்து வருவதைக் கண்டதும் எம்.ஜி.ஆர். அவர்களின் சொத்துக் கணக்கைக் கேட்டதற்கு அவருக்கு திமுகவால் அவமானம் ஏற்பட்டதும் ரசிகர்கள் அவரை சமூக சீர்திருத்தப் பணியில் புரட்சி பாதையில் இழுத்துக்கொண்டு வந்துவிட்டனர். அவரை புரட்சித் தலைவராக்கி விட்டனர். அவர் சமுதாயத்தில் புரையோடி போயிருந்த ஊழலைக் களையும் முயற்சியில் அரசியலைச் சீர்திருத்தும் புரட்சியில் ஈடுபடக் கடமைப்பட்டவர் ஆனார். .தமிழ்ச் சமுதாயம் ஊழலற்ற சமுதாயமாக இருக்க வேண்டும் என்றால் எம்.ஜி.ஆர். அதற்கு தலைமை

தாங்க வேண்டும் என்ற சமூக உணர்வுடன் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்கள் அவரை வற்புறுத்தி புதிய கட்சியை தொடங்கும்படி அவரை தூண்டின. அவர் காட்டிய பாதையில் ரசிகர் மன்றங்கள் அவரை இழுத்து சென்றன. எம்.ஜி.ஆருக்கு புலி வால் பிடித்த கதையாகிவிட்டது. அவருக்கு அதிகமாக ஆலோசிக்க நேரம் தராமல் ரசிகர்கள் தொடங்கிய காரியங்கள் அவரை அரசியலுக்குள் கட்சித் தலைவராக இழுத்து வந்துவிட்டன. அதே சமயம் ரசிகர்களும் தேரை இழுத்து தெருவில் விட்ட கதையாக்காமல் அவரை கடைசி வரை உயர்த்திப் பிடித்தனர்.

எம்.ஜி.ஆர். காலமாகி முப்பதாண்டுகள் கழித்தும் அவரது ரசிகர்கள் அவரை இன்று வரை தம் உள்ளத்தில் வைத்துப் பூஜை செய்து தெய்வமாகப் போற்றி வருகின்றனர். எம் ஜி ஆர் ரசிகர்கள் அவர் தனிக்கட்சி ஆரம்பத்த போது உறுப்பினர்களாகி இன்று அவரது பக்தர்கள் ஆகிவிட்டனர். இது எம் ஜி ஆருக்குக் கிடைத்த தனிப் பெரும் கௌரவமாகும்.

ரசிகர்கள் வழியில் எம்.ஜி.ஆர்.

தனிக் கட்சி ஆரம்பித்து நாமும் இந்த அரசியலில் விழ வேண்டுமா? இன்றிருக்கும் நல்ல பெயரை கடைசி வரை காப்பாற்ற இயலுமா? என்று யோசித்து எம்.ஜி.ஆர். சற்று தயங்கியபடியே படித்தவர்கள் மற்றும் மூத்தவர்களுடன் ஆலோசித்து வந்த கால கட்டத்தில் அவரை தம் தலைவராக ஏற்றுக் கொண்ட ரசிகர் மன்றங்கள் தாம் துணிந்து தம்முடைய சமூகக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு ஆங்காங்கே தாமரை கொடியை ஏற்றி விட்டன. ரசிகர் மன்றங்கள் தாமரை கொடியை

ஏற்றியதால் தமிழக அரசியலில் நேரடியாக ஈடுபட்டன. திமுக அரசையும் அதன் அராஜக செயல்களையும் ரசிகர் மன்றங்கள் கட்சி மன்றங்களாகி கடுமையாகக் கண்டித்தன. ***எம்.ஜி.ஆருக்கு முன்பே ரசிகர் மன்றங்கள் கட்சியைத் தொடங்கிவிட்டன. இதற்கு முக்கிய காரணம் அவர் ஊட்டி வைத்த சமூக அக்கறையே ஆகும். இன்றைய மனித நேய அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரரம் சென்னையின் முன்னாள் மேயருமான சைதை துரைசாமி அவர்கள் எம்.ஜி.ஆர். ஆதரவாளர்களுடன் தாமரை கொடி ஏற்றினார். சென்னையிலும் மற்ற ஊர்களிலும் ரசிகர்கள் எம்.ஜி.ஆர். கட்சி எம்.ஜி.ஆர். கொடி என்று ஆங்காங்கே முடிவெடுத்து செயல்படத் தொடங்கினர்.***

அக்டோபர் புரட்சி

திமுக தனது காவல் துறையைக் கொண்டு எம்.ஜி.ஆர். ரசிகர்களைச் சட்ட ஒழுங்கு பிரச்சனையைக் காரணம் காட்டி அடித்து உதைத்தது. ஆனால் ரசிகர்கள் சாலைகளில் போகும் பேருந்துகளில் எம்.ஜி.ஆர். வாழ்க என்று எழுதிய பின்பு ஓட அனுமதித்தனர். ஓட்டுனரும் பயணிகளும் எம்.ஜி.ஆர். வாழ்க என்று வாழ்த்தொலி கூறி எம்.ஜி.ஆருக்கு ஆதரவு அளித்தனர். எம்.ஜி.ஆர். வாழ்க என்ற வாசகம் இல்லாமல் ஒரு பேருந்தும் ஓட முடியாது என்ற நிலை தோன்றியது. இது எம்.ஜி.ஆர். ரசிகர்கள் நடத்திய மிகப் பெரிய மக்கள் புரட்சி ஆகும். இதனை அரசியல் வல்லுனர்கள் அக்டோபர் புரட்சி என்றனர்.

எம்.ஜி.ஆர். தன்னுடைய ரசிகர்களை வன்முறையில் இருந்து காப்பாற்றவும் தன்னுடைய தலைமைப் பண்பை நிரூபிக்கவும் இதுவரை தான் சொல்லி வந்த சமூக அக்கறை கொண்ட கருத்துக்கள் அனைத்தும் உண்மை என்பதை உறுதி செய்யவும் அவர் தனிக்கட்சி ஆரம்பித்து அக்கட்சித் தலைவராக வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். ரசிகர்களின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்தார். அவருக்கு அரசியலில் ஆர்வம் இருந்தும் அதற்கான காலம் கனிந்து வந்த போதும் ரசிகர்களின் அன்பும் வற்புறுத்தலும் அவரை உடனடியாகக் கட்சியைத் தொடங்கும்படி தூண்டியது.

சமூக அக்கறைக்கு நாடோடி மன்னனே மூலாதாரம்

எம்.ஜி.ஆர். அதுவரை தன் படங்களிலும் தன் சொந்த வாழ்விலும் கொண்டிருந்த சமூக அக்கறையும் மனித நேயமும் ரசிகர்களின் ஆதரவும் தூண்டுதலும் கட்சி தொடங்குவதற்கு மூல காரணங்களாக அமைந்தன. இந்த காரணங்கள் உருவாவதற்கு **தொடக்கப்புள்ளியாக இருந்தது நாடோடி மன்னன் படம்** என்பது முற்றிலும் உண்மை. இப்படத்தின் மூலம் அவர் கற்பித்த சமூக அக்கறை ஏழை ரசிகர்களின் பொது மக்களின் மனங்களில் ஆழமாக பதிந்து விட்டது. சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்ட திமுக தனது ஆட்சிக் காலத்தில் மக்கள் விரோத சக்தியாக மாறி ஊழலில் பெருமளவில் ஈடுபட்டதால் தன் கட்சிக் கொள்கைக்கு மாறாக திமுக செயல்படுவதாக மக்கள் உறுதியாக நம்பினர். எனவே தங்களுக்கு ஆதரவானவராக எம்.ஜி.ஆரை தமக்கான கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டு மகுடம் சூட்டினர்.

இரு கட்சி இணைப்பு

எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு வடக்கே இருந்து வந்த பிஜு பட்நாயக் என்ற மத்திய அமைச்சர் ஒரிஸ்ஸாவின் செல்வாக்கு பெற்ற தலைவர் திமுக மற்றும் அதிமுகவின் இணைப்பு குறித்து முயற்சிகள் மேற்கொண்டனர். இரு தரப்பினருக்கும் ஆட்களை அனுப்பிப் பேசினார். கட்சியின் பெயர் திமுக என்றும் கொடி அண்ணா திமுகவினுடையது என்றும் தலைவர் கருணாநிதி என்றும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்றும் பேச்சு முடிவானதும் செயற்குழுவில் வைத்து இணைப்பைத் தெரிவிக்கலாம் என்ற முடிவுடன் கிளம்பிவிட்டார். அங்கிருந்து கிளம்பிய எம்.ஜி.ஆர். முன்பு திமுகவினரின் தடியடிக்கு ஆளாகி மண்டை உடைந்து ரத்தக் காயத்துடன் எம்.ஜி.ஆர். உலக ரசிகர் மன்றத் தலைவர் மாற்றுத் திறனாளி முசிறிப்புத்தன் வந்து நின்றார். அவருடன் வந்த ரசிகர் கூட்டத்தினரிடம் இருந்து வழிந்த செந்நீரும் கண்ணீரும் எம்.ஜி.ஆர். மனதை மாற்றி விட்டன. உள்ளே சமாதானம் பேசிக்கொண்டே வெளியே நம் தொண்டர்களை அடித்து உதைக்கின்றனரே என்று மனம் கசிந்து உருகி இணைப்பை மறுத்துவிட்டார். இரு கட்சிகளும் அன்று முதல் வலுவான எதிரிக்கட்சிகள் ஆகிவிட்டன

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் [ரசிகர்கள்] ***"அவர்கள் என்னை தலையாக கருதுகிறார்கள் நான் அவர்களை என் உடலாக மதிக்கிறேன்"*** *என்று எம்.ஜி.ஆர். சொல்வது போல ரசிகர்களைத் தம் உடலாக மதித்த எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களின் வேதனையைக் காணப் பொறுக்காமல் தனது*

தலைமையின் கீழ் மட்டுமே அவர்களைப் பாதுகாக்க முடியும் என்று முடிவெடுத்து தனிக் கட்சியைத் தொடங்கினார். ரசிகர்களை எம்.ஜி.ஆர். தனது சொந்தப் பிள்ளைகளாக மதித்தார். அவர்களுக்குத் திருமணம் செய்வித்தார். அவர்களின் பிள்ளைகளைப் படிக்க வைத்தார். தொழில் செய்ய பொருளுதவி அளித்தார்.

எம்.ஜி.ஆர். கட்சிக்கு உதவிய படித்தவர்கள்

நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக அவர் புதிய சட்டதிட்டங்களைத் தீட்டுவதற்கு ஆதரவாக இருந்த மந்திரி மற்றும் தளபதியைப் போல அவர் தனிக் கட்சி ஆரம்பித்ததும் படித்தவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டார். படித்துப் பட்டம் பெற்றோர், சமூக வாழ்வில் ஈடுபட வேண்டும் என்று எடுத்துரைத்து அரசியல் ஒரு சாக்கடை அல்ல; அது படித்தவர்களின் இருப்பிடம் எனக் கருதும்படி அவர் தன்னைச் சுற்றி படித்தவர்களை வைத்துக் கொண்டார். நடிகனுக்கு நாடாள தெரியுமா என்று பலரும் கேள்வி எழுப்பியபோது கற்றவர் சபை அவரோடு இருந்ததால் அவர் குற்றமற்றவராக வாழ்ந்து புகழோடு மறைந்தார்.

எம்.ஜி.ஆர். ஒரு ஃபேஷன் சிம்பல்

எம்.ஜி.ஆரின் மக்கள் கவர்ச்சிக்கு சினிமாவில் அவருடைய தோற்றப் பொலிவு ஒரு முக்கிய காரணம் ஆகும். திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். ஆங்கிலப்படங்களுக்கு நிகராக ஹாலிவுட் ஹீரோக்களைப் போல கோட் சூட் அணிந்தும் இடுப்பில் பெல்ட் மற்றும் கால்களில் ஷூ,

தலையில் தொப்பி [ஹேட்] போன்றவற்றை அணிந்து தன்னை அழகு படுத்திக் கொண்டார். தன்னை ஒரு ஃபேஷன் சிம்பலாக ஒரு மாடல் ஐகானாக (Model Icon) யதார்த்தத்தில் இருந்து வித்தியாசமாக காட்டிக் கொண்டார்.

எம்.ஜி.ஆர். ஏழைத் தொழிலாளியாக நடித்திருந்தாலும் கூட அவருடைய தோற்றம் அழகும் கம்பீரமும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதில் முழு கவனம் செலுத்தினார். அவரது ஒரு புகைப்படத்தைப் பார்த்து அவருடைய பெல்ட் வாட்ச் போன்றவற்றைக் கொண்டு அது என்ன படம் என்று ரசிகர்கள் சொல்லிவிடுவர். ஏனெனில் அவர் படத்துக்கு படம் காட்சிக்கு காட்சி இந்த ஆக்சஸரீசை [accessories] மாற்றி மாற்றி அணிந்து வந்தார். அவருடைய ஹேர் ஸ்டைலை பார்த்து 'இது என்ன படம் என்ன பாடல் காட்சி' என்று சொல்லிவிட முடியும். இந்த வகையில் அவர் தன்னை ஒரு ஃபேஷன் ஐகானாக நிரூபித்து கொண்டார்.

பொருத்தமான உடை, நிறம், அணி மணிகள்

எம்.ஜி.ஆர். உடுத்தியிருக்கும் உடைகளும் அவற்றின் வண்ணங்களும் வேறொருவர் உடுத்தினால் அது பொருந்தாது. ஆனால் எம்.ஜி.ஆரின் நிறத்திற்கும் தோற்றத்திற்கும் சுறுசுறுப்புக்கும் விரைவான செயல்பாட்டுக்கும் வேகமான நடைமுறைகளுக்கும் அவருக்கு அந்த உடையும் வண்ணமும் கச்சிதமாக பொருந்தி வரும். நாடோடி மன்னன் படத்தில் அதன் ஆங்கில படமான ஜெண்டாவின் கைதி மற்றும் இஃப் ஐ வேர் அ கிங் படங்களில் ஆங்கில நடிகர்கள் போட்டிருக்கும்



ஆடைகளை விட நேர்த்தியானவையாக எம்.ஜி.ஆர். படத்தில் அவரும் மற்ற நடிக நடிகையரும் உடுத்தியிருப்பார்கள். அவர் அந்த படங்களை காப்பி அடிக்கவில்லை அதை விட சிறப்பாக உடுத்தி இருப்பார்.

பறக்கும் பாவை படத்தில் பெண்ணுக்கு பெண் காதல் கொள்ளும் கன்னி என்று சரோஜாதேவியை எம்.ஜி.ஆர். வருணிப்பார். ஆனால் நடைமுறையில் அவரது ரசிகர்கள் மேடையில் வருணிப்பதைப் போல எம்.ஜி.ஆர். 'ஆணுக்கு ஆண் ஆசைப்படும் பேரழகனாகத்' திகழ்ந்தார். எம்.ஜி.ஆரின் உடையை சுட்டிக்காட்டி ரசிகர்கள் ரசித்து மகிழ்வதை திரையரங்குகளிலும் வெளியே அவர்களின் உரையாடல்களிலும் மேடைப் பேச்சுகளிலும் அறிந்து கொள்ள முடியும். அவர் உடுத்தும் உடையை வேறொருவர் உடுத்தினால் அது அவருக்குப் பொருத்தமில்லாத உடையாகத் தோன்றும் ஆனால் எம் ஜி ஆருக்கு அந்த உடையும் அலங்காரமும் மிக அழகாக எடுப்பாக பொலிவாகத் தோன்றும்

எம்.ஜி.ஆர். ஒரு தீர்க்கதரிசி

எம்.ஜி.ஆர். ஒரு மேசியாவாக பாவப்பட்ட சனங்களுக்கு நற்செய்தி கொண்டு வருபவராக அவரது படங்களில் தோன்றுகிறார். ஒரு தீர்க்கதரிசியைப் போல படத்தின் தொடக்கத்திலேயே 'ஏழைகளின் துன்பம் தொலையும் விடிவுகாலம் பிறக்கும்' என்பதைச் சொல்லி விடுவதால் மக்கள் அந்தப் படத்தை நம்பிக்கையோடு மகிழ்ச்சியோடு ஒவ்வொரு காட்சியையும் பார்க்கின்றனர். நாடோடி மன்னன் படத்தில் முதல் காட்சியில் வேலை கொடு, உணவு கொடு என்று வீராங்கன் தலைமையில் போராட்டம் நடக்கும். பின்னர் வீராங்கனே மன்னனாகி மக்களின் துயர் துடைப்பான். எம்.ஜி.ஆர் படத்தில் எந்தக்

காட்சியையும் விட்டு விட்டு ரசிகர்கள் வெளியே செல்வது கிடையாது.

இடைவேளைக்கு முன்னும் பின்னும் கூட எம்.ஜி.ஆர். பாடல் காட்சிகளைத் துணிந்து வைத்தார். மற்றவர்கள் இவ்வாறு செய்யத் தயங்கினர். ஆனால் எம்.ஜி.ஆர். அதை ஒரு சவாலாக எடுத்துக்கொள்வார். ஒளி விளக்கு படத்தில் வரும் 'நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க' என்ற பாடல் எம்.ஜி.ஆரின் துணிச்சலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இப்பாடல் அப்போது ஆட்சியில் இருந்த திமுகவின் சிறப்புகளை எடுத்துரைத்தது. இவ்வாறு தன் பாடல்களைத் தன் கொள்கையைப் பரப்பும் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டார்.

5. வசூலும் வெற்றியும்

நாடோடி மன்னனின் சிறப்புகள்

1967இல் அறிஞர் அண்ணா சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க முன் வந்தபோது நிருபர்கள் அவரிடம் உங்கள் ஆட்சியின் கொள்கைகள் என்னென்ன என்று கேட்டனர். அதற்கு அறிஞர் அண்ணா ***நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர் என்ன சொல்லியிருக்கிறாரோ அவை தான் எங்கள் ஆட்சியின் கொள்கைகள்*** *என்று பதிலளித்தார். 1958ல் வந்த நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர். சில நாட்கள் மட்டுமே மன்னனாக இருந்து அறிவித்த நல்ல பல திட்டங்களை அண்ணா தன்னுடைய ஆட்சியில் அறிவிக்கவும் செயல்படுத்தவும் விரும்பினார்.*

1958 நாடோடி மன்னன் படம் திரையரங்குகளில் வெளிவந்த போது அதற்கு முன்பு வெளிவந்த மதுரை வீரன் படத்தின் சாதனையை முறியடித்தது. நாடோடிமன்னன் படம் பார்க்க வந்து டிக்கெட் கிடைக்காமல் தவித்து நிற்பவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படக்கூடாது என்பதற்காக அருகிலிருந்த திரையரங்குகளில் எம்.ஜி.ஆர். நடித்த மற்ற படங்களான மதுரைவீரன், மர்மயோகி, சர்வாதிகாரி, மலைக்கள்ளன், குலேபகாவலி,




மகாதேவி, சக்கரவர்த்தி திருமகள், தாய்க்குப்பின் தாரம், அலிபாபாவும் 40 திருடர்களும் போன்ற படங்களை வெளியிட்டன. திரையரங்குகள் தவிர மற்ற எம்.ஜி.ஆர். படங்களை வெளியிட்ட திரையரங்கு உரிமையாளர்களும் மிகப்பெரிய லாபம் அடைந்தனர். நாடோடி மன்னன் படம் இரண்டாவது

வெளியீட்டிலும் 100 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. 1958ல் 25 திரையரங்குகளில் 100 நாட்கள் ஓடி வசூல் சாதனை படைத்த படம், இரண்டாம் வெளியீட்டில் 1963 ஆம் ஆண்டு திருவண்ணாமலை நகரில் மீண்டும் 100 நாட்கள் ஓடியது.

ஆயிரத்து 991-92 ஆண்டுகளில் சென்னையிலும் மற்றும் அதன் சுற்றுப்புற நகரங்களிலும் நாடோடி மன்னன் படம் திரும்பவும் திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. அப்போது சென்னையில் உள்ள திரையரங்குகளில் ஒரு வாரம் ஓடி 47 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வரை ஒரே வாரத்தில் வசூல் சாதனை புரிந்தது, தொடர்ந்து 28, 25 திரையரங்குகளில் நாடோடி மன்னன் திரையிடப்பட்டது.

மதுரை வீரன் படம் தென்னகத்தின் தமிழ்நாட்டில் அதிக திரையரங்குகளில் 50 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. 136 திரையரங்குகளில் மதுரை வீரன் 50 நாட்கள் ஓடியது. ஆனால் அந்த சாதனையை முறியடித்த நாடோடி மன்னன் 157 ஊர்களில் 50 நாட்கள் ஓடிற்று. தமிழ்நாடு தவிர இலங்கை, பெங்களூரு ஆந்திரா, கேரளா, சிங்கப்பூர், பம்பாய் ஆகிய ஊர்களில் உள்ள இடங்களிலும் நாடோடி மன்னன் 50 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. மதுரை வீரனுக்கு அடுத்தபடியாக அதிக பிரிண்டுகள் போடப்பட்ட படம் நாடோடி மன்னன் ஆகும். முதலில் மதுரைவீரனுக்கு 42 பிரிண்டுகள் போட்டனர். இதனைத் தொடர்ந்து அடுத்த சாதனை காவியமான நாடோடி மன்னனுக்கு 58 பிரிண்டுகள் போடப்பட்டன.



சென்னை மாநகரில் முதன் முதலாக உமா, பரதன், ஸ்ரீ கிருஷ்ணா ஆகிய 3 திரையரங்குகளில் 18 வாரங்களைக் கடந்து ஓடியது. சென்னையில் ஆங்கில படங்களுக்கு மட்டுமே முன்பதிவு (ரிசர்வேஷன்) இருந்து வந்த நிலையில் முதன்முதலாக தமிழ் படமான நாடோடி மன்னனுக்கு முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. முன்பதிவு முறை

தொடங்கியதும் ஒருவாரத்துக்கு அனைத்து காட்சிகளுக்கும் முன்பதிவு முடிந்து விட்டது. சென்னையில் 3 திரையரங்குகளிலும் 100 காட்சிகள் என 300 காட்சிகளும் அரங்கு நிறைந்த காட்சிகளாக நடைபெற்றன.


பாரகன் திரையரங்கில் முன்பதிவுக்கு நின்றவர்களின் வரிசை வாலாஜா சாலையின் இருபுறமும் மிகவும் நீண்டுகொண்டே சென்றதால் மக்கள் கூட்டம் இரண்டு மடங்காக பெருகி சென்னை வாழ் மக்களை வியப்பில் ஆழ்த்தியது. கிருஷ்ணா திரையரங்கில் முன்பதிவு செய்ய வந்த கூட்டத்தினரை காவலர்கள் வரிசையில் நிற்கும்படி கட்டுப்படுத்தி தடியடி நடத்தினர். உமா திரையரங்கில் நள்ளிரவு காட்சி முடிந்த பிறகும் டிக்கெட் வாங்குவதற்கு மக்கள் பெரும் கூட்டமாக கூடினர். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வரிசையில் நின்றனர்.

மதுரை நகரில் தங்கம் திரையரங்கம் தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய திரையரங்கம் அங்கு ஒரு காட்சிக்கு 2,500 பேர் அமர முடியும். இந்த திரையரங்கில் 140 நாட்கள் வெற்றிகரமாக நாடோடிமன்னன் படம் ஓடியது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய தலைநகரங்களில் 20 வாரங்களுக்கு மேல் தொடர்ந்து ஓடிய வெற்றிப்படம் நாடோடி மன்னன் ஆகும். சேலம் மாநகரில் நியூ சினிமா திரையரங்கில் 147 நாட்கள் 150 நாட்கள் ஓடியது. பின்பு சித்தேஸ்வரா அரங்கில் வெள்ளிவிழா கண்டது.

மதுரைவீரன் படத்துக்கு பிறகு திருச்செந்தூரில் 50 நாட்கள் ஓடி வெற்றி பெற்ற படம் நாடோடி மன்னன் ஆகும். இதுவரை அங்கு உள்ள ஸ்ரீ கிருஷ்ணா திரையரங்கில் 20 க்கு அதிகமான முறை இப்படம் திரையிடப்பட்டுள்ளது. திருச்செந்தூர் அருகிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் நாடோடிமன்னன் படம் மலைக்கள்ளன் படத்துக்கு அடுத்தபடியாக 50 நாட்கள் ஓடியது. இங்கே உள்ள ஜவகர் திரையரங்கில் நாடோடி மன்னன் படம் பலமுறை வெளியீட்டின்போது 4 வாரங்கள் வரை ஓடி வசூல் சாதனை செய்துள்ளது. உடன்குடி என்ற ஊரில் சண்முகானந்தம் அரங்கில் நாடோடி மன்னன் வசூல் சாதனை புரிந்தது. முதல் வெளியீட்டில் ஏழு வாரங்கள் ஓடிய படம் நாடோடி மன்னன் ஒன்று மட்டுமே.

தென் மாநிலங்களில் நாடோடி மன்னன்

கேரளாவில் நாடோடி மன்னன் படம் திருவனந்தபுரம், கொல்லம், திருச்சூர், பாலக்காடு, எர்ணாகுளம், ஆலப்புழா ஆகிய ஊர்களில் வெற்றி நடை போட்டது. பெங்களூரில் நாடோடி மன்னன் சென்னையைப் போலவே கீதா, ஸ்வஸ்திக், நியூரோ என்ற மூன்று திரையரங்குகளில் திரையிடப்பட்டது. திரையுலக சரித்திரத்தில் மூன்று திரையரங்குகளில் திரையிடப்பட்ட முதல் படம் நாடோடி மன்னன் ஆகும். மைசூர் நகரில் 80 நாட்கள் ஓடியது. ஆந்திராவில் உள்ள சித்தூர் நகரில் பிரமிளா திரையரங்கில் 100 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. கேரளாவில் திருவனந்தபுரம் 77 நாட்கள் ஓடிய முதல் தமிழ் படம் நாடோடி மன்னன்.



நம் நாடு 13-2-59

எம். ஜி. ஆர். அறநிலை நிதி

15-2-59 ஞாயிறு அன்று

'நாடோடி மன்னன்'

சிறப்புக் காட்சிகள்

★

பெங்களூர்:	கீதா டாக்கீஸ்	... காட்சி நேரம் ...	காலை 9-30 மணி
	ஸ்வஸ்திக் டாக்கீஸ்	... ,,	,, 10-15 ,,
	நியூ அபேரா டாக்கீஸ்	... ,,	,, 1-30 ,,

நுழைவுக் கட்டணம்—எல்லா வகுப்புகளுக்கும்: ரூ. 1. (ஒரு ரூபாய்)

மேடையில் எம். ஜி. ஆர்., எம். ஜி. சக்கரபாணி, எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா முதலியோர் தோன்றுவார்கள்.

★

வசூலாகும் தொகை முழுவதும் எம். ஜி. ஆர். அறநிலை நிதிக்கு அளிக்கப்படும்.

—எம். ஜி. ஆர். அறநிலை நிதிக்குழு, பெங்களூர்

S. நாராயணன் B. Com. A. C. A., ஆடிட்டர்,
176, 6-வது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9.

★

மாலை நிகழ்ச்சி:

பெங்களூர் சிடி சம்பங்கி ஸ்டேடியத்தில்—மாலை 6-30 மணிக்கு

மாபெரும் வரவேற்பு விழா

எம். ஜி. இராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி, எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா ஆகியோர் கலந்து கொள்ளுவார்கள்.

டாக்டர் டி. பி. பார்த்தசாரதி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை வகிப்பார்.

முசிறிபுத்தன் குழுவினர் 'கலைவாணர் கதை'

வில்லுப் பாட்டுடன் நிகழ்ச்சிகள் துவங்கும்.

★

நுழைவுக் கட்டணம்: 25 புதிய காசுகள்.

அந்தமான் தீவுகளில் எம்.ஜி.ஆருக்கு பணத்தோட்டம் படம் வந்தபோது அப்போதைய பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தை திறந்துவைத்தார். அங்கு எம்.ஜி.ஆருக்கு நிறைய ரசிகர்கள் உண்டு. நாடோடி மன்னன் படம் அந்தமான் தீவில் வெளியான போது

அங்கு ஒரு மாதத்திற்கும் அதிகமாக இப்படம் ஓடி நல்ல வசூலைப் பெற்றது. ஒவ்வொரு முறை படம் திரையிடப்படும் போதும் ஒரு வாரம் பத்து நாள் 12 நாட்கள் என்று ஓடுவது வழக்கம். அந்தமான் தீவுகளை போலவே மொரிஷியஸ் தீவில் நாடோடி மன்னன் படம் திரையிடப்பட்டு வசூல் சாதனை புரிந்துள்ளது.

வெளிநாடுகளில் நாடோடி மன்னன்

அயல்நாடுகளில் நாடோடி மன்னன் வெளியீடு தமிழர் வாழும் நாடுகள் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் நாடோடி மன்னன் வெற்றி நடை போட்டது. சிங்கப்பூரில் ராயல் என்ற திரையரங்கில் 57 நாட்கள் ஓடியது. சிங்கப்பூரில் தீபாவளி அன்று வெளியான நாடோடி மன்னன் படத்துக்காக சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டது. முதல்முறையாக சிங்கப்பூர் நாட்டில் ஒரு தமிழ் படத்துக்கு தமிழ் மலர் வெளியிட்ட பெருமை ஷா பிரதர்ஸ் என்ற நிறுவனத்தையும் தமிழ் மலர் நாளிதழையும் சேரும். மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் 48 நாட்களும் அதே நாட்டில் பினாங்கு என்ற இடத்தில் ராயல் திரையரங்கில் 50 நாட்களும், தைப்பிங் நகரத்தில் லீடோ மற்றும் ரெக்ஸ் திரையரங்குகளிலும் நாடோடி மன்னன் திரையிடப்பட்டது.

எகிப்து, ஜெர்மனி, இந்தோனேசியா, குவைத், ஈரான், பர்மா, வியட்நாம், பாரிஸ் நகரம் போன்ற இடங்களிலும் நாடோடி மன்னன் படம் சப்-டைட்டிலுடன் வெளிவந்தது. அங்கு வாழ்ந்த தமிழர்களும் மற்ற இனத்தவரும் நாடோடிமன்னன்

படம் ஆங்கில படத்துக்கு நிகராக எடுக்கப்பட்டுள்ளது என்று பார்த்து பாராட்டினர்.

தமிழகத்தில் விழா மலர்

தமிழகத்தில் நாடோடி மன்னன் படத்துக்கு விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. இந்த வெற்றி மலர் அதற்கு முன்பு வேறு எந்த படத்திற்கும் வெளியிடப்படவில்லை. இம்மலரை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனமே தயாரித்து வெளியிட்டதுதான் இதன் சிறப்பாகும். மதுரையில் நடந்தது போல மற்ற மாவட்ட தலைநகரங்களிலும் நாடோடி மன்னன் படத்துக்கு வெற்றி விழா கொண்டாடப்பட்டது. சேலம் நகரில் வெற்றி விழா எடுத்தபோது அதற்கு நாவலர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். சேலத்தில் உள்ள போஸ் மைதானத்தில் இவ்விழாவை காண சுமார் 2 லட்சம் பேர் வந்திருந்தனர். முதல் 11,000 அடி கருப்பு வெள்ளையிலும் இடைவேளைக்கு பின்பு 7,000 அடி வண்ணத்திலும் தயாரிக்கப்பட்டு இருந்தது.

நாடோடி மன்னன் படத்தின் வெற்றி விழா

தமிழ்த்திரையுலக வரலாற்றில் முதன் முறையாக நாடோடி மன்னன் படத்திற்குத்தான் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. எம்.ஜி.ஆர். படத்தில் நடித்தவர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் ஒரு பவுன் மோதிரம், தங்கச்சங்கிலி, வெள்ளித்தட்டு என பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார். அவர்களில் சிலர் எம்.ஜி.ஆருக்கு வெள்ளிக் கோப்பை வழங்கினர்.

நாடோடி மன்னன் பட வெற்றி விழாக்கள் 1958ல் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்த நாடோடி மன்னன் திரைப்படம் பல சிறப்புகளை கொண்டதாகும். அதன் முதல் பாதி 11,000 அடி கருப்பு வெள்ளையிலும் இடைவேளைக்கு பின்பு 7,000 அடி வண்ணத்திலும் எடுக்கப்பட்டது. அதில் முதல் பாதியில் பானுமதி எம்.ஜி.ஆருக்கு ஜோடியாகவும் பிற்பாதியில் சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு ஜோடியாகவும் நடித்து இருந்தார். மன்னன் மார்த்தாண்டனுக்கு எம்.என். ராஜம் ஜோடியாக மனோகரி என்ற பெயரில் நடித்திருந்தார். இப்படம் பெரிய வெற்றி பெற்றதால் அனைத்து மாவட்டங்களிலும், தலைநகரங்களில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

மதுரையில் டிசம்பர் 2ஆம் தேதி அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தமுக்கம் மைதானத்தில் வெற்றி விழா நடந்தது. சென்னையில் எஸ்.ஐ.ஏ.எ. திடலில் நவம்பர் 30ஆம் நாள் நாடோடி மன்னன் படத்தின் வெற்றி விழா நூறாவது நாள் அன்று நடைபெற்றது. இதனை தொடர்ந்து மதுரை, நெல்லை, திருச்சி, கோவை, தஞ்சாவூர், ஈரோடு, வேலூர் ஆகிய ஊர்களில் தொடர்ந்து அடுத்தடுத்த நாட்கள் வெற்றி விழாக்கள் நடந்தேறின.

மதுரையில் நாடோடி மன்னன் வெளியான 102வது நாளன்று டிசம்பர் இரண்டாம் நாள் தமுக்கம் மைதானத்தில் வெற்றி விழா நடந்தது. எம்.ஜி.ஆருக்கு 110 பவுனில் தங்கவாள் பரிசு அளிக்கப்பட்டது. அடுத்த நாள் நெல்லை மாநகரத்தில் டிசம்பர் 3ஆம் தேதி நகர்மன்றத்

தலைவர் பா.ரா. அவர்கள் தலைமையில் 104 ஆவது நாள் அன்று வெற்றி விழா நடைபெற்றது.

திருச்சி மாநகரத்தில் டிசம்பர் 4ஆம் நாள் திரு ஏ.வி.எஸ். பரிசுத்த நாடார் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நூற்றி ஐந்தாவது நாளன்று வெற்றி விழா நடைபெற்றது.

கோயமுத்தூரில் டிசம்பர் ஐந்தாம் நாளன்று படம் வெளியாகி நூற்றி ஆறாம் நாளில் ராஜா தியேட்டரில் சந்திரபிரபா நிறுவனத்தாரின் தலைமையில் நாடோடி மன்னனின் வெற்றி விழா நடந்தது. அதற்கு அடுத்த நாள் படம் வெளியான 107 வது நாள் அன்று டிசம்பர் ஆறாம் தேதி தஞ்சாவூர் யாகப்பா திரையரங்கில் டாக்டர் மூர்த்தி தலைமையில் வெற்றி விழா, ஈரோட்டில் ஒன்பதாம் தேதி நாடோடி மன்னன் நூறாவது நாள் விழா நடைபெற்றது. பத்தாம் தேதி வேலூர் பாரக்ஸ் நிறுவனத்தின் மைதானத்தில் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் நாடோடி மன்னனின் நூற்றி பத்தாவது நாள் விழா நடைபெற்றது. இவை தவிர சிறு ஊர்களில் 50 நாள் 75 நாள் 100 நாள் 175 நாட்கள் 150 நாட்கள் என அங்கங்கு ஓடியதற்கு தக்கவாறு விழாக்கள் எடுக்கப்பட்டன.

பத்திரிகைகளில் விளம்பரம்

தமிழ் திரையுலக வரலாற்றில் ஒரு தமிழ் படத்திற்கு நூறாவது நாள் விழா கொண்டாடி அதை பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டது நாடோடி மன்னன் படத்திற்குதான். எல்லா ஊர்களிலும் நாடோடி மன்னன் படத்துக்கான விழா

நடக்கும்போது அனைத்து கலைஞர்களுக்கும் சிறப்பு செய்யப்பட்டது இதுவும் ஒரு முன்மாதிரி சிறப்பாகும்.

சென்னையில் எஸ்.ஐ.ஏ.எஸ். திடலில் மிகப்பெரிய கூட்டத்திற்கு மத்தியில் வெற்றி விழாவில் மேடையில் வைத்து தனக்கு இயக்குனர், படம் இயக்குவதில் முன்னோடியாக முதல் ஆசானாக விளங்கிய திரு ராஜா சந்திரசேகர் அவர்களுக்கு எம்.ஜி.ஆர். ஐயாயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கிச் சிறப்பித்தார். இப்படத்தில் நடித்த நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் என 100 பேருக்கும் எம்.ஜி.ஆர். கேடயமும், தங்க மோதிரமும் தன்னுடைய எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் சார்பில் வழங்கி சிறப்பித்தார். இவ்வகையில் மிகப் பெரிய லாபம் பெறும் ஒரு நிறுவனம், தயாரிப்பாளர்கள், பட தயாரிப்பு நிறுவனம் தன்னுடைய லாபத்தின் ஒரு பகுதியை இப்படத்திற்காக பணியாற்றியவர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும் என்ற பகிர்வு கோட்பாட்டை எம்.ஜி.ஆர். முன்னெடுத்து செய்து நடத்தினார்.

நாடோடி மன்னன் படத்திற்கு பல காட்சிகளை உருவாக்குவதற்கு வாகினி ஸ்டூடியோவை கொடுத்து உதவிய திரு நாகிரெட்டியார் அவர்களுக்கு எம்.ஜி.ஆர். பிக்சர் சார்பில் அன்புச் சின்னம் ஒன்று அறிஞர் அண்ணாவின் கைகளால் வழங்கப்பட்டது.

சிறப்பு அழைப்பாளர்கள்

திரையுலகம் என்பது கூத்தாடிகளின் கொட்டாரம் என்று கருதி இருந்த காலத்தில் ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு, வெற்றி விழா கொண்டாடுவதும், அவ்விழாவிற்கு படித்த அறிஞர்

பெருமக்களை அழைப்பதும் அக்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். இந்நிலையில் எம்.ஜி.ஆர். தன்னுடைய நாடோடி மன்னன் திரைப்படத்தின் வெற்றி விழாவுக்கு படித்த பெருமக்கள் பலரை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து கௌரவப்படுத்தினார். இதனால் படித்தவர்கள் மத்தியில் எம்.ஜி.ஆர். படத்துக்கு ஒரு தனி மரியாதை ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். மீதும் அறிஞர் பெருமக்களுக்கு மிகுந்த மரியாதை உண்டாயிற்று. படவிழாவுக்கு நீதிபதி வி.ராமன், பின்னாளில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் மு.வரதராசனார், நீதிபதி பஷீர் அகமது, நாவல் ஆசிரியர் சாண்டில்யன், கிருஷ்ண ஐயர் போன்றோர் நாடோடி மன்னன் திரைப்பட விழாவுக்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டு கவுரவிக்கப் பட்டனர்.

'யாருக்கு வெற்றி?'

நாடோடி மன்னன் படத்தை தயாரித்த எம்.ஜி.ஆர். இப்படத்தின் வெற்றி தனக்கு மட்டுமே உரிமையானது அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் 'யாருக்கு வெற்றி?' என்ற தலைப்பில் இப்படத்தில் பங்குகொண்ட அனைவரைப் பற்றியும் பாராட்டி எழுதினார். இப்படத்தில் பங்கு கொண்டவர்கள் எம்.ஜி.ஆரின் சிறப்பியல்பை பாராட்டி அவருக்கு 5 அடி உயரமுள்ள வெள்ளி கோப்பையில் சீனி நிரப்பி கொடுத்தனர்.

எம்.ஜி.ஆர். தனது தயாரிப்பு நிறுவனம் மூலமாக இப்படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் நினைவுப்

பரிசு வழங்கினார். சிலருக்கு ஒரு பவுன் தங்க மோதிரமும் வேறு சிலருக்கு வெள்ளி தட்டுகளும் அவரவர் பங்களிப்புக்கு ஏற்ப வழங்கப்பட்டது. [அட்டைப்படத்தில் எம்.ஜி.ஆர் அளித்த மோதிரம் படம் இடம் பெற்றுள்ளது].

இப்படத்தில் மன்னன் மார்த்தாண்டனுக்கு ஜோடியாக நடித்த எம் என் ராஜம் எம்.ஜி.ஆர். முதல்வரானதும் தமிழக அரசின் விளம்பரத் திரைப்படத் பிரிவில் சேர்க்கப்பட்டு படங்களுக்கு பின்னணி குரல் கொடுத்தார். வீராங்கனுக்கு ஜோடியாக நடித்த பி பானுமதி எம் ஜி ஆர் முதலவரானதும் தமிழ் இசை கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்பட்டார். மேடையில் எம் ஜி ஆர் பி பானுமதியின் சிறப்பியல்புகளை விரிவாக எடுத்துக்கூறி ஒரு தகுதியான நபரைத்தான் நான் நியமித்திருக்கிறேன் என்று மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்தார். அவருக்கு மிக உயர்ந்த பதவியை அளித்தார் அதன்பிறகு பானுமதி எம்.ஜி.ஆரைப் பற்றி வானளாவ புகழ்ந்து பேட்டியளித்தார். அவரை ஒரு தெய்வம் தெய்வப்பிறவி எனப் பலவாறு புகழ்ந்தார. சரோஜாதேவி திருமணமாகி பெங்களூரில் தங்கி விட்டார். அவர் கணவர் இறந்த போது எம் ஜி ஆர் அவரை அரசியலுக்கு வருகிறாயா என்று கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். சக கலைஞர்கள் பரிசளித்த வெள்ளிக் கோப்பை எம்.ஜி.ஆர். நினைவில்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு பணம் கொடுத்தவர்களின் முகங்களின் படங்கள் சுற்றிலும் ஒட்டிவைக்கப்பட்டுள்ளது.

6. நாடோடி மன்னனாகி நாடாண்ட வரலாறு

நாடோடி மன்னன் கதை எம்.ஜி.ஆரின் சொந்த வாழ்க்கைக்கு முற்றிலும் பொருத்தமாக இருந்தது. வீராங்கனைப் போல வறுமையில் சிக்கி வாழ்க்கை போராட்டத்தில் துவண்டு உணவு கொடு என்ற வேட்கையுடன் பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்த இவர் கடைசியில் மார்த்தாண்டனை போல மன்னனாகி விட்டார். . இப்படத்தில் அவர் இரண்டு வேடங்கள் ஏற்று நடித்திருந்தார். ஒன்று நாடோடி வீராங்கன் மற்றொன்று மன்னன் மார்த்தாண்டன் இருவரும் கைகுலுக்கி கொள்வதும், ஒருவர் நாற்காலியில் அமர்ந்திருக்க அடுத்தவர் அந்த நாற்காலியைச் சுற்றி வருவதும் ஒருவர் முகத்தை ஒருவர் தொடுவதும் என அந்தக் காலகட்டத்திலேயே இரட்டைவேடம் கேமரா தொழில் நுட்பத்தைக் கொண்டு மிகச் சிறப்பாக எம்.ஜி.ஆர். காண்பித்திருந்தார். இதனைப் பலரும் வியந்து பாராட்டினர். சொந்த வாழ்விலும் இவர் திரையுலகில் கொடி கட்டி பறக்கும் போதே இவர் மக்கள் மனதில் மன்னனாகக் கோலோச்சினார். இருவரும் ஒருவராகவே மக்களால் உணரப்பட்டனர். அவர் சினிமாவிலும் ஏழை பங்களானாக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். பின்னர்

அரசியல் தலைவராக உயர்ந்து தமிழகத்தின் முதல்வரானார்.

சொந்த வாழ்வில் எம்.ஜி.ஆர். ஒரு நாடோடியாக தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். அவருடைய முன்னோர் மன்றாடியார் வகுப்பைச் சேர்ந்த தமிழர்கள். அப்போது சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை மாவட்டங்கள் மைசூரை ஆண்ட திப்பு சுல்தானின் ஆட்சியில் இருந்தது. இஸ்லாம் சமயத்துக்கு மதம் மாற விரும்பாமல் [கல ஆய்வில் கிடைத்த தகவல். மேலும் ஆய்வுக்கு உரியது]. உயிருக்குப் பயந்து கொங்கு நாட்டிலிருந்து மலையாள நாட்டுக்குச் சென்று பாலக்காடு பகுதியில் குடியேறிவிட்டனர். முன்னோர்களும் ஒரே நாட்டுக்குள் புலம்பெயர்ந்தோர். இவர் தந்தையும் தாயும் இந்திய நாட்டை விட்டு இலங்கை நாட்டுக்குப் பிழைப்புக்காக இடம்பெயர்ந்தனர். ஒரு வகையில் இவர்களும் நாடோடிகளே, பின்பு இலங்கையிலிருந்து இரண்டு வயதில் தன் தாயாரோடும் சகோதரர்களோடும் இந்திய நாட்டுக்குப் புலம்பெயர்ந்து வந்த எம்.ஜி.ஆர். கேரளாவில் பிழைக்க வழியின்றி வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில் தடம் பதித்தார்.

கண்டியில் தன் கணவர் இறந்ததும் சொந்த ஊர் திரும்பிய சத்யபாமா அம்மையார் தன் சொந்த ஊரான மருதூருக்கு அருகில் உள்ள வடவனுரில் ஒரு வீடு வாங்கி அங்கு குடியேறினார். அங்கு பலரும் இவரது வறுமையை கண்டு சிறு குழந்தையாக இருந்த எம்.ஜி.ஆரை விற்றுவிடும்படி கூறினார்.

அவர்களிடம் சத்யபாமா அம்மையார் என் இரு பிள்ளைகளும் ராமர் இலட்சுமனர் மாதிரி இருக்கின்றனர். அவர்களை விற்று நான் உயிர் வாழ வேண்டியதில்லை என வீராவேசமாகச் சொல்லிவிட்டு அங்கு இருக்க விருப்பமின்றி தன் கணவர் மாஜிஸ்டிரேட்டாக இருக்கும் சமயத்தில் அவர் கீழே போலீஸ்காரராகப் பணி புரிந்த வேலு நாயர் அழைப்பின் பேரில் தமிழ்நாட்டின் கும்பகோணத்துக்கு வந்தார். அப்போது எம்.ஜி.ஆருக்கு இரண்டு வயது.

கேரளாவில் சத்யபாமா தன் குழந்தைகள் இருவருடன் சில மாதங்கள் இருந்த வடவனூர் வீட்டை எம்.ஜி.ஆர். அங்கன்வாடி நடத்திக் கொள்ளும்படி விட்டிருந்தார். அங்கு அவரது உறவினர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இப்போது காலமாகிவிட்டனர். அந்த வீடு புதர் மண்டி கிடந்தது. தொலைகாட்சி செய்தி வாயிலாக இதனை அறிந்த மனித நேய அறக்கட்டளையின் தலைவர் சைதை சா.துரைசாமி அவர்கள் அவ்வீட்டை அழகுறப் புதுப்பித்து கேரளா ஆளுனரை கொண்டு 2019ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் நாள் திறப்புவிழா நடத்தினார். அங்கு சத்யபாமா அம்மையாருக்கும் கோபாலம் மேனனுக்கும் பளிங்கில் மார்பளவு சிலைகளை நிர்மாணித்தார். எம்.ஜி.ஆருக்கு இரண்டு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. சபரி மலைக்குப் புனித யாத்திரை செல்வோர் இங்கு வந்து இவ்வில்லத்தைப் பார்வையிட்டுத் தங்கி செல்லும்படி புதுப்பிக்கப்பட்டு உள்ளது. எம்.ஜி.ஆரை பற்றிய நூல்களும் படங்களும் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.



கேரளாவில் உள்ள எம்.ஜி.ஆர். வாழ்ந்த வீடு சிதிலமடைந்த நிலையில் இருக்கும் காட்சி. பழைய படம்)



சைதை துரைசாமியின் மனிதநேயம் மையத்தின் செலவில் புனரமைக்கப்பட்டு புதிய பொலிவுடன் எம்.ஜி.ஆர். வாழ்ந்த வீடு.

இரண்டு வயதில் வளமான தஞ்சையின் அருகிலுள்ள கும்பகோணத்திற்கு வந்த எம்.ஜி.ஆர். அங்கிருந்த ஆனையடி பள்ளியில் இரண்டு வகுப்புகள் படித்தார். மூன்றாம் வகுப்பு படிக்கும்போதே வறுமை வாட்டிய காரணத்தால் அவரும் அவர் அண்ணனும்

பாய்ஸ் நாடகக்கம்பெனியில் சேர்க்கப்பட்டனர். இப்போதும் இவர் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு வந்த நாடோடி தான். தாத்தா, தந்தை, தான் என மூவரும் நாடோடிகளாக இருந்தாலும், இறுதியில் எம்.ஜி.ஆர். நாடாண்ட மன்னன் ஆனார். தமிழ்நாட்டின் தலைசிறந்த முதல்வரானார். தன் ஆயுள் முடியும்வரை தமிழ்நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கினார். ஆக நாடோடி மன்னன் என்ற படத்தில் இவரே நாடோடியாக, மன்னனாகவும் இரு வேடங்களில் நடித்திருந்தாலும் சொந்த வாழ்வில் நாடோடியாக இருந்து மன்னனான ஒரே மனிதர் என்ற பெருமை எம்.ஜி.ஆரை மட்டுமே சேரும்.

நாடோடி மன்னன் படத்தை அவர் பத்மா சுப்ரமணியத்தின் தந்தை டைரக்டர் கே சுப்ரமணியத்தை அழைத்து இயக்கும்படி வேண்டினார். அதற்கு முன்பு அவருடைய ஆசானான ராஜா சந்திரசேகரின் தம்பி டி.இரகுநாத் என்பவரை படம் இயக்க அழைத்திருந்தார். இவர்கள் இருவரும் சிறந்த இயக்குனர்கள் என்றாலும் இறைவன் இவர்களை விலக்கி வைத்துவிட்டு எம்.ஜி.ஆருக்கு அந்த பொறுப்பை வழங்கியதால் அந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இவர்கள் இயக்கி இருந்தால் கூட இப்படம் 100 நாட்கள் தான் ஓடி இருக்கும். ஆனால் எம்.ஜி.ஆரின் இயக்கத்தினால் இப்படம் 250 நாளை தொட்டது. மதுரை, சேலம், திருச்சி, கோவை, நெல்லை, சென்னை என அனைத்து மாவட்டங்களிலும் வெற்றி விழா கொண்டாடிய முதல் படம் நாடோடி மன்னன் மட்டுமே ஆகும்.

எம்.ஜி.ஆர். கதை தேர்வில் ஐம்பது சதவீத வெற்றி பெற்றுவிட்டார். அவர் தெரிவு செய்த கதை

ஆங்கிலத்தில் வேறுவிதமாக இருந்தாலும் கூட அதை தமிழில் மாற்றும் போது தமிழ் பண்பாட்டுக்கு ஏற்ப மாற்றி அமைத்ததால் கதை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கதையில் பல திருப்பங்கள் இருந்தாலும் தொய்வு ஏற்படாமல் அடுத்தடுத்த காட்சிகளை விறுவிறுப்பாக அமைத்திருந்தார். இதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆருக்கு எடிட்டிங் துறையில் நல்ல ஈடுபாடும் தேர்ச்சியும் இருந்ததுதான். அவர் எந்த படத்திலும் எடிட்டராக பணி புரியாவிட்டாலும் அவருடைய மனக்கண்ணில் அடுத்தடுத்து எந்த காட்சிகளை வைத்தால் படம் விறுவிறுப்பாக ஓடும் என்பது தெரிந்திருந்ததால் அவருடைய காட்சி தொகுப்பு மிகச் சிறப்பானதாக இருந்தது. இரண்டு மூன்று எடிட்டர்கள் உதவினர். கடைசியில் ஜம்பு முடித்துக் கொடுத்தார்.

நாடோடி மன்னன் படத்தில் மட்டுமல்ல எம்.ஜி.ஆர். தான் நடித்த எல்லா படங்களிலும் எடிட்டிங் டேபிளில் போய் உட்கார்ந்து விடுவது வழக்கம். குறிப்பாக தன்னுடைய காட்சிகளை மட்டுமாவது அவர் சரி பார்த்துவிட்டு தான் படத்தை வெளியிட அனுமதிப்பார். படத்தின் விறுவிறுப்புக்கு காட்சி தொகுப்பு காரணம் என்பதனால் எடிட்டிங் தொடர்பான பணிகளில் இவருடைய தலையீடு எப்போதும் இருக்கும்.

பல்லாண்டு வாழ்க படமெடுக்கும்போது ஒரு சண்டைக்காட்சியை தொகுத்த எடிட்டர் அக்காட்சி விறுவிறுப்பாக அமையவில்லை என்பதை உணர்ந்து தயாரிப்பாளரிடம் தெரிவித்தார். தயாரிப்பாளர் எடிட்டரின் எண்ணத்தை எம்.ஜி.ஆரின் கவனத்திற்கு

கொண்டு சென்றார். நான் வருகிறேன் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். பிறகு ஒருநாள் எம்.ஜி.ஆர். எடிட்டருடன் அமர்ந்து மளமளவென்று ஒரு சில காட்சிகளை வெட்டி மாற்றி ஒட்டி கொடுத்து விட்டு வந்து விட்டார். சில நிமிடங்களில் அவர் அந்த சண்டைக்காட்சியை விறுவிறுப்பான காட்சியாக மாற்றித் தந்த அதிசயத்தை நேரில் பார்த்த எடிட்டர் அசந்து போய்விட்டார். எம்.ஜி.ஆருக்கு அன்றைக்கு எடுக்கப்பட்ட சண்டை காட்சிகள் அத்தனையும் நினைவில் இருந்ததால் அவர் காட்சி தொகுப்பில் மிகச் சரியாக விறுவிறுப்பான காட்சிகளை அடுத்தடுத்து கவனமாக எடுத்து தொகுத்து கொடுத்து விட்டார். இவ்வாறு இயக்குனர் பணியையும் எடிட்டர் பணியையும் இணைந்து செய்தவர் எம்.ஜி.ஆர். இதனால் மூன்றே முக்கால் மணி நேரம் ஓடிய நாடோடி மன்னன் ரசிகர்களுக்கு அலுப்புத்தட்டாமல் விறுவிறுப்பாக இருந்தது.

எம் ஜி ஆரின் **வெற்றிக்கு முக்கிய காரணங்கள்** அவருக்கு இருந்த நினைவாற்றல், கடும் உழைப்பு, திரைப்படத்துக்கான அனைத்து துறைகள் பற்றிய விரிவான அறிவு,, தொழிநுட்பம் பற்றிய நுணுக்கமான் அறிவு, ஆட்களோடு இணைந்து செல்லும் பண்பு, பெண்களிடம் கண்ணியமாக பழகுதல் , ஒருவரையும் சாதி, மதம் உருவம் , குணம் பற்றி குறிப்பிட்டு பேர் சொல்லி அழைக்காத தன்மை, உள்நாடு, வெளிநாடு, வெளி மாநிலம் என எங்கேயும் அநீதியை துணிந்து எதிர்க்கும் துணிச்சல், உடன் இருப்பவர்களுக்கு வேண்டிய தேவை அறிந்து உதவும் நற்குணம். எவர் துன்புற்றாலும் அவர் கேட்காமலே அவருக்கு தேவையானவற்றை செய்து கொடுக்கும் தாளாண்மை.

தன்னை விமர்சித்தவர் மற்றும் தன்னைப் பகைவனாகக் கருதி பலரிடம் தன்னைத் தூற்றியவர் கூட வறுமையுற்ற போது அவர்கள் வாய் திறந்து கேட்காமலேயே அவர்களுக்கு உதவிய அருட்குணம், கேட்டவுடன் உதவும் குணம் என பல நற் பண்புகள் அவருக்கு இருந்ததால் அவர் வெற்றியின் உச்சத்தைத் தொட்டிருந்தார். இன்னும் சில ஆண்டுகள் ஆரோக்கியமாக இருந்திருந்தால் அவர் அரசியலில் இன்னும் பல உயரங்களைத் தொட்டிருப்பார். ராஜிவ் காந்தி பிரதமராக இருந்த போது எம் ஜி ஆர் இந்தியா இலங்கை உறவு மேம்பட எடுத்துக்கொண்ட முயற்சிகளை கண்டு பாராட்டினார். ஜெயலலிதாவை தமிழகத்தின் முதல்வராக்கிவிட்டு எம் ஜி ஆரை குடியரசு தலைவராக்கலாம் என்று கூட பலர் சிந்தித்தனர்

நாடோடி மன்னன் படத்தின் கடைசி காட்சி ஆங்கிலப் படத்திற்கு நிகராக அந்தக் காலத்தில் எடுக்கப்பட்டிருந்தது என்று பத்திரிகைகள் புகழ்ந்த படம். பார்த்தவர்களும் பாராட்டினர். படம் சிறப்பாக அமைவதற்கு எம்.ஜி.ஆர். தன் உயிரையும் பொருளையும் பணயமாக வைத்து பாடுபட்டார் அரும்பாடுபட்டார் என்று பி.எஸ்.வீரப்பா எம்.ஜி.ஆரை பாராட்டியிருந்தார். நாடோடி மன்னன் படத்தின் வெற்றி மகத்தானது என்று அவர் வியந்து கூறியிருந்தார்.

கதைத் தேர்விலும் இயக்கத்திலும் காட்சி தொகுப்பிலும் அதிகக் கவனம் செலுத்தி வந்த எம்.ஜி.ஆர். நடிகர் நடிகை தேர்விலும் இதே கவனத்தைச் செலுத்தினார். ஒரு படத்துக்கு கதை தாய்; இயக்கம் தந்தை; என்பது எம்.ஜி.ஆரின் நம்பிக்கை. அதேபோல் **ஒரு படத்துக்கு கால் இருக்க**

வேண்டும். அப்போதுதான் அந்த படம் தன்னளவில் சுயமாக நிற்கும் என்பதும் எம்.ஜி.ஆரின் ஆழமான கொள்கையாக இருந்தது. படத்துக்கு கால் என்பது துணை எழுத்தாகும் அதாவது துணைக்கால் ஆகும். துணைக்கால் சேர்த்தால்தான் ஒரு **படம் பாடமாக (படிப்பினையாக)** நிற்கும் ஆக எம்.ஜி.ஆர். நடிக்கும் அனைத்துப் படங்களும் பாடங்களாக அமைந்ததற்கு முக்கிய காரணம் அவர் அந்தப் படங்கள் பாடங்களாக நிற்க வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியும் அக்கறையும் ஆகும்.

நாடோடி மன்னன் படம் ஒரு பாடமாக திகழ வேண்டும் என்ற எண்ணத்தில் மன்னராட்சி மறைந்து மக்களாட்சி மலர வேண்டும் என்பதை படத்தின் கருப்பொருளாகக் கொண்டிருந்தார். ஆட்சி செய்பவர் மக்களாக இருந்தாலும் மன்னராக இருந்தாலும் ஆட்சிமுறை என்பது நேர்மையும், நீதியும் மக்கள் மீது அன்பும் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்த எம்.ஜி.ஆர்., அதனையே தன் தாரக மந்திரமாக்கி இப்படத்தின் மையக் காட்சியை அமைத்திருந்தார். புரட்சிப் படையில் சேர்ந்து நாடோடியாக திகழும் வீராங்கன் ஓரிரு நாட்களுக்கு மட்டும் மன்னன் மார்த்தாண்டன் ஆக மாற வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படும் போது அவன் அந்த மாற்றத்தை நாட்டுக்கான நல்ல மாற்றமாக மாற்ற விரும்பி மன்னராக இருக்கும் ஒரு சில நாட்களும் அதிகாரத்தோடு இருக்கவேண்டும் என்பதை மந்திரியிடம், தளபதியிடமும் கேட்டுப் பெறுகின்றான். இது வீராங்கன் எழுப்பிய உரிமைகுரல் ஆகும்.

வீராங்கன் மன்னனாக தன் கடமையைச் செய்ய அனுமதி பெற்றவுடன் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் அரசவையில் தான் கொண்டுவந்த புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துகிறான். இந்த திட்டங்கள் நல்லதோர் ஆட்சி நடத்த விருப்பம் உள்ள எந்த ஒரு மனிதருக்கும் முன்மாதிரியாக இருக்கக்கூடிய திட்டங்களாகும்.

வசனம்

வீராங்கன் தான் இயற்றிய புதிய சட்டங்களை மக்கள் முன் படிக்க செய்வார். அவை:

தளபதி : *உழுபவனுக்கே நிலம் உரிமையாக்கப்படுகிறது. உரிமைக்காரருக்கு நஷ்டஈடு நிலத்தின் வருமானத்தில் கால் பங்கு.*

பிங்கலன் : *என்ன அநியாயம்!*

தளபதி : *விளைச்சல் காலத்தில் நிலவரி ஆறில் ஒரு பங்கு, இரண்டாண்டுகள் தொடர்ந்து விளையாமல் போனால் குடும்பத்தின் தேவைக்கேற்ப மான்யம் வழங்கப்படும். பெரிய மாளிகைகளில் சிறு எண்ணிக்கைகள் கொண்ட குடும்பங்கள் வாழ்வது கூடாது. ஒரு பகுதி அவர்களுக்குப் போக, மீதிப் பகுதி குடிசை வாழ்வோர்கென்று வைக்கப்படும்.*

கார்மேகம் : *குடிசைகளை என்ன செய்வது?*

வீராங்கன் : *தேவையில்லாத காரணத்தால் குடிசைகள் கொளுத்தப்படும்.*

தளபதி : *தொழிலில் முதலீடு செய்வோருக்கு லாபத்தில் பத்து சதவிதமும், மற்றவை தொழிலாளர்களுக்கு பிரித்து தரவேண்டும்.*

குருநாதர் : *அப்படியென்றால் பணக்காரர்களே இருக்கமாட்டார்கள்.*

வீராங்கன் : *தவறு! பணக்காரர்கள் இருப்பார்கள் ஏழைகள் இருக்க மாட்டார்கள்.*

தளபதி : *ஐந்து வயது ஆகிய உடனேயே குழந்தைகளை கட்டாயமாக பள்ளியில் சேர்த்துவிட வேண்டும். தவறினால் பெற்றோர்களுக்கு தண்டனை உண்டு.*

கார்மேகம் : *வசதி இல்லாத பெற்றோர்களை என்ன செய்வது?*

வீராங்கன் : *அவசரப்படாதீர்கள்!*

தளபதி : *பள்ளி படிப்பு முடிந்து, தொழிலில் ஈடுபடும் வரை மாணர்களின் பராமரிப்பு பொறுப்பை அரசாங்கம் ஏற்று கொள்கிறது.*

பிங்கலன் : *பொக்கிஷம் காலி !*

வீராங்கன் : *மக்களிடம் இருந்து பெற்ற வரிப்பணத்தை மக்களுக்காக செலவிடுகிறோம். ம் . . படியுங்கள்.*

தளபதி : *கலப்பு மனம் செய்வோருக்கு அரசாங்க செலவில் திருமணம் செய்து வைக்கப்படும். கலப்பு மணத்தில் பிறந்த குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதல் சலுகை அளிக்கப்படும். பிச்சை எடுப்பதும் குற்றம், பிச்சையிடுவதும் குற்றம். விவசாயிகள் குடும்பம் ஒவ்வொன்றிருக்கும் ஒரு வீடு, ஐந்து காணி நிலம் இரண்டு காளைகள், நாலுகோட்டை விதை நெல், ஒரு கலப்பை தரப்படும்.*



குருநாதர் : *விவசாயிகளையே பார்க்கிறார் மன்னர்! நகரத்தைப் பற்றிய கவலையே படவில்லையே!*

வீராங்கன் : *முழுவதையும் கேளுங்கள்! அதேபோல் நகரத்தில் வாழ்வோருக்கு திறமைக்கேற்ற தொழில் கொடுப்போம். ஒவ்வொருவருக்கும் தேவைக்கேற்ற ஊதியம் கொடுக்கப்படும்.*

சபையினர் : *இதுவல்லவா சட்டம் !*

தளபதி : *ஆண்டான் அடிமை, தாழ்ந்தவன், உயர்ந்தவன், தொட்டால் தீட்டு! கைபட்டால் பாவம்! வீதியில் நடக்கக்கூடாது! கோவிலில் நுழையக் கூடாது! பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று யார் சொன்னாலும் தடுத்தாலும் இரண்டாண்டுகளுக்கு குறையாமல் கடுங்காவல் தண்டனை வழங்கப்படும். கற்பழித்தால் தூக்கு தண்டனை! எல்லா குற்றவாளிகளும் கருணை மனு சமர்ப்பிக்கலாம்! ஆனால் கற்பழித்தவனுக்கு மட்டும் அந்த உரிமை கிடையாது.*

பிங்கலன் : *இந்த சட்டங்களை நாங்கள் எதிர்க்கிறோம்.*

வீராங்கன் : *தேவையில்லையா? இந்த சட்டங்கள் உங்களுக்காக மட்டுமல்ல! (சபையினரை நோக்கி) உங்கள் அபிப்பிராயம் என்ன?*

சபையினர் : *எங்களுக்கு இந்த சட்டங்கள் தான் தேவை! ஆமாம் இந்த சட்டங்கள்தான் தேவை!*

வீராங்கன் : *பார்த்தீர்களா? உட்காருங்கள் கூடிய விரைவில் உங்கள் ஆட்சி நிறுவப்படும்.*

சபையினர் : *மார்த்தாண்ட மன்னர் வாழ்க!*

நாடோடியாக இருந்து மன்னனான வீராங்கனை ஒரு சில நாட்கள் மட்டுமே அந்தப் பதவியில் இருந்தாலும் தான் பதவியில் இருந்த நாட்களில் மக்களுக்கு தன்னாலான அனைத்து நன்மைகளையும் செய்துவிட வேண்டும் என்று துடிக்கிறான். அதற்கான சட்ட திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றுகிறான். இதுதான் இந்தப் படத்தின் வரலாற்றுச் சிறப்புடைய முக்கிய காட்சி ஆகும். யார் வேண்டுமானாலும் மன்னர் ஆகலாம். அப்படி மன்னர் ஆகும் போது அவர்கள் மக்களுக்கான நன்மைகளை தன்னால் இயன்ற அளவு செய்ய வேண்டும் என்பதுதான் நாடோடி மன்னன் கதையின் கருத்தாகும். இது படத்துக்காக எம்.ஜி.ஆர். ஆலோசித்து எடுத்த காட்சியாக இருந்தாலும் அவருடைய வாழ்வில் உண்மையாகிவிட்டது.

புரட்சிக்காரர் – புரட்சி நடிகர் – புரட்சி தலைவர்

நாடோடியாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்த எம்.ஜி.ஆர். நாடகங்களில் நடித்து திரைப்படங்களில் நடித்து வரும் போது

வீராங்கனை போல ஒரு புரட்சி காரராகவே தன்னுடைய கலைப்படைப்புகளில் வாழ்ந்தும் நடித்தும் வந்தார். அவருடைய வாழ்க்கையும் திரைப்படத்தில் அவர் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரமும் அதிக வேறுபாடு இல்லாமல் பெரும்பாலும் ஒன்றுபோலவே இருந்து வந்தது. புரட்சிக்காரராக புரட்சி நடிகராக இருந்த எம்.ஜி.ஆர்., திமுகவில் இருந்து நீக்கப்பட்டதும் அண்ணா திமுக என்ற ஒரு கட்சியைத் தொடங்கி மக்களின் பேராதரவைப் பெற்று ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் முதல்வரானார். அதன்பின்பு அவரது ஆயுட் காலம் வரை, அதாவது 10 ஆண்டுகள் தொடர்ந்து அவரே முதல்வராக இருந்தார். மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றிருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மக்கள் தலைவராகவும் தான் வாழும் காலம் வரை இருந்து வந்தார்.

புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். எடுத்த நாடோடி மன்னன் படம் அவருடைய வாழ்வின் பிரதிபலிப்பாகவே அமைந்துவிட்டதை முதல்வரான பிறகு உணர்கிறோம். அவருடைய பல படங்களில் அவருடைய கதாபாத்திரங்கள் நிஜவாழ்வில் அவரை பிரதிபலிப்பதாக இருப்பதைப்போல நாடோடி மன்னன் படமும் அதன் கதாபாத்திரங்கள் ஆகிய வீராங்கனை மார்த்தாண்டனும் கூட எம்.ஜி.ஆர். உடைய நிஜவாழ்வில் புரட்சி நடிகராகவும், புரட்சித் தலைவராகவும் அமைந்து விட்டன.

7. பாடல் கற்பித்த பாடம்

நாடோடி மன்னன் படத்தின் பாடல்கள் அனைத்தும் மக்களுக்குப் படிப்பினையாகவும் ஒரு தேர்ந்த ஆசிரியரின் கற்பித்தல் ஆகவும் இருந்தன. அவை எம்ஜிஆரின் உள்ளக் கருத்துப்படி அவர் பொது மக்களுக்குச் சொல்ல விரும்பியவற்றை எல்லாம் தேர்ந்த பாடலாசிரியர்கள் மூலமாக தகுதியான ஏற்புடைய பொருத்தமான சொற்களைக் கொண்டு எஸ் எம் சுப்பையா நாயுடு அவர்களின் இசைக்கு ஏற்ப மக்களை கவரும் பாடல்களாக உருவாக்கப்பட்டன.

நாடோடி மன்னன் படப் பாடல்களில் திராவிட இயக்கக் கொள்கை; எது இன்பம்? உழைப்பின் பெருமை, சோம்பலின் கொடுமை, காதலின் தன்மை, ஆண் பெண் சமத்துவம், சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதில் பெண்களின் பங்கு ஆகியவை உள்ளடக்கமாக அமைந்தன.

திராவிட இயக்கக் கொள்கை

நாடோடி மன்னன் படம் தொடங்கும்போதே பெயர்ப் பட்டியல் வெளியிடும் வேளையில் அதன் பின்னணியாக செந்தமிழே வணக்கம் என்ற பாடல் ஒலித்தது. இப்பாடல் தமிழ் திராவிட மொழிகளின்

தாய் மொழியாக இருப்பதனையும் தமிழ் பேசும் மக்கள் பெற்றோரைத் தவிர வேறு தெய்வம் எவரையும் தொழுவதில்லை என்பதையும் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்ற ஐந்து இலக்கணங்களையும் ஆதியிலேயே விளக்கியது நம் இலக்கண நூலான தொல்காப்பியம் என்பதையும் தமிழர்கள் ஜாதி மதம் பேதம் இல்லாமல் ஒற்றுமையாக வாழும் பண்பாடு உடையவர்கள் என்ற கருத்தையும் உள்ளடக்கியதாக இப்பாடல் அமைந்திருந்தது

எம்.ஜி.ஆர். முதன் முறையாக திரைப்படத்தில் தன்னுடைய கட்சிக்கொடியை ஆணும் பெண்ணுமாக இணைந்து பிடித்திருக்கும் படத்தை தன் சொந்தப் பட நிறுவனத்தின் ***logo*** வாக அமைத்திருந்தார். பல நடிகர்களும் கலைஞர்களும் திமுகவில் இருந்தாலும்கூட அவர்கள் எவருக்கும் வராத துணிவும் தெளிவும் எம்.ஜி.ஆருக்கு இருந்ததனால் திமுக கொடியையும் அதில் ஆண்



பெண் சமத்துவத்தையும் அக்கட்சியின் வளர்ச்சிக்கு இருவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற உயர்ந்த கோட்பாட்டையும் விளக்கும் வகையில் தன்னுடைய திரைப்பட நிறுவனத்தின் விளக்கத்தை அமைத்திருந்தார். இதற்கும் மேலாக முதல் பாட்டையும் தமிழ் தாய் வாழ்த்துப் பாடலாக அமைத்தார். இவற்றைத் திராவிடக் கட்சி தலைவர்கள் மிகவும் பாராட்டினர்.

எம்.ஜி.ஆர். திராவிட இயக்க கருத்துக்களை முதல் பாடலாக கடவுள் வாழ்த்துப் பாடல் இடம்பெறும் இடத்தில் மொழி வாழ்த்து பாடலை அமைத்திருந்தது ஒரு புதுமையாகும் புரட்சியும் ஆகும். கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுறுத்தும் வகையிலும் பெற்றோரே கண்கண்ட கடவுள் என்பதை எல்லோருக்கும் எடுத்துரைக்கும் வகையிலும் தாயே தமிழே உன்னை வணங்கி என் கலைப்படைப்பை காண்பிக்கத் தொடங்கினேன் என்று தமிழையே கடவுளாகக் கொண்டு அதை வணங்குவதாக இப்பாடல் பெயர்கள் காண்பிக்கும் போது பின்னணிப் பாடலாக ஒலித்தது.

படம் ஆரம்பிப்பதற்கு முன்பே இப்பாடல் ஒலிப்பதைக் கேட்ட ரசிகர்கள் மிகுந்த உற்சாகம் அடைந்தனர். அப்போதே கை தட்டல் தொடங்கிவிட்டது. இயக்கத்தின்பால் அவர்களுக்கு இருந்த பற்றும் பாசமும் இப்பாடலைக் கேட்கும் போது பன்மடங்காயிற்று.

செந்தமிழே வணக்கம் ஆதி

திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்

செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே உலக

அரங்கினுக்கே நீ தந்ததாலே

செந்தமிழே வணக்கம்

என்ற பாடலை மறுமலர்ச்சி திமுக தனது கடவுள் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக்கொண்டது.

எது இன்பம்?

மனித வாழ்வில் எல்லோருடைய குறிக்கோளும் இன்பத்தை தேடும் தேடலையே கொண்டுள்ளது. ஒரு திரைப்படக் கவிஞர்,

இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு

எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு

என்றார். ஆனால் இன்பம் என்றால் என்ன? ஒரு மனிதன் எப்போது இன்பம் அடைய வேண்டும்? இன்பம் என்ற உணர்ச்சிக்கு அடிப்படையான தேவை எவை? என்பதை விளக்கும் வகையில் ஒரு தனிப்பாடல் நாடோடி மன்னன் படத்தில் அமைந்திருந்தது. அப்பாடலை எம்.ஜி.ஆர். மட்டுமே பாடுவதாகவும் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இப்பாடலுக்கான காட்சி அமைப்பின் தொழில் நுட்ப முறையானது பாராட்டுக்குரியதாகும். வாகினி ஸ்டூடியோவில் ஆறு தளங்களிலும் செட் அமைக்கப்பட்டு தொடர்ந்து மூன்று மாதம் அங்கு படம் பிடிக்கப்பட்ட நாடோடி மன்னன் படத்தில் இப்பாடல் BACK PROJECTION முறையில் படம் பிடிக்கப் பட்டிருந்தது.



எம்.ஜி.ஆரும் மந்திரியும் குதிரையில் பயணிக்கும் போது எம்.ஜி.ஆர் மட்டும் பாடுவதாக அமைந்த இப்பாடல் முழுக்க முழுக்க ஒரு தத்துவப் பாடலாக வாழ்க்கையின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் பாடலாக அமைந்தது. எம்.ஜி.ஆரே. கேள்வியும் கேட்டு பதிலும் சொல்வதாக அமைந்த இப்பாடலில் உடன் வருபவர் வெறுமனே தலையை ஆட்டி தன்னுடைய இசைவை வெளிப்படுத்துவார். குதிரையும் இரண்டு ஆட்களும் மட்டுமே திரையில் தெரியும் இப்பாடல் காட்சியில் பாடலின் கருத்து மக்களை ஈர்த்த காரணத்தால் அப்பாடல் காட்சியில் யாரும் வெளியே எழுந்து செல்லாமல் உட்கார்ந்து அதன் கருத்துக்களை ஆர்வமாக கேட்டறிந்தனர்.

வெறும் உழைப்பினால் இன்பம் கிடைக்குமா என்றால் இல்லை; கல்வி கற்பதனால் இன்பம் கிடைக்குமா என்றால் இல்லை; பிறருக்கு தர்மம் செய்வதால் இன்பம் கிடைக்குமா; அதுவும் கிடையாது. பட்டம் பதவி அடைவதால் இன்பம் கிடைக்குமா; என்றால் அதுவும் முழுமையான

இன்பம் கிடையாது. ஆக நிறைவான இன்பம் அல்லது முழுமையான மகிழ்ச்சி எப்போது கிடைக்கும்? இது மிகப்பெரிய தத்துவார்த்தமான கேள்வி.

எது இன்பம் *என்ற தத்துவார்த்தமான கேள்வியை எம்.ஜி.ஆர். கேட்டு அதற்கு விளக்கமான பதில் அளிக்கின்றார். கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்பதற்குத் தத்துவஞானிகள் கேள்வி கேட்டு அதற்கு தாமே பதில் சொல்வதைப் போல, வேதசாஸ்திரங்கள் குரு சிஷ்யப் பரம்பரையில் விளக்கம் சொல்வதைப்போல எம்.ஜி.ஆரும் வாழ்வின் இன்பம் எது என்ற கேள்வியை அவரே கேட்டு அவரே பதில் சொல்கின்றார்.*

இன்பங்களை நான்காக வகைப்படுத்தி *எம்.ஜி.ஆர். விளக்குகிறார். முதலாவது உழைப்பவரே* ***உரிமை*** *பெறுவதில் இன்பம் உண்டு. இரண்டாவது கல்வி கற்பது இன்பம் அல்ல, கல்லாதவருக்கு கல்வியை* ***கற்றுக் கொடுப்பதே*** *இன்பம். மூன்றாவது இல்லை என்று வந்து கையேந்தி நிற்பவருக்கு ஒன்றை கொடுப்பது முழு இன்பத்தை தந்துவிடாது; கைத்தொழில் செய்து அனைவரும்* ***பகிர்ந்துண்டு*** *வாழ்வது தான் உண்மையான இன்பத்தை அளிக்கும். நான்காவது பட்டம் பதவி உயர்வு எதிர்பார்த்த இன்பத்தை தராது; நம்* ***தாய்நாடு உயர*** *உழைப்பதில் நாம் முழுமையான இன்பத்தை அடைவோம். என நான்கு வகையில் இன்பம் கிடைக்கும் முறைகளை இப்பாடல் மூலமாக எம்.ஜி.ஆர். எடுத்துரைக்கிறார்.*

கேள்வி பதிலாக அமைந்த ***"உழைப்பதிலா உழைப்பைப் பெறுவதிலா இன்பம் உண்டாகும்***

என்றே சொல் என் தோழா'' எனத் தொடங்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கடமையைச் செய்தால் மட்டும் போதாது; தன்னோடு இருப்பவருக்கும் நன்மைகளைச் செய்ய வேண்டும். அதுவே மிகச் சிறந்த சமூகக் கடமையாகும் என்ற உன்னதமான சமூகக் கருத்தை விளக்குகிறது. ஒரு மனிதனுக்கு தனிமனிதக் கடமையும் சமூகக் கடமையும் என இருவித கடமைகள் இருக்கின்றன; இவ்விரு வகை கடமைகளையும் ஒருவன் செவ்வனே செய்யும் போது அவனுக்கு முழுமையான நிறைவான உண்மையான இன்பம் கிடைக்கும் என்ற இப்பாடலின் மையக் கருத்தாகும்.

இப்பாடலைக் கேட்கும் போது பார்க்கும் போதும் ரசிகர்கள் தங்களுடைய சமூகக் கடமையை உணர்ந்து இன்புறுவர். தன் வீடு தன் மனைவி தன் மக்கள் தன் சாதி தன் மதம் என்று தன்னளவில் மட்டும் சிந்திக்காமல் பரந்துபட்ட அளவில் அனைவரையும் உள்ளடக்கி சிந்திக்கும் பெருந்தன்மையான பண்பு ஒரு மனிதனுக்கு வளர வேண்டும்; அதனை அவன் வளர்த்துக்கொண்டால் மட்டுமே உலகக் குடிமகனாக அவன் வாழும் தகுதி படைத்தவன் ஆவான் என்ற ஒப்பற்ற கருத்தை எம்.ஜி.ஆர். இந்தப் பாடலில் எடுத்துரைத்துள்ளார். இந்தப் பாடலுக்குப் படத்தில் மிகப்பெரிய முக்கியத்துவம் இல்லாவிட்டாலும் இந்த பாடலின் கருத்துக்கள் கேட்போர் மனதில் மிக ஆழமாகவும் பதிந்துவிட்டன. எனவே இப்பாடல் மக்களிடையே விரும்பிக் கேட்கப்படுகின்ற ஒரு பாடலாக நிலைத்து நிற்கின்றது

எழுமின்; விழிமின்

நாடோடி மன்னன் படத்தில் எம்.ஜி.ஆர். அறிஞர் விவேகானந்தர் எழுமின் விழிமின் என்று சொல்லிய உயர்ந்த தத்துவக் கருத்தை மிக எளிமையாக சோம்பிக் கிடக்கும் மனிதர்களைத் தட்டி எழுப்ப பயன்படுத்தியிருப்பார். உலக மாயையில் உறங்கிக் கிடக்கும் ஜீவாத்மாவை எழுப்பி விழிப்படையச் செய்து இறைவனோடு இணையச் செய்யும் பள்ளி எழுச்சிப் பாடல்கள் உறங்குவதை விழிக்கச் செய்யும் பக்தி மார்க்கப் பாடல் வகையினவாகும். அது போலவே எம்ஜிஆரும் தன்னுடைய கடமையை மறந்து உறங்கி கொண்டிருப்பவனைத் தட்டி எழுப்ப தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடலை பாடுகிறார்.

தன் மக்களின் உயர்வை புறக்கணித்து தன் நாட்டின் மேன்மையை உணராமல் சோம்பேறித்தனமாக, தனக்கு அதிர்ஷ்டமில்லை என்றும் இன்னும் நல்ல நேரம் வரவில்லை என்றும் விதியை நொந்து கொண்டு புலம்பிக் கொண்டே இருக்கும் முயற்சி இல்லாத மனிதர்களை பார்த்து எழுமின் விழிமின் என்ற கருத்தை தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடலின் மூலமாக உணர்த்துகிறார்.

புரட்சிக்காரனாக வந்த வீராங்கன் காவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது காவல் பணியில் இருக்கும் சிறைக்காவலர் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து பாடுவதாக 'தூங்காதே தம்பி தூங்காதே' எனத் தொடங்கும் பாடல் அமைந்துள்ளது. இப்பாடல் சிறைக்காவலர்களுக்கு மட்டும் உரியது

எனக் கருதிவிடக் கூடாது. தேசத்தின் காவலர்களுக்கும் முற்றிலும் பொருந்தும். இந்த நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மிகப் பெரிய தலைவர்கள் கூட பல வேளைகளில் தூக்கத்தில் ஆழ்ந்து முக்கியக் கடமைகளைச் செய்ய தவறி விடுகின்றனர். இதனால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது. இக்கருத்தை பாட்டின் முத்தாய்ப்புக் கருத்தாக வைத்து

இன்னும் பொறுப்புள்ள மனிதரின்
தூக்கத்தினால் பல

பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா

என்று இப்பாட்டை நிறைவு செய்கின்றார்

பாட்டின் தொடக்கத்தில் சிலரைப் பார்த்து எம்ஜிஆர்

தூங்காதே தம்பி தூங்காதே நீ

சோம்பேறி என்ற பெயர் வாங்காதே

என்கிறார். சோம்பேறியாக இருப்பது ஒருவனுக்கு கெட்ட பெயரை உண்டாக்கும். ஒருவன் சுறுசுறுப்பாகவும் விழிப்புணர்ச்சி உடையவனாகவும் இருந்தால் அவன் வாழ்க்கையில் தன்னுடைய விதியையும் வெல்லமுடியும். வள்ளுவர் ஊழ் பற்றிய அதிகாரத்தில்

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உயவின்றி

தாழாது உஞற்று பவர்"

என்றார். காலம் தாழ்த்தாது தன்னுடைய கடமைகளைத் தொடர்ந்து செய்து வருபவர்கள் ஊழ்வினையும்

புறங்காட்டி ஓடச் செய்வர் என்பது வள்ளுவர் வாக்கு. சோம்பல் இல்லாமல் தன் கடமைகளைச் செய்கின்றவன் எவனோ அவனே வினையையும், விதியையும் வென்றவனாவான். முயற்சியுடையவனை ஊழ்வினையும் தலைவிதியும் எதுவும் செய்ய இயலாது. எனவே தலைவிதியை நினைத்து நொந்து கொண்டு இருப்பதை விட தன்னாலான முயற்சிகளைத் தொடர்ந்து செய்வதே நல்லது என்று எம்ஜிஆர் சொல்லும் இக்கருத்து மக்கள் விதியை எண்ணி விழுந்து கிடப்பதில் இருந்து அவர்களை எழுப்பி உட்காரச் செய்து அவர்களுக்கு உழைப்பின் பெருமையை எடுத்துக்கூறி ஊக்கமளிக்கின்றது.

நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் தான் கெட்டதும் இன்றி தனது நாட்டுக்கும் கெடுதல் விளைவித்து விட்டனர். அதிர்ஷ்டம் பற்றிய மூட நம்பிக்கையால் பலர் இழப்புகளையே சந்தித்தனர். அவர்கள் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண இயலாமல் போயிற்று.



பள்ளியில் தூங்குபவன் கல்வியையும் படையில் தூங்குபவன் வெற்றியையும் கடையில் தூங்குபவன் முதலீட்டையும் கடமையில் தூங்குபவன் புகழையும் இழப்பான் என்று ஒவ்வொருவனுக்கும் அவனுடைய இழப்பை எடுத்துரைக்கின்றார் எம்.ஜி.ஆர். பொறுப்புள்ளவர்கள் தூங்கினால் மக்களுக்கு நன்மை செய்யும் பல பொன்னான வேலைகளும் தூங்கி விடும் என்று இறுதியாக சொல்லி முடிக்கின்றார். இப்பாடல் விதியை நினைத்து சோம்பி கிடப்பவரை வெற்றியை நோக்கி ஓட வைக்கிறது; கடுமையாக உழைக்க வைக்கின்றது.

உழைப்பால் உயர்ந்தவர் எம்ஜிஆர்

எம்.ஜி.ஆர். கடுமையான உழைப்புக்கு சொந்தக்காரரர். நாடோடி மன்னன் படத்தைத் தயாரிக்கும் போது படைப்புச் சுதந்திரத்திற்காக இப்படத்தைத் தயாரிக்க முன் வந்தாலும் அந்தச் சுதந்திரம் அவருக்கு சும்மா கிடைத்துவிடவில்லை. கடுமையான உழைப்பினால் மட்டுமே அவர் அந்த சுதந்திரத்தின் சுகத்தை அனுபவிக்க முடிந்தது. வாகினி படப்பிடிப்பு நிலையத்தில் விடிய விடிய படப்பிடிப்பு நடந்து கொண்டு இருந்தது. அதிகாலை 2 மணிக்கு தூங்கி ஆறு மணிக்கு எழுந்து எம்.ஜி.ஆர். தனது பணிகளைச் செய்தார். வெறும் நான்கு மணிநேர தூக்கத்தைக் கொண்டு கடுமையாக உழைத்தார். இவ்வாறு அவர் தூக்கத்தைத் தொலைத்த நாட்கள் பல; மாதங்கள் சில. இவ்வாறு வாகினி படப்பிடிப்பு நிலையத்தில் தொடர்ந்து மூன்று மாதங்கள் தொடர்ந்து இரவு பகலாகப் படப்பிடிப்பு நடந்தது. மற்றவர்கள் தங்களுடைய

பணி முடிந்ததும் வீட்டிற்குப் போய்த் திரும்பி வந்தனர். ஆனால் எம்ஜிஆர் அங்கேயே உறங்கி எழுந்து சாப்பிட்டு தொடர்ந்து தன்னுடைய படப்பிடிப்பு வேலைகளைக் கவனித்தார்.

எம்.ஜி.ஆர். நடிப்பு இயக்கம், தயாரிப்பு என்று மூன்று பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டிருந்ததனால் அவருக்கு ஓய்வு என்பதே இல்லை. அவர் நினைத்தபடி எல்லாம் படத்தை எடுத்து பார்த்ததில் மூன்று படத்திற்கு உரிய அளவிற்கு படம் எடுத்து விட்டார். இதற்கு பிலிம் வாங்குவதற்கு அவர் 1957இல் 50 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார் இன்றைக்கு அது 5 கோடிக்கு சமமாகும். பணச் செலவைப் பற்றி கவலைப்படாமல் தொடர்ந்து பணத்தைச் செலவழித்து அதிக நேரம் உழைத்து படத்தைச் சிறப்பாக எடுத்ததால் மட்டுமே இப்படம் அவரது வாழ்வின் வெற்றிச் சரித்திரத்தில் நீங்கா இடத்தை நிலையான இடத்தைப் பெற்றது எம்.ஜி.ஆருடைய அரசியல் வரலாறு நாடோடி மன்னன் படத்தில் இருந்துதான் தொடங்குகிறது. இதில் அவருடைய அரசியல் ஆர்வம் மட்டுமல்ல அவர் ஒரு அரசியல்வாதியாக அரசியல் தலைவராக வருவதற்கான தீர்க்கதரிசன குணம் அவருக்கு இருந்தது என்பதனை மக்களுக்கு வெட்டவெளிச்சமாகி காட்டிய படம் இப்படம் ஆகும்.

தூங்காதே தம்பி தூங்காதே என்ற பாடல் மிகச்சிறந்த பகுத்தறிவு சிந்தனையை ஊட்டிய பாடல் உழைத்து உயர முடியும் என்பதில் நம்பிக்கை

வைத்து அறிவோடு சிந்தித்து திறமையோடு செயல்பட்டு தெளிவாக முடிவெடுத்தால் வாழ்க்கை நிச்சயம் மேம்பாடு அடையும். தன்னுடைய தோல்விகளுக்கு விதியையும் வேற்றாளையும் காரணம் சொல்லிக் கொண்டிருப்பது முட்டாள்தனம் என்பதை எடுத்துரைத்த பாடல் ஆகும்.

திராவிடத் தாயின் பெருமை

திராவிடம் என்பது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் துளு மொழிகள் பேசும் மக்கள் வாழும் நிலப்பரப்பு ஆகும். திராவிட இயக்கம் இம்மொழி பேசும் அனைவருக்காகவும் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் தமிழ்கத்தோடு நின்றுவிட்டது. எம்.ஜி.ஆர். மன்னன் மார்த்தாண்டனை மக்கள் வரவேற்கும் பாடலாக வருக வருக வேந்தே என்ற பாடலை எழுதி வாங்கி படம் எடுத்தார். இதில் மலையாளம் தெலுங்கு கன்னட மொழிகளிலும் பாடல்களை எழுதி பாடி சேர்த்தார். இப்பட்டம்மாற்ற மாநிலங்களில் வெளியான போது அந்தந்த மாநில மொழிப் பாடலை மக்கள் மிகவும் ரசித்து எம்.ஜி.ஆரை நேசிக்க தொடங்கினர். தென்னிந்திய நடிகர் சங்கத்தை உருவாக்கியபோது எம்.ஜி.ஆர். திராவிடக் கலைத் தாய் தன் நான்கு மொழி பிள்ளைகளையும் அனைத்து நிற்பது போன்ற லோகோவை அமைத்தார். அவர் மோதிரத்லும் அப்படத்தை பொரித்திருந்தார். இப்படத்தில் இடம் பெற்ற இப்பாடலை பல்வேறு மொழிகளைச் சேர்ந்த நான்கு கவிஞர்கள் இயற்றினர். நான்கு மொழியிலும் எம்.ஜி.ஆரின் புகழ் பாடப்பட்டது.

சோம்பலின் தீமை

நாடோடி மன்னன் படத்தில் உழைப்பு சுறுசுறுப்பு பற்றிய பெருமைகளை எம்ஜிஆர் எடுத்துக் கூறிய பாட்டை போலவே சோம்பல், பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றின் தீமைகளை எடுத்துச் சொல்ல நகைச்சுவை நடிகர்கள் பாடுகின்ற வகையில் இரண்டு பாட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. வாழ்க்கையில் வெற்றி பெற நினைப்பவன் உழைப்பின் மேன்மையை உணர்ந்தவனாக இருப்பான். தோல்வி அடைபவன் தன் வாழ்க்கையை நகைப்புக்கு இடமாக்கி சோம்பேறித்தனம் மிகுந்தவனாக இருப்பான் என்பதை உணர்த்தும் வகையில் சந்திரபாபுவை பார்த்து ஜி. சகுந்தலா அறிவுரை கூறிப் பாடுவதாக ஒரு பாடல் அமைக்கப்பட்டிருந்தது. சந்நியாசியாக போக நினைப்பவனை அவனது காதலி தடுக்கும் பாடல் காட்சி அது. அவன்

“தடுக்காதே என்னைத் தடுக்காதே

தளுக்கி மினுக்கி வந்து மனசை கெடுக்காதே:

என்று சொல்லவும் அதற்கு பதலடி கொடுக்கும் அவனது காதலி

“முறுக்காதே சும்மா முறுக்காதே

முனிவரைப் போல நீ வேஷம் போடாதே”

என்று போலி சாமியார்கள் உருவாகும் விதத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறாள்.



சோம்பேறித்தனமாக தன் பொறுப்பை மறந்து ஊர் சுற்றித் திரிகிறான் ஒருவன். உழைக்க மனமின்றி ஓசி சோறைத் தின்று சோறு கண்ட இடமே சொர்க்கம் என்று தூங்கிக் கிடக்கும் இச்சோம்பேறியை பார்த்து அவனைத் திருமணம் செய்து கொள்ளப்போகும் பெண் புத்திமதி சொல்லி அவனை சுறுசுறுப்பான நல்ல உழைப்பாளியாக மாற்றுகிறாள். அவன் தன் நல்ல நண்பனைக் காப்பாற்ற வேண்டும்; அந்த கடமையை உணர வேண்டும் என்பதையும் அவனுக்கு உணர்த்துகிறாள்.

சோம்பேறியாக உள்ள ஆணுக்கு சுறுசுறுப்பான மனைவி கிடைத்தால் அவனும் துடிப்பான இளைஞனாக மாறி

விடுவான் என்பதைக் காட்டும் வகையில் இந்த ஜோடிக்கு உரிய காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும். ஆரம்பத்தில் அந்த பெண் அவனைத் திருத்த நினைக்கும்போது அவன் அவளைப் பார்த்து தளுக்கி மினிக்கி என் மனசை கெடுக்காதே என்பான் ஆனால் அவளோ நீ முனிவரைப் போல வேஷம் போடாதே

என்று முகத் திரையைக் கிழித்துவிடுவாள். பிறகு அவனைப் பார்த்து சோறு கண்ட இடம் சொர்க்கமா? ஊர் சுற்றி வாழ உனக்கு எண்ணமா என்று இடித்துரைத்தாள். மேலும்

"தோழனை காக்க மறக்கலாகுமா

கோழையே உனக்கு மீசை வேணுமா"

என்றும் கேட்கிறாள்; உடனே அவனுக்கு ரோசம் வந்து இத்தனை காலமும்

"ஓசிச் சோத்துல உடம்ப வளத்துட்டேன்

மீசை இருப்பதை மறந்து போயிட்டேன்

வேஷம் கலைஞ்சுட்டேன்;

விஷயம் புரிஞ்சுகிட்டேன்

வீர தீர சூரனாக நான் முடிவு பண்ணிட்டேன்" *என்று அவன் பதில் உரைப்பான். இது படத்தில் நகைச்சுவை நாயகனுக்கு கொடுக்கப்பட்ட படிப்பினை பாடல்.*

பாடுபட்டால் பலன் உண்டு

சதிச்செயல் செய்து நன்மை பெற நினைக்கும் கொடியவர்களைப் பார்த்துப் பாடும் ஒரு பாடல் காட்சியும் அமைக்கப்பட்டிருக்கும். அந்த பாடல் காட்சியில்

பாடுபட்டா தன்னாலே பலன் இருக்காது கை வேலை தேடி வராது முன்னாலே திரும்பி பாரு பின்னாலே

என்று பாடி அறிவுரை கூறும் வகையில் இருவர் ஆடிப்படுவதாக அக்காட்சி அமைந்திருக்கும்.



கடைசி சரணம் எம்.ஜி.ஆரையும் பானுமதியையும் பற்றிய பாராட்டாக இருக்கும்

“ரொம்ப நாணயக்கார பேர்வழிங்க

நல்லது கெட்டது கண்டவங்க

ராப்பகலா திட்டம்போட்டு

ராஜாங்கத்தை காப்பவங்க”

என்று இந்த ஜோடி இவர்களின் சமூகப் பொறுப்புணர்ச்சியை வாழ்த்திப் பாடுவதாக இப்பாடல் முடிவு பெறும். சிறையில் அறிமுகமாகி சிறை வாசலில் ஒருவரை ஒருவர் சந்தித்து இணைந்து பயணப்பட்டு வந்து அவர்களின் காதல் வாழ்வு இந்தப் பாடலுடன் முடிந்துவிடும்.

சிறையில் சந்தித்து காதல்

காதலிக்கும் இருவர் தம் வாழ்வில் சமூகக் கடமைகளை சுமந்தவர்களாக தேசத்தின் நலனுக்காகப் பாடுபடுகின்றவர்களாக அறிமுகம்

ஆவது நாடோடி மன்னன் படத்தின் புதுமையான கதாபாத்திரப் படைப்பாகும். இப்படத்தில் சமூகத்தில் மக்கள் புரட்சி செய்து மக்கள் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையோடு அறிமுகமாகும் வீராங்கன் சிறையில் தள்ளப்படும்போது அங்கு கதாநாயகியும் புரட்சிப்படையை சேர்ந்தவள் என்பதால் சிறைவாசம் அனுபவித்து வருவாள். வீரனின் தத்துவக் கருத்துக்களை கேட்டு இப்பெண் அவனிடம் ஈடுபாடு கொள்வாள். ***தமிழகத்தின் திரைப்பட வரலாற்றில் கதாநாயகனும் கதாநாயகியும் சிறையில் சந்தித்து காதல்*** *காட்சி* ***கொள்ளும் காட்சி இப்படத்தில் தான் முதன் முறையாக இடம்பெற்றது எனலாம்.*** *எம் ஜி ஆர் மிகவும் துணிச்சலாக இக்காட்சிகளை இப்படத்தில் அமைத்திருந்தார்.*

காதலில் சமத்துவம்

சிறைக்குள் அறிமுகமான இருவரும் நேருக்கு நேர் சந்திக்கின்றனர். அவர்களைப் பார்த்து அவ்வூரில் அறியாதோர் சிலர் கேலி பேசும் போது வீராங்கன் ஊர் வாய்க்குப் பயந்து கொண்டு தனியே செல்கின்றான். அவ்வாறு செல்லும் வழியில் சில கயவர்கள் ஒரு பெண்ணிடம் வம்பு செய்வதைப் பார்த்துவிட்டு அவ்வழியில் தனக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கும் கதாநாயகிக்கும் இவர்களால் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் அவளுக்கு பாதுகாப்பு தரும் நோக்கில் அவளையும் சேர்த்து அழைத்துச் செல்கிறான். அப்போது அவள் அவனை பார்த்து, . . .



“சம்மதமா நான் உங்கள் கூட வரச் சம்மதமா

சரி சமாக நிழல் போலே நான் கூட வர சம்மதமா” என்று கேட்பதாக ஒரு தனிப் பாடல் கதாநாயகிக்கு வழங்கப்பட்டது. ஒரு ரொட்டியை இருவரும் பகிர்ந்து உண்டபடியே தமது பயணத்தை இணைந்து தொடன்குகின்றனர்.

வீராங்கனும் மதனாவும் சிந்தனையிலும் செயலிலும் ஒன்றுபட்டு பயணிக்கின்றனர் அவள் அவனை தனது புரட்சிப்படை வீரர்களிடம் அழைத்துச்சென்று அறிமுகம் செய்து வைக்கின்றாள். அங்கு பெண்களும் உளவுப் பணியில் ஈடுபடுகின்றனர். அங்கே மன்னர் ஆட்சியை ஒழிக்க ஒரு புரட்சிப்படை இயங்கி வருகிறது. எம் ஜி ஆருடைய இயக்கத்தில் இப்படம் வெளிவந்ததால் இந்த புரட்சிப் படையில் பெண்களுக்கும் இடம் அளித்திருந்தார்.

புரட்சிப் படையில் பெண்கள்

சமூக மாற்றப் பணியில் பெண்களைத் தவிர்த்து விட்டு ஆண்கள் மட்டும் ஈடுபடுவது நடவாத காரியம் ஆகும் என்பது எம் ஜி ஆரின் திண்ணமான முடிவாக அன்றே இருந்தது. பின்னர் அவர் அண்ணா திமுக என்ற தனிக் கட்சி தொடங்கிய போது புரட்சித் தலைவரின் போர்ப்படையில் பெண்கள் இருந்தனர். அவருக்கு முழு ஆதரவு அளித்து பெரிய அரசியல் புரட்சியைச் செய்தனர். இன்று வரை அவருக்குப் பெண்களின் ஏகோபித்த ஆதரவு இருப்பதற்கு காரணம் ஆரம்பம் முதல் கடைசி வரை தனது படங்களில் பெண்களுக்கு அவர் அளித்து வந்த மதிப்பும் மரியாதையும் பங்களிப்பும் கண்ணியமும் ஆகும் என உறுதியாகக் கூறலாம்.

நாடோடி மன்னன் படத்தின் கதை உருவாக்கத்தின் போது எம்.ஜி.ஆர். பெண்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்ததால் உளவு பணிகளில் பெண்கள் ஈடுபடுவதையும் புரட்சிப்படை தன்னுடைய ஓர் அங்கமாக மகளிரை வைத்திருந்ததையும் தன் படத்தில் காட்டினார். இறுதியில் புரட்சிப் படைத்தலைவரின் மகளான கதாநாயகி அரண்மனைக்காரர்களின் வன்மத்துக்கு பலியாகிறாள். இவ்வாறான அகால மரணங்கள் ஏற்படலாம் என்பதைத் தெரிந்து தான் புரட்சிப் படைத் தலைவர் தன் மகளை இப்பணியில் ஈடுபடுத்தினார். அவள் அரண்மனைக்கு வந்து வீராங்கனைச் சந்தித்து விட்டு திரும்பிச் செல்லும்போது பிங்களனின் கத்தி கத்தி வீச்சுக்குப் பலியாகிறாள்.

காதலர் உரையாடலில் சமூகக் கருத்துக்கள்

எம்ஜிஆர் மறுநாள் மகுடம் சூட்டப் போகும் நிலையில் தன் காதலியான பானுமதியைச் சந்திக்கும் பொது அவர்களுக்கு இடையிலான உரையாடல் சமூகத்தின் அவலங்களைப் பற்றியதாக அமைகின்றது. அப்போது அவள் கேட்கும் சந்தேகங்களை அவர் தீர்த்து வைக்கின்றார். பானுமதியின் கேள்விகள் அனைத்தும் ஒரு சாமானியனின் உள்ளத்தில் எழுந்த கேள்விகளே ஆகும் எம்ஜிஆர் சொல்லும் பதில்கள் அனைத்தும் படம் பார்க்கும் சாமானியனுக்கு சொல்லும் அவர் தரும் பதில்களாகவே கருதப்பட்டன.

"காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்கு

கையும் காலும்தானே மிச்சம்"

என்று பானுமதி கேட்கும்பொழுது எம்ஜிஆர் அவநம்பிக்கை கொண்டு வாழ்க்கையைப் பார்க்கக்கூடாது என்ற நோக்கில்

"காடு வெளையட்டும் பெண்ணே நமக்கு

காலம் இருக்குது பின்னே"

என்கின்றார். இவருடைய இந்த சொல் மக்களுக்கு படம் பார்ப்பவருக்கு விடிவுகாலம் பிறக்கும்; நம் இன்னல்கள் தீரும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

"மாடாய் உழைச்சவன் வாழ்க்கையிலே

பசி வந்திடக் காரணம் என்ன மச்சான்"



என்று தன்னுடைய வறுமைக்கு காரணம் என்ன என்று பானுமதி கேட்கும்பொழுது தலைவிதி என்றோ முன்ஜென்மத்தில் செய்த பாவம் என்று இதுவரை நம்பி வந்த பதிலைக் கூறாமல் அதற்குரிய சரியான காரணத்தைச் சொல்கிறார்.

“அவன் தேடிய செல்வங்கள் வேற இடத்திலே

சேர்வதினால் வரும் தொல்லையடி”

என்கிறார். உழைப்பின் பலன் ஒரு பக்கமாகவே குவிந்து கொண்டிருக்கிறது, அது பரவலாக எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் மாறும் சமநிலை உண்டாகும். செல்வக் குவிப்பினால் பசியும் பஞ்சமும் உண்டாகிறது என்பதே எம்ஜிஆர் சொல்கின்ற விளக்கமாகும்..

‘காடு வெளைஞ்சென்ன மச்சான்’ பாட்டு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தால் ஒரு சிற்றிதழுக்காக எழுதப்பட்டு வெளிவந்தது.

இப்பாட்டு சினிமாவுக்காக எழுதப்பட்டதல்ல என்றாலும் இதை எம்.ஜி.ஆர். தனது படத்தில் அமைக்க விரும்பியதால் அவர் விருப்பத்துக்கு ஏற்ப சில மாற்றங்களுடன் படத்தில் சேர்க்கப்பட்டது. எனவே இப்பாட்டு மக்களால் அவருடைய குரலாகக் கருத்தாகப் புரிந்துகொள்ளப்பட்டது. எம் ஜி ஆர் முதல்வரானதும் ''என் நாற்காலியின் ஒரு கால் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் எழுதிய பாடல்கள் ஆகும்'' என்றார்.

பாரதியார் தம் கவிதையில் வறுமை பற்றி குறிப்பிடும் போது

கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணம்

இன்னதென்று அறிவுமிலார்

என்று பாடியிருப்பார். அந்த காரணம் என்ன என்பதை எம்ஜிஆர் தன்பாட்டின் மூலமாகத் தெளிவுபடுத்துகிறார்.

"பஞ்சப் பரம்பரை வாழ்வதற்கு

இனி பண்ண வேண்டியது என்ன மச்சான்"

என்று பானுமதி கேட்கும்போது எம்ஜிஆர்

"தினம் கஞ்சி கஞ்சி என்றால் பானை நிறையாது

சிந்தித்து முன்னேற வேண்டுமடி"

என்று பகுத்தறிவு சிந்தனை வளர்ச்சி மக்களுக்குத் தேவை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு பகுத்தறிவுச் சிந்தனை உருவானால் மனதில்

இருக்கும் அறியாமை என்னும் இருள் ஒழிந்து வாழ்வில் ஒளி பிறக்கும் என்பதால்

"இருள் மூடிக் கிடந்த மனமும் வெளுத்தது

சேரிக்கும் இன்பம் திரும்பும்படி"

என்று எம்.ஜி.ஆர். பதிலளிப்பதாக பாடல் அடி அமைந்துள்ளது.

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது" என்ற பழமொழி உழுதவன் எதுவும் கிடைக்காது என்ற எண்ணத்தை காலங்காலமாக உருவாக்கி விட்டது. அவன் மட்டுமல்ல அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரும் ஏழ்மை மாறாமல் அவதிப்படுகின்றனர்.

"மண்ணை பிளந்து சுரங்கம் வச்சு

பொன்னை எடுக்க கனிகள் வெட்டி.

மதிலு வச்சு மாளிகை கட்டி

கடலில் மூழ்கி முத்தை எடுக்கும்

வழிகாட்டி மரமான தொழிலாளர் வாழ்க்கையிலே

பட்ட துயர் இனி மாறும்

ரொம்ப கிட்ட நெருங்குது நேரம்"

என்ற எம்.ஜி.ஆர். தன்னம்பிக்கை ஊட்டும் போது உழவர் மட்டுமல்ல அனைத்து உழைப்பாளிகளான உழைப்பாளர் வர்க்கத்துக்கே உயர்வு பிறக்கும் காலம் நெருங்கிவிட்டது என்ற ஊக்கத்தை இப்பாடல் வழங்குகிறது.

ஏழைகளின் பொற்காலம்

உழைக்கும் வர்க்கத்தினருக்கான பொற்காலம் எப்படி பிறக்கும்? யாரால் பிறக்கும்? நாம் சிந்தித்தால் மட்டும் போதுமா? நம்முடைய சிந்தனையும் செயல்பாடும் மட்டுமே நமக்கு நல்ல நிலைமையை ஏற்படுத்தி தந்துவிடுமா? நமக்கு என்று ஒரு நல்ல தலைவர் நல்ல ஆட்சி வேண்டாமா? என்ற எண்ணம் படம் பார்ப்போர் மனதில் எழுந்தன. ஏனென்றால் தி.க.வும் தி.மு.க.வும் வறுமைக்கான காரணங்களைச் சொன்ன அளவுக்கு வாழ்க்கைக்கான ஒளியை ஊட்டவில்லை. விடிவைக் காட்டவில்லை. எம் ஜி ஆர் மட்டுமே தனது கதாநாயகப் பாத்திரங்களினால் எதிர்காலம் இனிமையானது என்ற நம்பிக்கையை ஊட்டினார்.

"நாளை போடப்போறேன் சட்டம் பொதுவில்

நன்மை புரிந்திடும் திட்டம்

நாடு நலம் பெறும் திட்டம்"

என்று தானே முன் நின்று சமூக சீர்திருத்தங்களுக்கு தேவையான சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்று இருக்கிறேன். அதனை நல்ல முறையில் செயல்படுத்துவேன் என்று தெரிவிக்கும் போது படம் பார்ப்போர் நிம்மதி அடைகின்றனர். ஆபத் பாந்தவன் அனாத ரட்சகன் கிடைத்துவிட்டான் என்று நிம்மதிப் பெறு மூச்சு விடுகின்றனர். அவர் நீட்டிய படத்தில் வாக்களிக்கின்றனர். அவர் காட்டிய ஆளை வெற்றி பெறச் செய்கின்றனர்.

மக்கள் முடிவே மகேசனின் முடிவு

மக்களுக்குப் படத்தில் வரும் எம்ஜிஆர் உண்மையில் அரசியல் தலைவராகி தங்களுக்கு வேண்டிய அனைத்தும் நன்மைகளும் செய்ய மாட்டாரா என்ற ஏக்கம் உண்டாகிறது. அவர்கள் மனதில் அவர் ஒரு நிஜத் தலைவராகவே உருவாகி விடுகின்றார். இங்குதான் எம்ஜிஆரின் அரசியல் அஸ்திவாரம் போடப்படுகிறது. எம்ஜிஆர் தான் ஒரு அரசியல் தலைவராக வரவேண்டும் என்று படம் எடுக்கும்போது சிந்தித்துப் பார்க்கவில்லை. அவர் மனதில் அப்படி ஒரு எண்ணம் இல்லை என்றாலும் மக்கள் மனதில் இவரே நம்முடைய தலைவராக வந்தால் நமக்குப் பல நன்மைகள் கிடைக்கும் அல்லவா! இவர் ஒரு சிறந்த தலைவராக இருப்பார் என்ற எண்ணம் அழுத்தமாக பதிந்துவிட்டது. அன்றே மக்கள் முடிவு செய்துவிட்டனர். அவரை வெற்றி படிக்கட்டில் ஏற்றியதற்கு முக்கிய காரணம் அவர் சிறந்த தலைவர் அவரைப் பின்பற்றுவோம்; அவர் கரத்தை வலுப்படுத்துவோம் என்று மக்கள் 1958இல் முடிவெடுத்துவிட்டனர்.

எம்.ஜி.ஆர். உள்ளங்கையில் ஓடிய ராஜ ரேகை

பானுமதி எம்.ஜி.ஆரின் கைரேகையை பார்த்து உங்கள் கையில் ராஜ ரேகை ஓடுகிறது என்று சொன்னபோது கூட எம்ஜிஆர் தான் திரையுலகில் முடிசூடா மன்னனாக இருப்போம், என்றுதான் நினைத்தார். ஆனால் மக்கள் இப்படத்தைப் பார்த்துவிட்டு அவருக்கே

முடிசூட்டி மன்னனாகப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டனர்.

1967இல் அண்ணா முதலமைச்சர் ஆன போது அவரிடம் உங்கள் ஆட்சியில் என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு அதைத்தான் நாடோடி மன்னன் படத்தில் எம்ஜிஆர் சொல்லிவிட்டாரே வேற என்ன வேண்டும் என்று கேட்டார். ஆக அண்ணா செய்ய நினைத்ததை எல்லாம் எம்ஜிஆர் இப்படத்தில் தெரிவித்து விட்டார். இப்படத்தில் இப்பாட்டில் தெரிவித்த கருத்துக்களால் எம்ஜிஆரை ஒரு தலைவராக மக்கள் தங்கள் மனதில் மெல்ல மெல்ல உருமாற்றிக் கொண்டு உயர்த்திக் கொண்டே வந்தனர்.

காதலுக்கு மரியாதை

நாடோடி மன்னன் படத்தின் பிற்பகுதி வண்ணப்படமாக எடுக்கப்பட்ட போது அப்பகுதியில் இளம் நடிகையான சரோஜாதேவி ஒப்பந்தம் செய்யப்பட்டார். இளவரசி ரத்னா என்ற கதாபாத்திரத்தில் சரோஜாதேவி நடித்தார். ஜீவ ரத்னா என்ற பெயருடைய ஒரு பெண் எம்ஜிஆரை மிகவும் தீவிரமாக காதலித்து வந்தார். ஆனால் எம்ஜிஆரால் திரையுலகில் வளர்ந்து வரும் அக்காலகட்டத்தில் அந்தக் காதலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் அந்தக் காதலுக்கு கௌரவம் கொடுக்கும் வகையில் அவர் தன்னுடைய சொந்த படங்களின் நாயகியின் பெயரை ஜீவா என்றோ ரத்னா என்று அமைத்திருந்தார். இந்த நடைமுறை நாடோடி மன்னன் படத்தில் இருந்து தொடங்கியது.



கடலுக்கு அடியில் ஒரு கனவுப்பாடல்

எம்.ஜி.ஆரும் ரத்னாவும் பாடும் காதல் பாடல் ஒன்று கடலினடியில் நடப்பதாக கனவுக் காட்சியாக எடுக்கப்பட்டது. கடலின் அடியில் சங்கு, சிப்பி, மற்ற கடல் தாவரங்கள், அங்கிருந்து மேல் நோக்கிச் செல்லும் நீர்க்குமிழிகள் என்று பல ரசனையான விஷயங்கள் இப்பாடலில் இப்பாடல் காட்சியில் இடம் பெற்றிருந்தன. உவமைக்கவிஞர் சுரதா இயற்றிய

"கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே இன்ப காவிய கலையே ஓவியமே"

என்ற பாடல் இக்கனவுக்காட்சிக்குரிய பாடலாக எழுதி வாங்கப்பட்டது.

காதல் மலர்

கனவுக் காட்சிப் பாடலில் சுரதா அவர்கள் ஒரு புதுமையான உவமையைப் பயன்படுத்தியிருந்தார். பொதுவாகக் காதலுக்கு சூரியகாந்தி தாமரை மலர்

போன்றவற்றை உவமையாகக் கூறுவது வழக்கம். ஏனென்றால் இம்மலர்கள் சூரியனைப் பார்த்து மலரும் சூரியனைப் பார்த்தபடி மலர்ச்சியாகத் தோன்றும். ஆனால் உவமைக் கவிஞர் சுரதா

"சுடர் மின்னல் கண்டு தாழை மலர்வது போல

உனைக் கண்டு உள்ளமே மகிழ்ந்தேனே"

என்றொரு வரியை எழுதி இருந்தார். மின்னல் வெட்டினால் தாழம் பூ மலரும் என்ற தகவல் எல்லோருக்கும் புதுமையானதாக இருந்தது. சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தேன் என்று பாடாமல் மின்னலைக் கண்ட தாழம்பூ போல மலர்ந்தேன் என்று கதாநாயகி ரத்னா பாடியது புதுமையானதாக இருந்தது. இதனை ரசிகர்கள் மிகவும் ரசித்தனர்.

பாரதியின் தாசனான பாரதிதாசனின் தாசனாக விளங்கியவர் சுரதா. இவர் பாரதிதாசனின் இயற்பெயரான சுப்புரத்தினம் என்பதை முதல் பெயராகக் கொண்டு சுப்பு ரத்தின தாசன் எனத் தன் பெயரை மாற்றினார். பின்னர் அந்த நீளமான பெயரின் முதல் எழுத்துக்களை மட்டும் எடுத்துக் கொண்டு சுரதா எனச் சுருக்கி தன் புனைபெயர் ஆக்கிக் கொண்டார்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் "மலரினும் மெல்லிது காமம்" என்றார்; ஆனால் சுரதாவோ "மலரினும் மெல்லியது காதலே" என்று இப்பாட்டில் சுட்டி இருப்பார்.

“மானே மலரினும் மெல்லியது காதலே

மகிழ்வோம் நாமே புதுமை வாழ்விலே

மகிழ்வோம் நாமே புதுமை வாழ்விலே இன்பக்

காவியக் கலையே ஓவியமே”

என்ற பாடல் வரி காமம் அல்ல காதல் கூட மலரினும் மெல்லியது தான் என்று காதலுக்குச் சுவை கூட்டும் வண்ணம் சுரதாவின் வரிகளில் அமைந்து கேட்போருக்கு இன்பம் அளித்தன. மேலும்

“செழுங்கனி போல் சுவை தரும் மாமணி என்

பாடிடும் பூங்குயிலே இன்பக்

காவியக் கலையே ஓவியமே”

என்ற பாடல் வரி காதலுக்கு கனிச்சுவையும் மணியொலியும் குயிலோசையும் கூட்டி காதல் இன்பத்தைக் கேட்போருக்கு வழங்கியது.

நாடோடி மன்னன் படத்தின் பாடல்கள் ஏழை மக்களின் துன்ப வாழ்வுக்கான காரணங்களை எடுத்துக்கூறி அவற்றிற்கான தீர்வுகளைச் சுட்டிக்காட்டின. அவர்களுக்கான நம்பிக்கையை அளித்தன. அவர்கள் வாழ்வில் துன்பம் தீர்க்கும் தலைவராக எம்ஜிஆர் நாளை வரக்கூடும் என்ற நம்பிக்கையை நல்லெண்ணத்தையும் மக்களுக்கு வழங்கின. உழைப்பின் மகத்துவத்தையும் சோம்பலின் கேட்டையும் மக்களுக்கு விளக்கி கூறின. ஒவ்வொரு மனிதரும் அவன் ஆக இருந்தாலும் சாமானியனாக இருந்தாலும் அவரவர் கடமையை அவரவர் செய்து முடிக்க வேண்டும்;

கடமையில் தொய்வு காட்டினால் வாழ்க்கையில் முன்னேற்றம் கிடையாது என்பதை உறுதி செய்தன.

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாரக மந்திரங்களான கடமை கண்ணியம் கட்டுபாடு ஆகியவற்றைப் படம் முழுக்க பல காட்சிகள் விளக்கிக் கொண்டே வந்தன. கடமையை உணர்த்துதல் படத்தின் உயிர் மூச்சாக இருந்தது. எம்.ஜி.ஆர். கண்ணியம் என்பதன் அவசியத்தை வீராங்கன் மார்த்தாண்டனின் மனைவி மனோகரியிடம் பழகும் காட்சிகளில் சிறப்பாக எடுத்துரைத்திருந்தார். கட்டுப்பாடு என்பதற்கு இலக்கணமாக ரத்னாவும் வீராங்கனும் இரவில் தனித்து உறங்கும் காட்சி தெளிவாக அமைந்தது.

நாடோடி மன்னன் படத்தின் காட்சிகளும் பாட்டும் திமுகவின் கொள்கை பரப்பு இலக்கியமாகவே கலை படைப்பாகவே திகழ்ந்தன. எனினும் அவற்றின் பலன் திமுகவை அவர் வெளியேற்றப்பட்ட போது திமுகவில் இருந்து எம் ஜி ஆருக்கு போய்விட்டது. அவர் கட்சி ஆரம்பித்த பிறகு அவர் திரைப்படங்களின் நன்மை முழுக்க முழுக்க எம்ஜிஆர் பக்கம் சேர்ந்து விட்டது. இதனால் நாடோடி மன்னனில் போட்ட வித்து விருட்சமாகி அண்ணா திமுக தேர்தலில் நின்றபோது தொடர்ந்து வெற்றிக் கனிகளை வழங்கிக் கொண்டே இருந்தது. எம்ஜிஆரின் காலம் வரை அவருக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்துக்கொண்டிருந்தது.

“வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும் அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் உன்னைச் சேரும்”

என்று அவர் பின்னர் தேடிவந்த மாப்பிள்ளை படத்தில் அவர் தாயாரைப் பார்த்துப் பாடினாலும் அந்த வெற்றியை வாங்கித் தந்த பெருமை எல்லாம் அவரது ரசிகர்களையே சேர்ந்தது. இதனை ரசிகர்களும் உணர்ந்தே அக்காட்சியில் கைதட்டி ரசித்தனர். எம்ஜிஆரின் வெற்றிப் படிக்கட்டுகளை அமைத்துக் கொடுத்தார் படமாக நாடோடி மன்னன் அமைந்ததில் வியப்பொன்றுமில்லை என்று உறுதியாகக் கூறலாம்.



பின் இணைப்புகள்

❖ பாராட்டுரைகள்

மதுரைவீரன் மகாதேவி போன்ற வெற்றிப் படங்களுக்கு வசனம் எழுதிய கவியரசு கண்ணதாசன் நாடோடி மன்னன் படத்துக்கு வசனம் எழுதினார். பிற்காலத்தில் இவர் எம்.ஜி.ஆரை மிக மோசமாக விமர்சித்தபோதும், எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆனதும் கண்ணதாசனுக்கு செலுத்தும் நன்றிக் கடனாக அவருடைய தகுதிக்கு ஏற்ற கவுரவமாக கருதி அவரை அரசவை கவிஞர் ஆக்கினார். அப்போது கண்ணதாசன் நான் இறந்தால் எனக்கு அரசு மரியாதை கிடைக்கும் என்றார். கவிஞன் வாக்கு பொய்க்காது அல்லவா, எனவே அவர் நினைத்தபடியே அவர் அரசவைக் கவிஞராக இருக்கும்போதே நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட இடத்தில் உயிரிழந்தார். உடனே தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

எம்.ஜி.ஆரின் கடின உழைப்பு

கவிஞர் கண்ணதாசன் நாடோடி மன்னன் படம் வெளிவந்த பிறகு எம்.ஜி.ஆர். உடைய உழைப்பையும்

உயர்வையும் மதிப்பிட்டு ஒரு பாராட்டு கட்டுரை எழுதினார். அந்த கட்டுரையை அவர் தொடங்கும்போது ''ஒரு மனிதனுக்கு பல குணங்கள் இருப்பது உலக இயற்கை. அந்தக் குணங்கள் எதுவும் உறுதி இல்லாமல் இருப்பதும் சில மனிதர்களுக்கு இயற்கை. ஆனால் எண்ணிய எண்ணத்தை திண்ணமாக்கிக் கொண்டு எந்த காரியத்தையும் வெற்றியுடன் முடித்துவிடும் மனிதரை நான் கண்டேன். அந்த அதிசய மனிதரே நாடோடி மன்னன் தயாரிப்பாளர், நடிகர் டைரக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன்'' என்று எம்.ஜி.ஆரை புகழ்ந்திருந்தார். பின்பு அந்தக் கட்டுரையில் எம்.ஜி.ஆருடைய உழைப்பைப் பற்றி குறிப்பிடும்போது ''வாகினி ஸ்டூடியோவில் படப்பிடிப்பு கொட்டகைகளை வாங்கிக்கொண்டார். இரவில் நான்கு மணி நேர தூக்கம்தான் மற்ற நேரம் ஸ்டூடியோவிலேயே கழித்தார். சளைக்காமல் நடந்த படப்பிடிப்பு ஓர் அற்புதமான படத்தை தமிழகத்துக்கு உருவாக்கிக் கொடுத்தது. நான் எழுதிக்கொடுத்த கதை வேறு, பிறகு பார்த்த படம் வேறு இடையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்தில் படம் உருக்கொண்டது. கடிய சோதனைகளுக்கும் சளைக்காமல் படத்தை தயாரித்தார்'' என்கிறார்.

கண்ணதாசன் தனது கட்டுரையில் எம்.ஜி.ஆரின் எதிரிகளைப் பற்றி ஒரு குறிப்பு கொடுத்துள்ளார். அவரது புகழும் மக்கள் அவருக்கு அளிக்கும் மதிப்பிலும் பொறாமை கொண்டு பல கதைகள் பரவின, படம் வெளிவந்ததும் எம்.ஜி.ஆர். நாடோடி ஆகிவிடுவார் என்று பலர் கதறினர். வள்ளுவர் திருக்குறளின் வரிகளுக்கேற்ப அந்த நாய்களை அடிக்கக்கூட விரும்பாமல் தலை நிமிர்ந்து நடந்த எம்.ஜி.ஆர். என்றும் நாடாளும் மன்னனாக

விளங்குகிறார் என்றும் எம்.ஜி.ஆரை கண்ணதாசன் பாராட்டியிருந்தார்.

மக்களின் பேரன்பு

பின்னாளில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த ***பேராசிரியர் மு வரதராசனா****ர் நாடோடி மன்னன் பெற்ற பெரு வெற்றிக்கு காரணம் மக்கள் எம்.ஜி.ஆரிடம் கொண்டுள்ள பேரன்பு என்று பாராட்டு தெரிவித்திருந்தார். மு.வ., நாடோடி மன்னன் வெற்றிக்கு காரணம் மக்களின் அன்பு என்று தெரிவிக்க, வழக்கறிஞர் வி பி ராமன் அவர்களோ எம்.ஜி.ஆரின் உழைப்பே வெற்றிக்கு காரணமாகும் என்று பாராட்டினார்.*

மக்களாட்சியை நிறுவும் திட்டத்தில் நாடோடி மன்னன் படத்தின் மூலமாக புதுமை படைத்து விட்டார் என்று பாராட்டி இருந்தார் மூத்த ***டைரக்டர் கே சோமு****. மேலும் நடிப்பு டைரக்ஷன் தயாரிப்பு மூன்றிலும் எம்.ஜி.ஆர். சாதித்ததற்கு நாடோடி மன்னனே சாட்சியாகும் என்றார் .*

மூத்த பட தயாரிப்பாளர் திரு. ***நாகிரெட்டி*** *'நாடோடி மன்னன் படத்தைப் பார்த்துவிட்டு ''பார்க்க பார்க்க பரவசமூட்டும் திரை ஓவியம் நாடோடி மன்னன் பார்க்காதவர்கள் பார்க்கத் துடிக்கும் படம். பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்த்துக் களிக்கும் படம்'' என்று நாடோடி மன்னனின் சிறப்புகளை விளக்கி இருந்தார்.*

கவிஞர் திருமதி ***சௌந்தரா கைலாசம்*** *'விறுவிறுப்பான கதை, கண்கவர் காட்சி,*

மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள், திறமைமிகு டைரக்ஷன், சலியாத உழைப்பு இவ்வளவும் சேர்ந்ததே நாடோடி மன்னன்' என்று பாராட்டினார்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் பாராட்டு

நாடோடி மன்னன் படம் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காக இங்கிருந்து அனுப்பப்பட்டு லண்டன் திரையரங்கில் எட்டு வாரங்கள் திரையிடப்பட்டது. லண்டன் வாழ் தமிழ் மக்களும் அங்கு வாழும் இந்தியர்களும் நாடோடி மன்னன் படத்தைப் பார்க்க ஆவலாக திரையரங்குக்கு வந்தனர். இதனால் படம் நல்ல வசூலை பெற்றது. இப்பணம் லண்டன் தமிழ்சங்க வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழ் சங்கத்தார் நாவலர் நெடுஞ்செழியன் 1966இல் அங்கு சென்றிருந்த போது அவரிடம் ஒரு அன்பு பரிசை கொடுத்து எம்.ஜி.ஆரிடம் வழங்குமாறு வேண்டிக்கொண்டனர்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தார் கொடுத்தனுப்பிய அன்புப் பரிசு வெள்ளியாலான இரண்டு வீரர்களின் உருவச்சிலை ஆகும். இந்த இரண்டு வீரர்களும் எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொண்ட வீராங்கன், மார்த்தாண்டன் என்ற இருவேடங்களில் குறிப்பதாக அமைந்திருந்தன.அவை ஐரோப்பிய வீரர்களின் பாணியில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்த அன்புப் பரிசை இந்தியாவுக்குக் கொண்டு வந்த நாவலர் நெடுஞ்செழியன் சென்னையில் சுமார் லட்சம் பேர் கூடியிருந்த ஒரு விழாவில் எம்.ஜி.ஆரின் கரங்களில் மேடையில் வைத்து வழங்கினார்.

❖ ***பத்திரிக்கைகளின் பாராட்டு***

சுதேச மித்திரன்:

“நாடோடி மன்னன்” பிரம்மாண்டமான முயற்சி. காட்சி ஜோடனைகளில் பணத்தைத் தண்ணீராக நினைத்துச் செலவிட்டிருக்கிறார்கள். பணத்தை அநேகம் பேர் செலவழிக்கிறார்கள். ஆனால் செலவுக்குத் தக்க பலன் கிட்டுவதில்லை, “நாடோடி மன்னனில் செலவுக்குத் தகுந்த என்ன, சற்று அதிகப்படியான பலனே கிட்டியிருக்கிறது. கண்ணைக் கவரும் காட்சிகளைப் பார்க்கிறோம். கடைசியில் கன்னித்தீவு மலைச்சுனை வெள்ளத்தில் மூழ்கும் போது மேல் நாட்டுப் படங்களைப் பார்க்கும் பிரமை ஏற்படுகிறது.

இத்தகைய ஒரு பெரு முயற்சியில் ஸ்டுடியோ சொந்தக்காரர்தான் இறங்க முடியும் ஏ்னற நம்பிக்கை தமிழ்ப் படவுலகில் இருந்து வருகிறது. தனி முதலாளியும் பெருமுயற்சியில் ஈடுபடலாம், வெற்றியும் அடையலாம் என்று ***எம்.ஜி.ஆர். ‘நாடோடி மன்னன்’*** *மூலம் நிரூபித்திருக்கிறார். அந்தத் துணிவுக்கு அவரைப் பாராட்டுகிறோம். எந்த இடத்திலும் படம் சுவை குன்றவில்லை.*

சம்பவங்கள் நிரம்ப இருந்தாலும் கதையில் தெளிவு இருக்கிறது. வசனம் நன்றாக அமைந்திருக்கிறது.

டைரக்ஷனும், எடிட்டிங்கும் பிரமாதமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. கதையைச் சிறிதும் குழப்பமில்லாமல் திரையில் ஓட்டியிருக்கிறார் எம்.ஜி.ஆர். – ஒரு சிறந்த நடிகர், சிறந்த டைரக்டராகவும் இருக்க முடியும் என்பதை இப்படத்தில் பார்க்கிறோம்.

தினமணி:

அற்புதமான படப்பிடிப்பும் நல்ல படப்பிடிப்பும், பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளும், இனிய பாடல்களும் வண்ணக்காட்சிகளும் நிறைந்த சித்திரம் எம்.ஜி.ஆர் பிக்சர்ஸாரின் ‘‘நாடோடி மன்னன்’’. தனது முதல் டைரக்ஷ னின் வெற்றி குறித்து எம்.ஜி.ஆர். பெருமைப்படலாம்.

கதையில், மக்களாட்சியின் சிறப்பை முடி மன்னனே உணர்ந்து கொள்வதுபோன்ற படிப்பினை காணப்படுவது நல்ல திருப்பம், கற்புக்கும் பங்கம் ஏற்படாமல் கதை அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பது கதையின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது.

இரட்டை வேஷப் படப்பிடிப்பு அற்புதம். எம்.ஜி.ஆரின் இரட்டை வேடங்கள் கை குலுக்குவதும், கன்னத்தைத் தடவுவதும், ஒளிப்பதிவுத் திறமைக்கோர் எடுத்துக்காட்டு, தமிழ்நாட்டுத் திரைப்பட உலகில் இவ்வளவு

பயங்கரமான வாட்போர்க் காட்சிகளைக் கண்டதில்லை என்று பெருமையுடன் சொல்லலாம்.

தமிழ் நாடு:

“நாடோடி மன்னன்” படத்தைப் பார்க்கும் பொழுது, வீரதீரச் செயல்கள், கத்திச் சண்டைகள் முதலியவை நிறைந்த ஆங்கிலப் படத்தைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி எழுகிறது. படத்தின் பிற்பகுதியில் வரும் தண்ணீர்ப் பெருக்கைப்போல, பணத்தைப் பணமென்று பாராமல் அள்ளி வீசியிருக்கிறார் படத்தயாரிப்பாளர். இதுவரை நாம் தமிழ்த்திரை உலகில் கண்டிராத திடுக்கிடும் பயங்கரச் சண்டைகள், கண்கணைக் கவ்வும் காட்சியமைப்புகள் ஆகியவை இப்படத்தில் உள்ளன.

கதை முழுவதும் தொடக்கத்திலிருந்து விறுவிறுப்பாகச் செல்கிறது. . . . .

தண்ணீருக்குள் கனவுக் காட்சியில் சரோஜாதேவி, எம்.ஜி.ஆர் தோன்றும் கட்டம் பல தடவை பார்த்து ரசிக்கத்தக்கது. இதைப் போல உச்சநிலைக்கட்டத்தில் தொங்கு பாலத்தின் மீது சரோஜாதேவியும், எம்.ஜி.ஆரும் சிக்கிக்கொள்ளும் காட்சியும் வியக்கத்தக்கது, ஒளிப்பதிவாளர் ஜி.கே. ராமு பாராட்டத் தகுதியுடையவர்.

காட்சியமைப்புக்களைக் காணும்போது இது தமிழ்ப்படம்தானா என்ற ஐயம் எழுகிறது. மலைகளும், பள்ளத்தாக்குகளும், நீர்வீழ்ச்சிகளும். குகைகளும், தொங்கு பாலமும் ஆங்கிலப் படங்களை நினைவுபடுத்துகின்றன.

நவ இந்தியா:

நீதிதேவன் : எம்.ஜி.ஆருக்கு வைரம் பதித்த வாளைப் பரிசாகத் தருகிறேன்.

தினமலர்:

இப்படம் தமிழ்ப்பட உலகில் ஓர் மகத்தான சாதனை; இமாலய வெற்றி – ஆங்கிலப் படங்களை மிஞ்சும் வகையில் கண்ணைக் கவரும் காட்சிகள் தத்ரூபமாகப் படமெடுக்கப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு மற்றும் கலை நுணுக்கங்கள் மிகவும் உயர்தரமாக அமைந்துள்ளன. கன்னித்தீவுக்காட்சிகள் கேவா கலரில் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. இவற்றுடன் சுவாரஸ்யமான' விறுவிறுப்பான கதை, எம்.ஜி.ஆரின் இரட்டை வேடம், சிறந்த நடிப்பு, சந்திரபாபுவின் நகைச்சுவை விருந்து, இனிமையும், கருத்துச்செறிவும் நிறைந்த பாட்டுகள், கண்ணதாசனின் உயரிய வசனங்கள், "கடலுக்கடியில் கனவு"க் காட்சி, பயங்கர கத்திச் சண்டைகள், எம்.ஜி.ஆரின் சிறந்த டைரக்ஷன் இவை சேர்ந்து இப்படத்தைத் தமிழ்ப்பட உலகில் ஒரு அதிசயமான படைப்பாக உருவாக்கியுள்ளன.

கல்கி:

இந்தப் படம் எம்.ஜி.ஆரால் தயாரிக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். டைரக்ஷனில் உருவான வெற்றிப் படம் . .

மார்த்தாண்டன், வீராங்கன் என்னும் இருவேறு இயல்புகள் கொண்ட இரண்டு பாத்திரங்களையும் எம்.ஜி.ராமச்சந்திரன் ஏற்று மிகத்திறமையாக நடிக்கிறார்.

படத்தில் வரும் நடனக் காட்சிகள் மிகக் கவர்ச்சியாய் இருக்கின்றன.

ஒரு நடிகர் படாதிபதியாக மாறிப் படம் தயாரிப்பதென்றால், அதில் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன. போதாக்குறைக்குப் படத்தில் இரண்டு வேடம் தாங்கும் சிரமத்தையும் எம்.ஜி.ராமச்சந்திரன் ஏற்றிருக்கிறார். இதுவும் போதாக்குறைக்குப் படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்று மிகவும் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். அதற்காக அவரை எவ்வளவு வேண்டுமானாலும் புகழ்ந்து போற்றிப் பாராட்டலாம்.

தமிழ் நேசன் (கோலாலம்பூர்)

காட்சி ஜோடனைகளும், படப்பிடிப்பும் பிரமாதம். நீண்ட நாட்களாக நல்ல தமிழ்ப் படத்தை எதிர்பார்த்து வந்த மலாயா ரசிகர்களுக்கு எம்.ஜி.ஆரின் நாடோடி மன்னன் கண்ணுக்கும் கருத்துக்கும் நல் விருந்தாகும்.

தமிழ் முரசு (சிங்கப்பூர்):

காமிரா பல கோணங்களில் கையாளப்பட்டிருக்கிறது. உதராணமாக எம்.ஜி.ஆர். மன்னனாகவும், நாடோடியாகவும் தோன்றி கைலாகு கொடுக்கும் காட்சி படமாக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

கதை பழைய ராஜா ராணி கதைதான், எனினும் சீர்திருத்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

கத்திச்சண்டைகள். நடனங்கள், பாட்டுகள் முதலியன ஜனரஞ்சகமான அம்சங்கள். பார்த்து மகிழவேண்டிய படம். ஆதலால் பார்த்தவரெல்லாம் பாராட்டுகின்றனர்.

கலை மலர் (சிங்கப்பூர்) :

வசனம் அர்த்தச்சுவை மிகுந்து காணப்படுகிறது. பாடல்களை இயற்றியவர்களும் பின்னணி பாடியவர்களும் கட்டத்திற்கேற்றவாறு மிக நன்றாகத் தம் கடமையைச் செய்திருக்கின்றனர். படப்பிடிப்பு, டைரக்ஷன், வர்ணக் காட்சிகள் இவை குறைகூற இடமின்றி அமைந்துள்ளன. நடிப்பைப் பற்றிக்கூறும்போது எம்.ஜி.ஆர். நாடோடி வேடத்தில் வெகு சிறப்பாக நடித்திருக்கிறார்.

தமிழ் நடிகன் :

“நாடோடி மன்னன்” திரைப்படம் கலைஞர் திரு.எம்.ஜி.ஆர். அவர்களின் உள்ளத்து ஒளியின் பிரதிபலிப்பு. அவரது அனுபவ ஆற்றலின் முத்திரை; எல்லை கடந்த அன்புப் பெருக்கின் புனிதமான வடிகால்.

“நாடோடி மன்னன்” செய்துள்ள புரட்சிகள் பலர் முடியாட்சியை உடைத்துக் குடியாட்சியை ஏற்படுத்திய புரட்சி: ‘தனக்கொரு கொள்கையுண்டு’ என்பதைத் தான் எடுத்த படத்திலே முன்னேற்றக்கொடி காட்டி வெளிப்படுத்திய புரட்சி; கலையுலகிற்கே ஒரு புதிய சாதனையாகப் பல துறைகளிலும் வெற்றி கண்ட புரட்சி. . . . இன்னும் பலப்பல.

பேசும்படம்

1958

வருஷத்திய சிறந்த படத்திற்கான

பாராட்டுப் பத்திரம்

1958 வருஷத்தில் வெளியிடப்பட்ட தென்னிந்திய தமிழ் சினிமாப் படங்களில் எம்ஜியார் பிக்சர்ஸ் தயாரித்த

நாடோடி மன்னன்

சிறந்தது எனத்தேர்ந்தெடுத்து இந்தப் பாராட்டுப் பத்திரத்தை மகிழ்ச்சியுடன் அளிக்கிறோம்.

சென்னை
1-4-59

"பேசும் படம்"
ஆசிரியர் குழுவினர்

பேசும் படம் :

குழப்பமில்லாத தெளிவான கதைப்போக்கும், கட்டுக்கோப்பான சம்பவங்களும், கருத்துடன் அமைந்த வசனமும் பாடல்களும் இப்படத்தில் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் ஏக காலத்தில் தோன்றும் கட்டங்களும் வண்ணக் காட்சிகளும் நல்ல கோணங்களில் மிக அழகாக ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு வேடங்களைத் தாங்கித் திறமையாக நடித்து, படத்தைச்சிறப்பாக டைரக்ட் செய்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.

நடிகன் குரல்:

நமது எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த எடுப்பிலேயே ‘டைரக்டர்’ என்ற பதவியின் முழுத்தகுதியையும் பெற்று, முறையாகப் பொறுமையோடு, முயற்சியோடு தமது முதற்படத்திலேயே வெற்றியின் சிகரத்தைக் கண்டு வீர வாகை சூடியுள்ளார்.

அவரை, நடிகர் என்று போற்றினோம், நற்பணியாளர் என்பதை நாடே அறியும். நல்ல படாதிபதி என்பதை அவருடன் உழைக்கும் பண்பாளர்களின் நல்வாழ்வு நமக்குப் பறைசாற்றும். ஆனால் நம்மிலே ஒரு டைரக்டர், நாடறிந்த ஒரு டைரக்டர்! நாளை பல நல்ல படங்களை எடுக்கப்போகும் டைரக்டர்! இதோ ஒரு டைரக்டர் என்று நாளை உலகம் சுட்டிக் காட்ட வேண்டிய டைரக்டர் வந்துவிட்டார். அவரது படங்கள் உலக முதற்பரிசைப்பெற்று நம் நாட்டுக்குப் பெருமை தேடித்தரட்டும்.

வாழ்க டைரக்டர் எம்.ஜி.ஆர்.!

The Mall:

The Swash-bucking hero of the Tamil screen. M.G. Ramachandran, turns a director in 'Emgeeyar Pictures' "Nadodi Mannan".

He also does the dual role of a prince and his subject, in a story full of adventure and romance.

. . . . . In more than one sense, therefore is the film entirely M.G.R.'s; it is his own production too.

G.K. Ramu's camerawork deserve, special mention, especially for the eye – filling location shots taken in Munnar and other parts of Kerala.

Sport & Pastime:

M.G.R.'s triumph consists in the breath-taking speed which he achieves and which leaves no time for the audience to think or to doubt. It must be said to his credit that there is not a dull moment in all the nearly four hours of the film.

Its photography is a remarkable piece of work and cameraman Ramu's skill is seen in the dream scene which undoubtedly is a highlight of the picture.

The sword fight between M.G.R. and Nambiar on the seashore and in water is another feature of which the director can legitimately be proud. The flood

scene towards the end has been conceived and executed on a grand scale and it is yet another feather in M.G.R.'s cap.

Sunday Times:

The screening of "Nadodi Mannan" is a great achievement of Producer – Director M.G.Ramachandran. The film trilogy is monolithic; its actions develop logically and organically. The cast is very well selected and the landscapes to which the film goers are carried by cameraman Ramu are magnificent.

Very well done, M.G.R. Congrats!

The Hindu :

A tale of romance and adventure told with a guato that compels attention for much, if not the entirely, of the long narrative, A delightful performance from M.G.Ramachandran in the dual role of a prince of pleasant manners and a rebel, (a man of the people whose head is full of ideas for their uplift.)

Effective use of the camera particularly in certain outdoor scenes and in an attractive massed dance sequence which is full of fast movement; a fair sprinkling of luxuriant sets. Music which is pleasant on the ear and talk which is generally easy-flowing.

Colour enhances the pictorial value of several sequences. Mr.M.G.Ramanchandran, directing the film, has done a worthwhile job.

The Indian Express :

M.G.R. as a director has scored and of course made good use of the talents of the new find, Saroja Devi.

The palace plot and the stirring events that figure in this film, that opens with an invocation to Tamil and calls for a return to antique virtue.

There is comedy from Chandrababu and heroics from M.G.Ramachandran as usual an arresting figure on the screen.

The features of a box office hit are all found in the new Tamil film that marks the advent of M.G.R. as a producer on his own.

ஆசிரியர் அவர்களின் நூல் வரிசைகள்

